

# பெண்ணியம்

முனைவர் இரா. பிரேமா

யாதும் ஊரே யாவரும் கேளிர்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# பெண்ணியம்

**முனைவர் இரா. பிரேமா**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்
கொடைக்கானல்

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
International Institute of Tamil Studies
**டி.டி.டி.ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை-600113.**

கலா நிலையம் டி. என். சேஷாசலம்
அறக்கட்டளைச் சொற்பொழிவு-4
(16, 17-8-93)

Kalanilayam T. N. Seshachalam Endowment Lecture No. 4
Endowment Publication No. 52

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Peṇṇiyam |
| Author | : | Dr. R. PREMA<br>Asst. Professor, Dept. of Tamil, Mother Therasa Women's University, Kodai |
| Publisher & Copy right | : | International Institute of Tamil Studies, CIT Campus, Taramani, Madras-600 113, |
| Publication No. | : | 190 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | October 1994 |
| Edition | : | First |
| Paper Used | : | Tamil Nadu Greamove (m) 16kg |
| Size | : | 21 × 14 cms |
| Printing types | : | 10 point |
| No. of Copies | : | 1200 |
| No. of Pages | : | X + 122 |
| Price | : | Rs. 25/- |
| Printers | : | Pavai Printers Pvt. Ltd. Madras-14, Phone: 832441 |
| Artist | : | Sathya |
| Subject | : | An Introduction to Feminism |


* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

இலக்கிய இதழ்வழித் தமிழ் வளர்த்த பெருந்தகை வழக்கறிஞர் டி. என். சேஷாசலம் அவர்களின் நினைவுப் போற்றுதலாக நிறுவனத்தில் உருவாக்கப்பட்ட '**கலா நிலையம் டி. என். சேஷாசலம் அறக்கட்டளையின்**' நான்காவது சொற்பொழிவு இந்நூல்.

பெண்ணியச் சிந்தனைகளும் ஆய்வுகளும் பரவலாகப் பேசப்பட்டுவரும் இந்நாளில் அதற்கெனத் தன் பங்களிப்பை நிறுவனம் அளிக்க விழைந்தது. பெண்ணியம் பற்றிய விளக்கங்களை, கருத்துகளை முதற்கண் தமிழில் கொணர்தலும், தெளிவுபடுத்தலும் தேவை என்ற நோக்கில், பெண்ணியத்திற்கு ஓர் அறிமுகம் என்ற நிலையில் இந்நூல் அமைந்துள்ளது. நிறுவனத்தின் அழைப்பை ஏற்று, இப்பணியைத் திறம்பட நிறைவேற்றித் தந்துள்ள நூலாசிரியர் முனைவர் **இரா. பிரேமா** அவர்கட்கு நிறுவனம் நன்றி தெரிவிக்கின்றது.

பெண்ணியம் தொடர்பாக, சூன் 1993இல் 'எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம்' எனும் தலைப்பில் **டாக்டர் மு. வ. அறக்கட்டளைச்** சொற்பொழிவு வெளியீடாக மற்றொரு நூலையும் நிறுவனம் வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளை நிறுவிய சான்றோர், கலாநிலையம் டி. என். சேஷாசலம் அவர்களின் புதல்வர் **திரு. பரணீதரன் (மெரீனா)** அவர்கள், சொற்பொழிவிற்கும் நூலாக்கத்திற்கும் களமமைத்த இயக்குநர் (பொறுப்பு) **முனைவர் அன்னிதாமசு** அவர்கள்; மெய்ப்பு திருத்தியும், சொல்லகராதி தயாரித்தும் உதவிய ஆய்வாளர் திரு பு. பாலாஜி, செவ்வையாக அச்சிட்டளித்துள்ள பாவை பிரிண்டர்ஸ் ஆகிய அனைவருக்கும் எங்கள் நன்றி.

சென்னை—113
12-10-94

**ச. சிவகாமி**
அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## ஆசிரியர் அறிமுகம்



# முனைவர் இரா. பிரேமா

மதுரை, டோக் பெருமாட்டிக் கல்லூரியிலும், சேலம், சாரதா கல்லூரியிலும் பணிபுரிந்த இவர் தற்போது அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார்.

'கம்பராமாயணக் கிளைக்கதைகள் ஒப்பீடு - கம்பன், வான்மீகி, துளசிதாசர்' எனும் இவரது முனைவர் பட்ட ஆய்வேடு மதுரைப் பல்கலைக்கழகத்தால் (1989) வெளியிடப்பட்டுள்ளது; 'இரட்டைக் காப்பியக் கிளைக்கதைகளும் துணைக்கதைகளும்', 'தமிழ் இலக்கியக் கோட்பாடுகள்' எனும் இரு நூல்களின் இணையாசிரியராவார். 'காலந் தோறும் கற்பு' எனும் திட்டப்பணி நிறைவடைந்து மகளிர் பல்கலைக்கழகத்தின் அச்சிற்கு அணியமாக உள்ளது.

கம்பன், தற்காலப் படைப்புகள், பெண்ணியம் இவற்றில் மிகுந்த ஈடுபாடுடைய ஆசிரியர், ஐம்பதிற்கு மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்துள்ளார்.

இவர் மதுரைப் பல்கலைக்கழகத்தின் சிறந்த மாணவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு (Meritorious Student) ஜவஹர்லால் நேரு புத்தக விருதினைப் பெற்றவர். தமிழகப் புலவர் குழுவின் 1983 ஆம் ஆண்டிற்கான சிறந்த கட்டுரை விருதினையும் பெற்றவர்.

# முன்னுரை

'பெண்ணியம்' என்பது சமூக அக்கறையின் வெளிப்பாடு; சமூகத்தின் சரிபாதியான பெண் இனத்தின் இருத்தலைப் பேசுவது; ஆணாதிக்கப் பிடியிலிருக்கும் நிகழ்வாழ்வின் இயல்பினை விண்டுரைப்பது;மகளிரின் பிரச்சினைகளைக் கண்டறிந்து தீர்க்க முயல்வது; மரபு என்ற சமூக மதிப்பீட்டைக் கேள்விக்குள்ளாக்குவது - இப்படி, பெண்ணியத்தை விமரிசித்துக் கொண்டே செல்ல இயலும் என்றாலும் எது பெண்ணியம்? என்பதற்குக் கோட்பாட்டு நிலையிலான விளக்கத்தை அறிவதும் புரிந்து கொள்வதும் இன்றியமையாததாகும். தமிழில், பெண்ணியத்தை வரலாறு, இயககம் மற்றும் கோட்பாடு அடிப்படையில் விளக்குவதாக இந்நூல் அமைந்துள்ளது.

'பெண்ணியம்' என்றாலே 'ஆண்களை எதிர்ப்பது' என்ற எண்ணம் சமூகத்தில் பரவலாக நிலவி வருகிறது. உண்மையில், பெண்ணியத்தின் நோக்கம் அது அன்று. காலம் காலமாக அடிமைப்பட்டு, வதைப்பட்டு வாழும் பெண்களை அடிமைத் தளையிலிருந்து மீட்டு, இவர்களுக்கும் கல்வியின் மூலம் விழிப்புணர்வு ஊட்டி, சமூகத்தில் ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத் தருவதே, பெண்ணியத்தின் நோக்கமும் செயற்பாடும் ஆகும். இந்த இலக்கை அடைய ஆண்கள் தடையாகும் போது மட்டுமே அவர்கள் எதிரிகளாகின்றனர்.

பெண்ணியத்தை மிசச் சரியாக புரிந்து கொள்வது தேவை. பெண்களின் பிரச்சினையை ஒரு பெண்ணாக நின்று, பெண் சண் கொண்டு பார்ப்பதால் மட்டுமே 'புரிதல்' நிலையில் இடர்ப்பாடின்றிச் செல்ல இயலும். தங்களை ஆண்களின் ஆளுகைக்கு உட்பட்டவர்களாகக் கருதும் மரபுத்தளையிலிருந்து விலகி வந்தால் மட்டுமே பெண்ணியத்தைப் பெண்களாலும் சரிவர புரிந்துகொள்ள இயலும். காலம், காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட பெண்ணினம் வீறு கொண்டு எழுந்த பொழுது இதன் வேகமும் கோபமும் வேட்கையும் வெடித்துச் சிதறியுள்ளன. அந்த வீரியத்தை உள்ளது உள்ளபடியே உணரும் மனமுதிர்ச்சி வாசகர்களுக்குத் தேவை.

இன்று, தமிழ் ஆய்வாளரிடையே பெண்ணியச் சிந்தனை பரவலாகக் கால்கொள்ளத் தொடங்கியுள்ளது. பெண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டு கட்டுரைகள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் சில பெண்ணியத்தை இலக்கியத்தோடு இணைத்துப் பார்ப்பன. அவற்றிலிருந்து 'பெண்ணியம்' என்றால் என்ன? என்ற அடிப்படையைப் புரிந்து கொள்ள இயலாது. சில கட்டுரைகள், பெண்ணியம் பற்றிய ஆங்கில நூல்களின் ஒரு சில பகுதிகளை அப்படியே மொழிபெயர்த்துத் தருகின்றன. அவை பெண்ணியம் பற்றிப் புதிதாக அறிய விரும்புவருக்கு உதவாது. மற்றும் சில கட்டுரைகள் பெண்ணியக் கோட்பாடுகளைச் சரிவர புரிந்து கொள்ளாமல் எழுதப்பட்டுள்ளன. இவ்வாறான கட்டுரைகள் பெண்ணியத்தைப்பற்றிய தவறான கருத்துக்களை விதைத்து விடக் கூடும்.

இன்று, பெண்ணியம்பற்றி முழுவதுமாக அறிய துணை நிற்பன ஆங்கில நூல்களே. அன்னை தெரசா மகளிா பல்கலைக் கழகத்தில் கிடைக்கும் அளவிற்குப் பெண்ணிய நூல்கள் பிற பல்கலைக்கழகங்களிலோ, நூலகங்களிலோ கிடைப்பது அரிது. எனவே, ஆய்வாளர்கள் ஒரு சேர அந்நூல்களைப் பெற்றுப் படிப்பதும் அரிது. இதைக் கருத்தில் கொண்டே, மாணாக்கருக்கும், ஆய்வாளருக்கும் உதவும் பொருட்டு, இந்நூல் 'பெண்ணியம்' பற்றிய முழுபார்வையைத் தரும் அறிமுக விளக்கக் கையேடாக உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது; இந்நூல் பெண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டு, நூல் மற்றும் ஆய்வேடு எழுதுபவர்களுக்கும், சில ஆய்வுக் கட்டுரைகள் எழுதுபவருக்கும் அடிப்படையைப் புரிந்து கொள்ள துணை நிற்கும்.

இந்த நூலில் ஒரு சில கருத்துகள் கூறியது கூறலாகத் தோன்றலாம். ஆனால், கூர்ந்து நோக்கின், அந்தந்த தலைப்பின் கீழ்அந்தந்த செய்திகள் பேசப்பட வேண்டும் என்ற நோக்கம் தெளிவுபடும்.

இந்நூல், ஒரு வகையான மொழிபெயர்ப்பு நூல் என்றே சொல்ல வேண்டும். பலஆங்கில நூல்களின் கருத்துக்கள் தமிழ்ப் படுத்தப்பட்டு, தேவைக்கேற்ப இணைத்து தொகுக்கப்பட்டுள்ளது. இந்நூல் உருவாகத் துணை நின்ற ஆதார நூற் பட்டியல் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளது.

'பெண்ணியம்' என்ற இந்நூல் எழுத மற்றும் வெளிவரப் பெரிதும் துணைநின்ற உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கும்,

அந்நிறுவனத்தின் இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னி தாமசு அவர்களுக்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் ச. சிவகாமி அவர்களுக்கும், கலாநிலையம் டி. என். சேஷாசலம் அறக்கட்டளை நிறுவிய அவர் குடும்பத்தினர்க்கும் என் நன்றி எப்பொழுதும் உரித்தாகுக.

'பெண்ணியம்' பற்றி அறிய துணை நின்றதுடன், இத்துறையில் யான் பெரிதும் ஈடுபாடு கொள்ள தம் எழுத்தாலும், பேச்சாலும் ஊக்கமூட்டி, துணைநின்ற அ.தெ.ம. பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தேவதத்தா அவர்களுக்கும் நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

குறுகிய காலத்தில் இந்நூலை எழுதி முடிக்க நூல்களை உடனுக்குடன் தந்து உதவிய அ.தெ.ம. பல்கலைக் கழக நூலக சகோதரிகளுக்கு என் அன்பைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் உருவாகத் தோன்றாத் துணையாக, பக்கபலமாக நின்ற என் இனிய துணைவரின் தோழமையை இங்கு நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

இரா. பிரேமா

# நூலறிமுகம்

எது பெண்ணியம்? என்ற வினாவிற்கு விரிவான விளக்கமாக அமைந்த இந்நூல், வரலாறு, தத்துவம், கோட்பாடு, இயக்கம், செயற்பாடு எனப் பல கோணங்களில் பெண்ணியத்தை விளக்கி யுள்ளது. உலகளவில் பெண்ணியத்தின் தோற்றம், வளர்ச்சி, நிலைமாற்றம் இவற்றைப் பேசும் இந்நூலில், பெண்ணியம் பற்றிய அடிப்படை அறிவு பெறுவதற்குத் தேவையான அனைத்துச் செய்திகளும் எளிதாகப் புரிந்துகொள்ளும் வண்ணம் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. மேற்கொண்டு, தமிழில் பெண் ணியம் பற்றி எழுதுவதற்கும் ஆராய்வதற்கும் இந்நூல் ஒரு வழிகாட்டியாக அமையும் விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

'பெண்ணியம் – சொற்பொருள் விளக்கம்' என்ற முதல் இயலில் 'Feminism' என்ற ஆங்கிலச் சொல்லின் தோற்றம், அச்சொல் உணர்த்தும் பல்வேறு பொருண்மைகள், அவற்றிற் கிடையே காணப்படும் அடிப்படை இயைபு போன்றவை உணர்த்தப்பட்டுள்ளன. பெண்ணியவாதி யார்? என்ற வினா விற்கும் விளக்கம் தரப்பட்டுள்ளது.

அடுத்த இயலில் உலகளவில் மிகப் பெரிய பண்பாட்டுப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள பெண்ணியத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பெண்ணியத்தின் மைல் கற்களாகக் கருதப்படும் நிகழ்ச்சிகளும், பெண்ணியம் பத்திரிகைகளும் பெண்ணியத்தின் எதிர்காலம் பற்றிய செய்தி களும் விளக்கம் பெற்றுள்ளன.

'பெண்ணியத்தின் வகைகள்' என்ற இயலில் பெண்ணி யத்தை வளர்த்த/வளர்த்துவரும் மூன்று முதன்மை இயக்கங்கள் மற்றும், அவற்றின் கொள்கைகள் செயற்பாடுகள் பற்றியும் சொல்லப்பட்டுள்ளன.

'பெண்ணியக் கோட்பாட்டாளர்கள்' என்ற இயல் பெண் ணியக் கோட்பாடுகளைத் தங்கள் நூல்களின் மூலம் வரையறுத்த மிகச்சிறந்த ஐவரை அவர்தம் சிந்தனைகளுடன் அறிமுகம் செய்கிறது.

பெண்ணியத்தை மிகச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் அதை வெற்றிகரமாகக் கைக்கொள்வதற்கும் துணை செய்யும் நான்கு நூல்களை அறிமுகம் செய்வதாக 'பெண்ணிய நூல்கள்' என்ற தனிப் பகுதி அடுத்து அமைந்துள்ளது.

பெண்களால், பெண்களை மையப்படுத்தி இயங்கிவரும் 'மகளிரியல் கல்வி' (Women's Studies) என்ற கல்வித் துறையின் தோற்றம், அதன் நோக்கம் என்பனவும், இன்று உலக நாடுகளில், குறிப்பாக இந்தியாவில் இக்கல்வியின் நிலை என்ன என்பது பற்றியும் 'மகளிரியல்' என்ற இயல் பேசுகிறது.

'பெண்ணிய இலக்கியத் திறனாய்வு' என்ற இயல், புதிய திறனாய்வு முறையான 'பெண்ணியத் திறனாய்வை' விளக்குவதுடன், அதை மிகச் சரியாகப் புரிந்து கொள்ளவும், அதன் வழி இலக்கிய ஆய்வை மேற்கொள்வதுபற்றியும் பேசுகிறது.

இறுதி இயலான 'இந்திய பெண்ணிய வரலாறு' என்பது இந்தியாவில் 'பெண்ணியம்' தோற்றம் பெற்ற வரலாற்றைப் பேசுகிறது. இத்தலைப்பு விரிவாகத் தொகுக்கப்பட வேண்டிய ஒன்று. இந்திய மொழிகளில் இதுவரை இம்முயற்சி விரைவாக மேற்கொள்ளப்படவில்லை. தமிழில் இம்முயற்சி மேற்கொள்ளப் பட வேண்டும் என்ற நோக்கில் இவ்வியல் எழுதப்பட்டுள்ளது.

மொத்தத்தில், படிப்பவரிடையே பெண்ணியச் சிந்தனையைத் தூண்டி விழிப்புணர்வை ஊட்டி, அவர்கள் மனதில் பெண் சமூகத்தின் பிரச்சனைகளை நிலை நிறுத்தி, இப் பிரச்சினையின் ஆழத்தையும் தீவிரத்தையும் எடுத்துரைக்கும் முயற்சியே இந் நூலாகும்.

# உள்ளே


| | | பக்கம் |
|---|---|---|
| பெண்ணியம்—சொற்பொருள் விளக்கம் | ... | 1 |
| பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (மேலை நாட்டுப் பெண்ணியம்) | ... | 5 |
| பெண்ணிய வகைகள் | ... | 37 |
| பெண்ணியக் கோட்பாட்டாளர்கள் | ... | 60 |
| பெண்ணிய நூல்கள் | ... | 69 |
| மகளிரியல் கல்வி | ... | 76 |
| பெண்ணிய இலக்கியத் திறனாய்வு | ... | 86 |
| இந்திய பெண்ணிய வரலாறு | ... | 97 |
| பெண்ணியத் துறைச் சொற்கள் | ... | 116 |
| துணை நூற்பட்டியல் | ... | 117 |
| சிறப்புச் சொல்லகராதி | ... | 119 |

# பெண்ணியம் - சொற்பொருள் விளக்கம்

'பெண்ணியம்' என்பது உலகளாவியது. இஃது, உலகில் உள்ள அனைத்து மனிதகுலத்துள்ளும், ஒவ்வொரு காலக் கட்டத்திலும் பெண்களின் முன்னேற்றத்தை விமர்சிக்க ஏற் பட்டது. குறிப்பாக, பெண்களின் சமத்துவத்தையும் முன்னேற் றத்தையும் வலியுறுத்துவதாகும்.

'Feminism' என்ற ஆங்கிலச் சொல் 'Femina' என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். Femina - என்ற சொல்லுக்குப் 'பெண்ணின் குணாதிசயங்களைக் கொண்டுள்ள' (having the qualities of Female) என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்களின் பாலியல் குணாதிசயங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே, பெண்களின் உரிமை களைப் பேசுவதற்காக எடுத்தாளப்பட்டது.

*1889* வரை 'Womanism' என்ற சொல் பெண்களின் உரிமைப் பிரச்சினையையும் அதனடிப்படையிலான போராட்டத் தையும், உணர்த்தப் பயன்படுத்தப்பட்டது. 1890ஆம் வருடம் 'Womanism' என்ற சொல்லினிடத்தை 'Feminism' என்ற சொல் பெற்றது. 1894-ஆம் ஆண்டு வெளிவந்த ஆக்ஸ்போர்ட் ஆங்கில அகராதியில் முதன் முதலில் இச்சொல் எடுத்தாளப் பட்டது. 'Feminism' என்ற சொல்லுக்குத் தன் வாழ்வின் மூலம் அர்த்தம் ஏற்படுத்திக் கொடுத்தவர் 'ரே ஸ்ரேசே' (Ray Strachey) என்ற பெண்மணி ஆவார்.*

---

* ரே ஸ்ரேசே என்பவர் தீவிரப் பெண்ணிய செயற் பாட்டாளர் ஆவார். இவர் 1860 முதல் 1920 வரையி லான 60 ஆண்டுகளில் பெண்களின் உரிமைக்காகப் போராடியவர். இவரின் வாழ்க்கையை வைத்தே,

பெண்ணியம் என்பதற்குப் பல விளக்கங்கள் தரப்பட்டு வருகின்றன. அவ்விளக்கங்களுக்கிடையே வேறுபாடுகள் இருந்தாலும், அடிப்படையில் அவை பெண்ணியம் என்பதற்கு, 'பாலியல் சமத்துவம்' (Sexual Equality) என்ற பொருளைத் தந்து நிற்கின்றன. பரந்த அளவில் 'பெண்ணியம்' என்ற சொல் 'பெண் எந்த ஆணுக்கும் நிகரானவளே! எந்த நிலையிலும் எந்தக் காலத்திலும், அவள் அடக்கி வைக்கப்படக் கூடாது, தனிமைப்படுத்தி வைக்கப்படக் கூடாது/சார்பு நிலைப் படுத்தக் கூடாது' என்று பொருள் படுகிறது.

பெண்ணியம் என்பதைத் 'தத்துவம்' என்ற நிலையிலும்' 'இயக்கம்' என்ற நிலையிலும், கோட்பாடு' என்ற நிலையிலும் தனித்தனியாக விளங்கிக் கொண்டோமேயானால், பெண்ணியம் என்பதன் முழு வளர்ச்சியையும் அறிந்து கொள்ள இயலும்.

பெண்ணியம் என்ற தத்துவமானது, 'ஆண் மேலாதிக்கத்தில் வழி வழியாய் வந்த பண்பாட்டின் அடிப்படையில், பெண்கள் தனித்துவம் பெறாமல் வாழ்ந்து கொண்டிருப்பதையும், ஆண்களின் பாலியல் தேவைக்குப் பயன்படு பொருளாகத் தள்ளப்பட்ட விதத்தையும், ஆண்களைச் சார்ந்து, அவர்களின் நலன் பேணுவதையே வாழ்வாகக் கொண்டுள்ள நிலையையும் எடுத்துரைக்கின்றது.

பெண்ணியம் என்ற இயக்கமானது, பெண்கள் தாமாக முடிவெடுத்து, அவர்களின் விருப்பப்படி வாழ்க்கையை நடத்திச் செல்லும் ஒரு சமூகத்தை உருவாக்குவதாகும். இஃது, பெண்களிடையே பலமாற்றங்களை ஏற்படுத்தி, அவர்களின் மேற்கூறிய இலக்கை அடைவிக்க உதவும் புரட்சிகரமான செயற்பாடு உடையதாகும்.

பெண்ணியம் என்ற கோட்பாடானது, ஆண்கள் எந்த அளவு சமூக அமைப்பிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் ஈடுபட்டு உரிமை கொண்டாடுகிறார்களோ, அந்த அளவுக்குப் பெண்களுக்கும் மேற்கூறிய துறைகளில் அனைத்து உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று கூறுவதோடு, அதனடிப்படையில்

---

ஆக்ஸ்ஃபோர்ட் அகராதி பெண்ணியம் என்ற சொல்லுக்குப் 'பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது/போராடுவது (advocacy of the claims of women)' என்ற பொருளைத் தந்தது.

நன்கு வரையறுக்கப்பட்ட சமூக அமைப்பை உருவாக்கித் தரவும் முயலுகிறது.

பெண்ணியத்தை முழுமையாகப் புரிந்து கொள்ள, மேலும் சிலரது விளக்கங்களும் உதவி செய்கின்றன.

'பெண்ணியம்' என்பது பெண்களின் எல்லாச் சிக்கல்களையும் புரிந்து கொண்டு, அவற்றை நீக்க முயல்வதாகும். அதன் மூலம், உலகளவில் அரசியலிலும் பண்பாட்டிலும் பொருளாதாரத்திலும் ஆன்மீகத்திலும் பெருத்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிறார் சார்லட் பன்ச் (Charlotte Bunch).

இதையே, பார்பரா ஸ்மித்தின் (Barbara Smith) கூற்றில் சற்று விரிவாகக் காணமுடிகிறது. 'பெண்ணியம் என்பது எல்லாப் பெண்களையும் அரசியல் மற்றும் பிற அடிமைத்தளையிலிருந்து விடுவித்தல் என்ற கொள்கை உடையதாகும். இளம் பெண்கள், தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள், ஏழைப் பெண்கள், தன்னினச் சேர்க்கையுடைய பெண்கள் (Lesbians) வயதான மூதாட்டிகள் மற்றும் பொருளாதார நிலையிலும், மரபு மண முறையிலும் துன்புறும் பெண்கள், இவர்கள் அனைவருக்கும் விடுதலை பெற்றுத் தருவதே இதன் இலக்காகும்'. இதன்றி, இயல்பான அல்லது சற்றுக் குறைவான முயற்சியில் ஈடுபடுவது பெண்ணியம் ஆகாது என்று அவர் விளக்கியுள்ளார்.

டோனா ஹாக்ஸஸ்ட் மற்றும் சூ மாரோ (Donna Hawxhurst and Sue Morrow) என்பவர்கள் பெண்ணியம் என்பது தீவிர செயல்பாடுடையது என்று கூறுவது முற்கண்ட பார்பரா ஸ்மித்தின் கருத்தோடு ஒத்துச் செல்கிறது. இவர்கள், 'பெண்ணியம் தனிப்பட்ட முறையில் மட்டுமன்றி, அரசியல் மற்றும் தத்துவ நிலையாகவும் செயல்பட வேண்டி இருப்பதால், இதற்குத் தேவை தீவிர நடைமுறை செயல்பாடுதான். தீவிரம் இல்லாவிட்டால் பெண்ணியம் என்ற சொல் அர்த்தமற்றதாகி, தானே இல்லாமல் போய்விடும்' என்று அப்பெண்கள் கருதுகின்றனர்.

சார்லட் பன்ச், பெண்ணியம் என்பது பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது மட்டுமல்ல; சமூகத்தையே மாற்றியமைக்க முயல்வதாகும்'' என்கிறார். அதாவது, இவர் பெண்ணியத்தை, 'சமூக நிலை மாற்றக் கோட்பாடு' (Transformational Politics of the Society) என்று விளக்குகிறார்.

தெரசா ப்ளிங்டன் (Teresa Billington) என்ற பெண்மணியும் 'பெண்ணியம் உலகையே மாற்றி யமைக்கும் இயக்கம்' என்று கருத்துரைக்கிறார்.

பெண்ணியம் என்பது பெண்களின் நிலையை மாற்றுகின்ற இயக்கம் (A Movement for change in the position of Women) என்பது ரோஸலிண்ட் டெல்மார் (Rosalint Delmar) கருத்தாகும். பெண்களைச் சமுதாய அளவில் முன்னேற்றுவது என்பது பெண்ணியத்தின் மையச் செயற்பாடாக அமைந்துள்ளதால், இதை ஒரு சிறந்த சமுதாய இயக்கமாகக் கருத இயலும் என்பது இவருடைய எண்ணமாகும். 'காரணம்' (The cause) என்ற பெண்ணியம் விளக்க நூலை எழுதிய ரே ஸ்டான்சி அம்மையாரும், பெண்ணியத்தின் மையச் செயற்பாடு சமுதயத்தில் பெண்களின் நிலையை மாற்றுவதாகும் (அடிமைத் தனத்தைக் களைதல்) என்று எடுத்துரைக்கிறார்.

பெண்ணியவாதி என்பவர் யார்? (Who is Feminist?) என்ற வினாவிற்கு ரே ஸ்டான்சி பதிலுரைக்கும்போது, பெண்ணியவாதி என்பவர் பெண்களின் போராட்டத்திற்குத் துணை நின்று, அவர்களின் அடிமைத்தனத்தைக் களைந்தெறிய உதவுவதோடு, அவரின் மையக் கொள்கையே சமுதாயத்தில் பெண்களின் நிலைமாற்றம் என்பதைப் பற்றியதாக இருக்க வேண்டும்' என்கிறார்.

சைமன்-டி-பெவாயர் என்ற அம்மையாரும் பெண்ணியவாதியை இனம் காட்ட முற்படுகையில், 'பெண்களின் நிலை மாற்றம்' குறித்து அழுத்தமாகப் பேசியுள்ளார். ''பெண்ணோ ஆணோ—சமுதாயத்தில் பெண்களின் நிலையை மாற்றப் போராடுவதோடு, வகுப்பு வேறுபாடின்றி எல்லா நிலைகளிலும் பெண்களின் உயர்வுக்கு உழைப்பவராக இருக்க வேண்டும்'' என்கிறார்.

மேற்கூறிய கருத்துக்களை வைத்து ஆராய்கின்ற போது, பெண்ணியம் என்பது பெண்களின் அடிமை நிலையை மாற்ற முற்படும் கோட்பாடு என்பதும் பெண்ணியவாதி என்பவர் பெண்களின் நிலை மாற்றத்திற்காகக் குரல் கொடுப்பவர் அல்லது பாடுபடுபவர் என்பதும் விளக்கம் பெறுகிறது.

# பெண்ணியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
## (மேலை நாட்டுப் பெண்ணியம்)

*பெண்ணியம் என்ற இயக்கம் ஒரு நீண்ட வரலாறுடையது. இந்த இயக்கத்தின் வித்து கி. பி. 1400இல் இடப்பட்டது. கி.பி. 1400 இலிருந்து கி. பி. 1789 வரையிலான ஆண்டுகளில் இவ்வியக்கம் கீழ்க்கண்ட மூன்று நிலையை அடைந்தது.*

**நிலை 1** *: பெண்கள் தங்களை அவமதிக்கும்/துன்புறுத்தும் ஆண் வர்க்கத்தை எதிர்த்துப் போராட நினைத்த நிலை. நாடுகளின் மொழிவாரியாக இவ்வுணர்வு இருந்ததாகக் கூறலாம்.*

**நிலை 2** *: பாலியல் உறவு என்பது வெறும் உடற்கூறு சம்பந்தமானது என்று மட்டும் நினைத்த உணர்வு மாறி, அதை நாகரிகமானதாகக் கருதிய நிலை.*

**நிலை 3** *: ஆண் வர்க்கத்தினரின் குறுகிய மனப்பான்மையையும், பாரபட்ச மனப்பான்மையையும் எதிர்த்து, நாங்கள் சமூகத்தில் உண்மையான அந்தஸ்தும் மதிப்பும் பெற வேண்டும் என்ற நோக்கு உண்டான நிலை.*

*பெண்களிடையே தாங்கள் துன்புறுத்தப்படுகிறோம் என்ற உணர்வு தலைதூக்கி, அதை எதிர்த்து ஒரு புரட்சி உருவாக வேண்டும் என்ற எண்ணத்தைத் (உள் மனதில்) தோற்றுவித்தது இக்காலக்கட்டமாகும். இம் முதல் காலக்கட்டம் பெண்களிடையே கருத்து மாற்றம் உருவாகத் தூண்டு கோலாக இருந்தது என்றால், பின்வந்த காலக்கட்டம் அவர்களின் கருத்தைச் செயல்படுத்தி வெற்றிகாண வைத்தது எனலாம்.*

பின்வந்த காலக்கட்டத்தில் பெண்ணிய வரலாற்றில் இரு பெரும் அலைகள் உண்டாயின. முதல் அலை 1830இல் அமெரிக்காவில் தோன்றி, ஐரோப்பாவிற்கு விரைவாகப் பரவியது. இவ்வலையின் காரணமாகப் பெண்கள் ஓட்டுரிமை பெற்றனர். 2வது அலை 1960இன் தொடக்கத்தில் அமெரிக்காவில் தோன்றி உலகத்தின் பல பாகங்களுக்குப் பரவி, மிகப் பெரிய பண்பாட்டுப் பாதிப்பை ஏற்படுத்தியது.

இவ்விரண்டின் வரலாறே பெண்ணியத்தின் வரலாறாகக் கருதப்படுகிறது. 1830களில் முதன் முதலாகப் பல பெண்கள் ஒன்று சேர்ந்து ஓர் இயக்கத்தைத் தோற்றுவித்தனர். இவர்கள், ஆண்களை எதிர்த்து, பெண்களின் உரிமையை நிலைநாட்டுவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். சூசன் ஆண்டனி (Susan B. Antony) அண்டாய்னட் ப்ரௌன் (Antoinette Brown) லூசி ஸ்டோன் (Lucy Stone) போன்ற பெண்மணிகள் இவ்வியக்கத்தின் முக்கிய உறுப்பினர்களாக விளங்கினர்.

1840இல் லண்டனில் ‘உலக அடிமை ஒழிப்பு மகாநாடு’ நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளவில்லை. முதன் முதலில் இதைப் பெண்ணியவாதிகள் வன்மையாகக் கண்டித்து அறிக்கைகள் வெளியிட்டனர். ‘ஆண் பெண் எல்லோரும் சமமாகவே படைக்கப் பட்டுள்ளனர்’, என்ற கருத்து அவ்வறிக்கைகளில் எடுத்துரைக்கப்பட்டது. பெண்கள் ஒடுக்கப்படுவதை முழுவதுமாக அழிப்பது என்பது அடிமைத்தனத்தை ஒழிப்பதை விடக் கடினமானதாகும் என்று மற்றும் சில பெண்ணியவாதிகள் அப்பொழுது கருத்து தெரிவித்தனர்.

1848-இல் அமெரிக்காவில் நியூயார்க்கில் உள்ள செனகா பால்ஸ் (Seneca Falls) என்ற இடத்தில் நடந்த மாநாடு உலகப் பெண்ணிய வரலாற்றில் ஒரு மைல்கல்லாகும். லுக்கிரிடியா மாட் (Lucretia Mott) எலிஸபெத் கேடி ஸ்டான்டன் (Elizabeth cady stanton) என்ற இரு பெண்மணிகள் இம்மாநாட்டை நடத்தினர். அப்பொழுது அவ்விருவரும் பெண்களுக்கான இயக்கம் ஒன்றை முறையாகத் தொடங்கினர். இம்மாநாட்டில் பெண்களுக்குக் கீழ்க்கண்ட சில இன்றியமையா சலுகைகள் வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்கத்தை வற்புறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

1. திருமணமான பெண்களுக்குச் சொத்தில் உரிமை
2. கல்வியில் பெண்களுக்கு அதிக வாய்ப்பளித்தல்
3. தொழில், வணிகத் துறை மற்றும் வழிபடும் இடங்களில் (Church) பெண்களுக்கு வாய்ப்பளித்தல்.

1840களிலும், ஐம்பதுகளிலும் அமெரிக்காவில் சோசலிசப் பெண்ணியத்தின் சில கருத்துக்கள், பெண்ணுரிமைக்காக நடத்தப்பட்ட கூட்டங்களில் இணைந்து வலியுறுத்தப்பட்டன. இதன் எதிரொலியாக ஒகையோ மாநிலத்தில் 'சேலம்' நகரில் நடந்த ஒரு மாநாட்டில் ஆண்களை அனுமதிக்கவில்லை. அத்துடன், ஆண்களை வெளிப்படையாக அம்மாநாட்டில் எதிர்த்துப் பேசினர். இம்மாநாட்டில் கலந்து கொண்ட பெண்கள் தாங்கள் ஆண்களுக்கு நிகரானவர்கள் என்ற கருத்தை எதிரொலிப்பது போல், ஆண்கள் அணிவது போன்ற தொளதொளப்பான கால் சராய்களை அணிந்து கொண்டு வந்திருந்தனர்.

இதே காலக்கட்டத்தில் அமெரிக்கப் பெண்கள், குடிஒழிப்பு குழுக்களைத் தோற்றுவித்து, பிரச்சாரம் செய்யத் தொடங்கினர். கணவன்மார்களின் குடிப்பழக்கத்தால் தாங்கள் மிகவும் துன்புறுவதாகப் பல பெண்கள் வெளி உலகிற்கு முதன் முதலில் துணிந்து இனம் காட்டினர்.

1869இல் பெண்ணியச் செயற்பாட்டாளர்கள் மற்ற உரிமைகளை அடைய ஓட்டுரிமை இன்றியமையாதது என்று கருதினர். அதன் பொருட்டு அமெரிக்கப் பெண்கள் ஓட்டுரிமைகோரும் சங்கம் (The American Women Suffrage Association) என்ற அமைப்பைத் தோற்றுவித்தனர். இதைத் தொடர்ந்து 1890இல் சூசன் ஆண்டனி, எலிஸபெத் கேடி ஸ்டான்டன் என்ற இருவரும் தலைமை ஏற்ற தேசிய பெண்கள் ஓட்டுரிமை அமைப்பு (National American Women's Suffrage Association) தோற்றம் பெற்றது. இது பெண்களின் ஓட்டுரிமைக்காகத் தீவிரமாகப் போராடியது. இந்த அமைப்புக்களோடு மேல்மட்ட, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து போராடினர். 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஓட்டுரிமை இயக்கங்கள் நிறைய தோன்றி ஒன்றோடு ஒன்று இணைந்து ஓட்டுரிமை என்ற ஒரே இலக்கை வலியுறுத்தத் தொடங்கின.

சுமார் 50 ஆண்டுகள் போராடியதன் விளைவாக 1920இல் ஆண்டனி சட்டச் சீர்திருத்தம் அல்லது 19ஆவது சட்டத்

திருத்தம் (19th Amendment) பெண்களுக்கு ஒட்டுரிமையை அளித்தது. பெண்கள் போராட்டத்தின் முதல் வெற்றிப்படியாக இச்சட்டச் சீர்திருத்தம் அமைந்தாலும் இஃது பெண்களின் எல்லா உரிமைகளுக்கும் வழி வகுக்கவில்லை எனலாம்.

பிரிட்டன் பெண்ணியவாதிகள் தங்களின் கொள்கைகளிலோ, காரண காரியங்களிலோ அமெரிக்கப் பெண்ணியவாதிகளுக்குச் சற்றும் குறைந்தவர்கள் அல்லர். சில கருத்துக்களும், உணர்வுகளும் அமெரிக்கப் பெண்ணிய இயக்கங்களின் மூலமே இவர்களுக்குக் கிடைத்தன. இப் பெண்ணியக்கங்களின் நூல்கள், இதழ்கள், துண்டுப் பிரசுரங்கள் போன்றவை பிரிட்டன் பெண் மணிகளால் மிகவும் வரவேற்கப்பட்டன. பிரிட்டன் பெண்மணிகளைக் கவர்ந்த அமெரிக்கப் பெண்ணியவாதிகளுள் எலிசபெத் கேடி ஸ்டான்டன் முக்கியமானவராவார். பலமுறை அவரும் லண்டன் நகருக்குச் சென்று உரைகளாற்றிப் பிரிட்டனில் பெண்ணியம் வளர உறுதுணையாக இருந்தார்.

இங்கிலாந்தில், மேரி வோல்ஸ்டன் கிராப்ட் என்ற பெண் மணி எழுதிய 'பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு' (A Vindication of the Rights of Women) என்ற நூலும், ஜான் ஸ்டுவர்ட் மில் எழுதிய 'பெண்ணடிமைத்தனம்' (The Subjection of Women) என்ற நூலும் பெண்ணிய வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்தன.

இங்கிலாந்தில் 1903இல் ஒட்டுரிமை கோரும் அமைப்புகளின் போராட்டம் வலுப்பெற்றது. 'பெண்களின் சோசலிச அரசியல் கூட்டமைப்பு' போன்ற இயக்கங்கள் ஒட்டுரிமை பெறுவது பெண்ணியத்தின் ஒரு முக்கிய கடமையாகும் என்று வாதாடின.

முதல் உலகப் போரில் இங்கிலாந்துப் பெண்மணிகள் பெரும் பங்கு வகித்தனர். அது கண்டு, இங்கிலாந்து அரசாங்கம் தன் கொள்கையைத் தளர்த்திக் கொண்டு பெண்களின் ஒட்டுரிமைக்குச் சம்மதித்தது. 1918இல் பிரிட்டன் பாராளுமன்றத்தில் பெண்கள் வாக்குரிமை பற்றிய மசோதா ஏற்றுக் கொள்ளப் பட்டது. அதன்படி, இங்கிலாந்தில் உள்ள முப்பது வயதிற்கு மேற்பட்ட பெண்களுக்கு ஒட்டுரிமை அங்கீகரிக்கப்பட்டது. அதன் பின் வந்த ஆண்டுகளில் இருபத்தியோரு வயதைக் கடந்த கல்யாணமாகாத இளம் பெண்களுக்கும் அவ்வுரிமை வழங்கப் பட்டது.

அமெரிக்காவைப் பொறுத்தவரை முன்பே கூறியபடி ஓட்டுரிமை எதிர் பார்த்த அளவிற்குப் பெரிய வெற்றியைத் தந்துவிடவில்லை. குறிப்பாகத் தொழிலாளர் வர்க்கம், கறுப்பர் பெண்கள், நடுத்தர வர்க்கம் இவற்றைச் சார்ந்தவர்கள் எந்தப் பயனும் அடையவில்லை.

இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் சொல்லப்படுகின்றன.

1. பெண்களுக்கென்ற தனி அரசியல் கட்சி இல்லை.
2. அவர்கள், தங்களின் பிரச்சினைகளுக்காக ஓட்டுப் போட இயலவில்லை.
3. எண்ணிக்கையில் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு அரசியலில் பெண்கள் ஈடுபடவில்லை.

ஒரு குடியாட்சி மாற்றம் பெற்று பெண்களுக்குச் சமூக அளவில் சீர்திருத்தம் ஏற்பட வேண்டுமானால், மேற்கண்ட இந்த மூன்று குறைகளும் நீக்கப்பட்டாக வேண்டும் என்பது வல்லுநர்கள் கருத்தாக அமைந்தது.

1920 க்குப் பின், 'ஓட்டுரிமை கோரும் இயக்கங்கள்' நான்கு குழுக்களாகப் பிரிந்து விட்டன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கருத்தை வலியுறுத்திச் செயல்படத் தொடங்கின. அதில் முக்கிய பெரிய குழு சமதர்ம நோக்கைச் (Socialism) சார்ந்து செயல்படத் தொடங்கியது. அது, பெண் வாக்காளர்கள் குழு (The league of Women Voters) என்ற பெயரில் இயங்கியது பெண்களை ஆண்களில் இருந்து வேறுபடுத்தும் சட்ட நிலையை நீக்கக் கோரி, அதனடிப்படையில் சட்டச் சீர்திருத்தம் கொண்டுவரப் போராடியது. மேலும் இவ்வமைப்பு பெண்களின் நலன், அரசியல் பங்கு, அதிக வேலை வாய்ப்பு, கல்வியில் அதிக வாய்ப்பு, கருச்சிதைவு உரிமை, குழந்தைப் பராமரிப்பு இவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தியது. இதன் பயனாக அமெரிக்கப் பாராளுமன்றத்தில் அதிகளவு, பெண்கள் நலன் பற்றிய மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இவ்வமைப்பு விவாகரத்தைச் சட்டபூர்வமாக்கியது.

இரண்டாவது குழுவானது அமைதி இயக்கமாகச் செயல்பட்டது. அமைதி மற்றும் விடுதலைக்கான அகில உலகப் பெண்கள் குழு (Women's International League for Peace and Freedom-WILPF) என்பது அதன் பெயர். இக்குழு, பேரா

யுதங்கள் ஒழிப்பு பற்றியும் சமாதானம் பற்றியும் தொடர்ந்து மாநாடுகள் நடத்தியது. இம்மாநாடுகள் 'போரிடுதல்' என்பது ஆணின் குணம் என்றும், பெண்கள், விடுதலையையும் சமாதானத்தையும் விரும்புவார்கள் என்றும் வற்புறுத்தின.

மூன்றாவது குழு, தேசிய வணிக ஒருங்கிணைப்பு (National Federation of Business) என்றும், வேலை பார்க்கும் பெண்களின் சங்கம் (Professional Women's Club) என்றும் சிறுசிறு குழுக்களைத் தொடங்கிப் பெண்களுக்கான சமூக வேலை வாய்ப்புகளை வலியுறுத்தி வந்தன.

நான்காவது குழுவானது தீவிரவாத இயக்கமாக மாறியது. ஆலிஸ் பால் (Alice Paul) என்பவரது முயற்சியால் தேசிய பெண்கள் கட்சி (National Women's Party) தொடங்கப்பட்டது. இக்கட்சி தீவிரமாகச் செயல்பட்டது. இதன் முதல் கொள்கை, சமவுரிமை மசோதா (Equal Rights Amendment) கொண்டு வருவதாகும். 1923இல் இக்கட்சி அமெரிக்கப் பாராளுமன்றத்தில் இம்மசோதாவைத் தாக்கல் செய்தது.

இங்கிலாந்திலும் ஓட்டுரிமைக்குப் பின் 'பெண்ணுரிமை' என்ற போராட்ட விளக்கு சரியாகத் தூண்டப்படவில்லை. 1918 இல் இங்கிலாந்துப் பாராளுமன்றத்தில் ஓட்டுரிமை மசோதா ஏற்றுக் கொள்ளப்பட்டாலும், சுமார் 10 வருடங்கள் கழித்தே அதாவது 1928க்குப் பிறகே பெண்களுக்கு முழு வாக்குரிமை கொடுக்கப்பட்டது. இதன் பயனாக, முப்பதுகளில் இங்கிலாந்துப் பெண்களிடம் குறிப்பிடத்தக்க மாற்றங்களும், முன்னேற்றங்களும் ஏற்படத் தொடங்கின.

1930களில் இங்கிலாந்தில் பெண்கள் குட்டை முடி வைத்துக் கொண்டும், அரை கால்சராய் அணிந்து கொண்டும், சிகரெட் பிடித்துக் கொண்டும், வீட்டைவிட்டு வெளிவந்து பொதுக் காரியங்களில் ஈடுபடத் தொடங்கினர். கார் ஓட்டப் பழகிக் கொண்டனர். ஆண்களுக்குச் சமமாக நாகரிகமாக நடக்சத் தொடங்கினர். அநேகப் பெண்கள் திருமணம் வேண்டாம் என்று முடிவெடுத்தனர். திருமணம் செய்து கொண்ட பெண்களும் ஆண்களுக்கு அதிக முக்கியத்துவம் தரவில்லை. இதன் காரணமாக வழிவழியாக இருந்து வந்த ஆணாதிக்கம் சரியத் தொடங்கியது.

அமெரிக்காவிலும் 1920 தொடங்கி பெண்களிடையே மாற்றம் ஏற்படத் தொடங்கியது. இளம் பெண்களிடம்

சோஷலிச உணர்வு தலைதூக்கியது. அதன் விளைவாக அவர்களிடம் தோற்ற மாற்றம், உடை மாற்றம், நவீன சிகை அலங்காரம், புகை பிடிக்கும் பழக்கம் போன்றவை ஏற்பட்டன.

சூசன் லாஃபாலட் (Suzanne Lafollette) என்பவரின் பெண்கள் சம்பந்தப்பட்ட (Concerning Women) என்ற நூலும், வெர்ஜினியா வுல்ப் (Virginia Wolf) என்பவரின் ஒருவரின் சொந்த அறை (A Room of One's own) என்ற நூலும் அமெரிக்கப் பெண்களிடையே அதிகப் பாதிப்பை ஏற்படுத்தி மேற்கூறிய மாற்றத்திற்கு மற்றுமொரு தூண்டுகோலாக அமைந்தன.

முப்பதுகளில் அமெரிக்காவில் பொருளாதாரச் சீர்குலைவு ஏற்பட்டது. அதைச் சீர்செய்ய, வேலையில் இருந்த மணமான பெண்களை நீக்கிவிட்டு, பதிலாக ஆண்களை வேலைக்கு அமர்த்தினால்தான் முடியும் என்ற எண்ணம் அநேக முதலாளி களுக்கு ஏற்பட்டது. அதனடிப்படையில் செயல்படவும் தொடங்கினர். மேலும், அவர்கள், ஆண்கள்தான் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியுள்ளது. எனவே அவர் களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் வாதாடினர். இவ்வாதம் பெண்களிடையே மனத்தளவில் பெரிய பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றாலும் அவர்கள் எடுத்த நடவடிக்கை பல பெண்களின் பொருளாதார நிலையைச் சீர்குலைத்தது.

இதற்கிடையே, 1923 இல் இருந்து, தொடர்ந்து சமவுரிமை மசோதா மீண்டும் மீண்டும் சீர்திருத்தத்திற்காக வலியுறுத்தப் பட்டது. 1950 இலும், 53 இலும் இம்மசோதா சீர்திருத்தப் பட்டது. இதனடிப்படையில் பல மாகாணங்கள் பெண்களுக்கு, ஆண்களுக்கு நிகரான சமவூதியம் தரச்சம்மதித்தன.

இரண்டாவது உலக மகாயுத்தம் அமெரிக்கப் பெண்களின் வாழ்வில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தித் தந்தது. யுத்த காலத்தில் ஆண் தொழிலாளர்களின் பற்றாக்குறை காரண மாகப் பெண்களின் வேலை வாய்ப்பு அதிகரித்தது. பல மாகாணங்கள் பெண்களுக்கு விதித்திருந்த கட்டுப்பாடுகளையும் எதிர்ப்புகளையும் நீக்கத் தொடங்கின. அதனால், மணமான பெண்களும், குழந்தை பெற்ற பெண்களும் வேலையில் சேருவது அதிகமாகியது. உற்பத்தி துறையில் மட்டும் பணிபுரிந்த பெண்கள், எழுத்தர் மற்றும் விற்பனையாளர் போன்ற அலுவலகப் பணிகளிலும் அமர்த்தப்பட்டனர்,

1920 இல் இருந்து 60 வரையிலான காலக்கட்டத்தினைப் பெண்ணிய நோக்கில் மதிப்பிடுகையில், அக்காலக்கட்டத்தில் அமெரிக்காவில் பெண்களுக்கான சமூக நிலை ஆதாயங்கள் பல இருந்தும், பெண்களின் உரிமைக்காகச் செயல்படும் சமூக இயக்கங்கள் அருகிவிட்டன என்று ஆய்வாளர்கள் கருது கின்றனர். தனிப்பட்ட பெண்களின் நலம் நாடும் அமெரிக்கப் பல்கலைக்கழகப் பெண்கள் சங்கம் (American Association of University Women) தேசிய கத்தோலிக்க பெண்கள் சங்கம் (National Council of Catholic Women) என்பன போன்ற அமைப்புகள்தான் இக்காலக்கட்டத்தில் செல்வாக்கு பெற்றி ருந்தன.

பிரிட்டனில் 1953 இல் ராணி எலிசபெத் பதவி ஏற்ற பிறகு பெண்களின் நிலைமை சீர்படத் தொடங்கியது. இவர் ஆட்சியில் பாலியல் சமன்பாடு (Sexual Equality) ஏற்பட்டது. உழைக்கும் வர்க்கத்தினரின் குடும்பங்களில் ஆண் பெண் இருவரும் வேலைக்குச் சென்று, வருமானத்தைப் பெருக்கி மேல்நிலை அடைந்தனர். பெண்கள் தங்கள் உழைப்பால் கிடைத்த சொந்தப் பணத்தில் தங்கள் விருப்பம்போல் வெளியே சென்று வேண்டி யதை வாங்கவும் செலவு செய்யவும் தொடங்கினர். 1950 களில் அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வேலைக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ஒன்று போல் இருந்தது என்று வல்லுநர்கள் கணக்கிட்டு உரைக்கின்றனர்.

அறுபதுகளில் பெண்ணியத்தின் இரண்டாவது அலை எழுச்சி பெற்றது. இக்காலக்கட்டத்தில் புதிய பெண்ணிய இயக்கத்தின் (New Feminist Movement) விளக்கங்களும், செயல் பாடுகளும் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தின. இதனால் பெண்கள் பலர் ஒடுக்குமுறையை எதிர்த்துப் போராட முன் வந்தனர். இஃது பெண்களுக்கென ஒரு புதிய பாதையைத் திறந்து வைத்தது.

1961 டிசம்பர் 14 அன்று ஜனாதிபதி ஜான் எப். கென்னடி பெண்களின் தகுதி பற்றி ஆராய ஒரு குழுவை நிறுவினார். இக்குழு பெண்களின் நலன், வேலை மற்றும் முழு உரிமை இவற்றைப் பற்றி ஆராய்ந்தது. 5ஆவது சட்டச் சீர்திருத்தத்தின் படியும், 14ஆவது சட்டச் சீர்திருத்தத்தின்படியும் பெண்கள் தக்க வசதிகளையும், தகுந்த பாதுகாப்பையும் வேலை வாய்ப் பையும் பெற்றுள்ளதாக இக்குழுவின் ஆய்வறிக்கைக் கூறியது.

**1963** இல் ஜான் எப். கென்னடி 'சம சம்பள மசோதாவில்' (Equal Pay Act) கையெழுத்திட்டது அமெரிக்கப் பெண்கள் முன்னேற்றத்தில் குறிப்பிடத்தக்கதாக அமைந்தது.

**1963** இல் பெட்டி ஃப்ரைடன் (Betty Friedan) என்ற பெண்மணி 'பெண்ணியல்பு புதிர்நிலை' (Feminine Mystique) என்ற நூலை எழுதினார். அமெரிக்காவின் புறநகர் பகுதியில் வாழும் சாதாரண பெண்மணிகளின் சாதாரண கனவுகள் பற்றிப் பகிரங்கமாகப் பேசியது இந்நூல். சமுதாயக் கட்டுப்பாடு அமெரிக்கப் பெண்களை எவ்வளவு தூரம் முன்னேற விடாமல் தடுத்திருக்கிறது என்பதை அப்பெண்மணி தன் நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார். பெண்கள் பற்றிப் பலரும் சொல்லத் தயங்கிய/பயந்த சில புரட்சிகரமான கேள்விகளை இவர் துணிந்து கேட்டது அமெரிக்க ஆண்களிடையே சலசலப்பை ஏற்படுத்தியது. அடிமை வேலை செய்வதை விட்டு, குடும்பத்தில் ஓர் உயர் நிலையைத் தாங்கள் அடைய வேண்டும் என்ற எண்ணத்தைப் பெண்களிடையே ஏற்படுத்தியது இந்நூல். மேலும் இஃது 'சமூகத்தில் பாலியல் (Sexism in Society) என்பதையும், ப்ராய்ட் மனோதத்துவத்தையும் (Freudian Psychology) அமெரிக்க விளம்பரத்தையும் (American Advertising) கடுமையாக விமர்சித்துள்ளது. மொத்தத்தில் இந்நூல் வழி, பெரும்பான்மையான அமெரிக்கப் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களின் முன்னேற்றத்திற்கும் மாறுதலுக்கும் பெட்டி ஃப்ரைடன் வழி அமைத்துத் தந்தார்.

'டெட்டாலஸ்' (Daedalus) என்ற இதழில் **1964** ஆம் வருடம் ஆலிஸ் ரோஸி (Alice S. Rossi) என்பவரின் கட்டுரை ஒன்று வெளியானது. 'இருபாலினரிடையே சமநிலை - ஒரு துணிவான புதுமைக் கருத்து' (Equality between the sexes: An Immodest Proposal) என்பது அக்கட்டுரைத் தலைப்பு. அக்கட்டுரை கல்வியாளர்களிடையே பெருத்த வரவேற்பைப் பெற்றது. பெண்களின் நிலையை வெவ்வேறுபட்ட சூழலில் ஆராய்ந்தது அக்கட்டுரை. மேலும், பாலியல் வேறுபாட்டில் மாறுதல் வரவேண்டுமென்றால் பெண்சமுதாயத்தில் கீழ்க்கண்ட மூன்று மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்று அக்கட்டுரை பரிந்துரைத்தது.

1. பெண் குழந்தைகளுக்குப் போதுமான அளவு பராமரிப்பும் பாதுகாப்பும் கொடுத்தல்.

2. குடும்ப அமைப்பில் மாறுதல் ஏற்பட்டு, அதன் மூலம் பெண்கள் பள்ளிகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் செல்ல வாய்ப்பளித்தல், மேலும் பள்ளிகளையும் தொழிற்சாலைகளையும் புறநகர் பகுதியிலும் அமைத்தல்.

3. சமுதாயத்தில் எல்லா நடவடிக்கைகளிலும் பெண்கள் சமமாகப் பங்கேற்க முனைதல்.

இது போன்ற, பல கட்டுரைகளும், நூல்களும் அக்காலக் கட்டத்தில் பெண்களின் நிலையை எடுத்துக் காட்டவும், முன்னேற்றவும் பலரால் எழுதப்பட்டன. அவை அனைத்தும், பெண்ணிய வரலாற்றில் எழுச்சிக்குரிய காரணிகளாக அமைந்தன.

1964 முதல் 1968 வரையிலான ஆண்டுகளில் பெண்ணிய இயக்கம்,

1. தாராளவாதப் பெண்ணியக்கம் (Liberal Feminism)

2. தீவிரவாதப் பெண்ணியக்கம் (Radical Feminism)

3. சமதர்மவாதப் பெண்ணியக்கம் (Socialistic Feminism) என முப்பெரும் பிரிவாகச் செயல்படத் தொடங்கியது.

1966 அக்டோபரில் சுமார் 300 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய பெண்கள் அமைப்பு (National Organisation for women) 'NOW' என்ற சுருக்கப் பெயருடன் தொடங்கப் பட்டது. அதன் தலைவர் பெட்டி ஃப்ரைடன் ஆவார். அந்த அமைப்பு பெண் குடியுரிமையையும், சமூகச்-சீரமைப்பையும் வலியுறுத்தித் தன் செயல்பாட்டைத் தொடங்கியது. பெண்கள் சமூக நடவடிக்கைகளில் தங்களை முழுவதும் ஈடுபடுத்தி அதன் மூலம் எல்லாவற்றிலும் ஆணுக்கு நிகராக மதிப்பையும், பொறுப்பையும் பெற வேண்டும் என்ற கொள்கையையும் கொண்டிருந்தது இவ்வமைப்பு, தன்னைப் 'பெண்களால் ஆன அமைப்பு' என்று சொல்வதைவிட, பெண்களுக்கான அமைப்பு' என்று சொல்லிக் கொள்வதிலே பெருமையடைந்தது. இவ்வமைப்பில் 10% ஆண் உறுப்பினர்களும் இருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

1967இல் இவ்வமைப்பின் வலியுறுத்தலினால் அமெரிக்க ஜனாதிபதி ஜான்ஸன், அரசாங்கத்திற்குப் பாலியல் வேறுபாடு

கூடாது என்று ஒரு கட்டளையைப் பிறப்பித்தார். இஃது அமெரிக்க அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் கடைப்பிடிக் கப்பட்டது. இக்கட்டளையின் காரணமாக வேலைவாய்ப்பு விளம்பரங்களில் ஆண், பெண் என்று தனிப்பட்டுக் குறிப்பிடுவது கூட தடை செய்யப்பட்டது. இந்த அமைப்பு 1967இல் பெண் ணுரிமை மசோதா (Bill of rights for women) கொண்டு வந்து அதன் மூலம் கருக்கலைப்பு உரிமைக்கான சட்டத்தைக் கொண்டு வர அரசாங்கத்தை முதன் முதலில் வற்புறுத்தியது. 300 நபர் களைக் கொண்டு தொடங்கிய இவ்வமைப்பு இன்று 1,75,000-க் கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட மிகப் பெரிய இயக்கமாக விளங்குகிறது.

1967 இல் சிகாகோவில்' தேசிய மாநாடு' ஒன்று நடத்தப் பட்டது. இதில், பெண்களின் பிரச்சினைகளைப் பற்றிப் பேச முனைந்த ஜோ ப்ரிமேன் (Joe Freeman) சுலாமித் ஃபயர் ஸ்டோன் (Shulamith Fire Stone) என்ற இரு பெண்மணி களுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது. அத்துடன் அம்மாநாடு அவர்களின் செயல்பாடுகளையும் குற்றம் என்று கூறி ஒதுக்கியது. இஃது இவ்விரு பெண்மணிகளையும் தங்கள் கருத்தைச் செயல் படுத்துவதற்கென்று ஓர் அமைப்பை ஏற்படுத்த தூண்டுகோலாக அமைந்தது. ப்ரிமேன், சிகாகோவிலேயே 'சிகாகோ வெஸ்ட்சைட் குரூப் (Chicago Westside Group) என்ற ஒரு அமைப்பைத் தொடங்கினார். ஃபையர் ஸ்டோன் நியூயார்க்கில் 'தீவிரவாதப் பெண் அமைப்பு' (Radical Women) என்ற ஒரு இயக்கத்தைத் தொடங்கினார். அதன்பின் அமெரிக்க நகரங்களில் சிறுசிறு தீவிரவாத அமைப்புகள் தோற்றம் பெற்றன. இவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து 1968 ஜனவரி 15 இல் வாஷிங் டனில் ஓர் 'அணிவகுப்பு' நடத்தினர். இதில், 'மரபு வழிவந்த பெண்மையைக் குழி தோண்டிப் புதைப்போம்' (Burial of Traditional Womenhood) என்ற கருத்தை வீதி நாடகமாக நடத்திக் காட்டினர். இதை மக்கள் தொடர்புச் சாதனங்கள் பெரிதாக விளம்பரப்படுத்தின. இதனால் இவ்வியக்கத்திற்குப் பெருத்த விளம்பரம் கிடைத்தது.

1968 செப்டம்பரில் அமெரிக்காவில் அட்லாண்டிக் சிட்டியில் உள்ள நியுஜெர்ஸியில் 'மிஸ் அமெரிக்கா' போட்டி நடத்தப் பட்டது. தீவிரவாதப் பெண் இயக்கம் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தது. இவ்வியக்க உறுப்பினர், ராபின் மார்கன் (Robin Morgan) என்பவர் தலைமையில் அழகிப் போட்டி

நடக்கும் இடத்திற்கு வெளியே பெண்களின் உள்ளாடைகள், ஒப்பனைப் பொருட்கள், பெண்களை மரபுகளிலேயே வைத்துப் பார்க்கும் மகளிர் இதழ்கள், மரபுவழி பெண்களைப் பெருமையாகப் பேசும் கட்டுரைகள் ஆகியவற்றைக் குவித்து எரித்தனர். கற்பனை மிகுந்த ஒரு நிருபர் இந்நிகழ்ச்சியை 'உள்ளாடை எரிப்பு' (Bra Burning) என விமர்சித்தார். பெண் சுதந்திரத்திற்கு அடையாளமாக இந்நிகழ்ச்சி வர்ணிக்கப்பட்டது.

நரகத்தைச் சார்ந்த அகில உலகப் பெண்கள் தீவிரவாத இயக்கத்தைச் (Women's International Terrorist Conspiracy from Hell-WITCH) சார்ந்தவர்கள் 68-69களில் நூதனப் போராட்டங்களை நடத்தினர். இதற்கு எதிர்ப்புச் செயற்பாடு (Zap action) என்று பெயரிட்டு அழைத்தனர். பால் வேறுபாடற்ற நிலையை வலியுறுத்தி, பொதுமக்களிடையே விழிப்புணர்ச்சியை ஊட்டும் செயலில் ஈடுபட்ட இவர்கள் தங்கள் செயல்களை வித்தியாசமாக, மக்கள் கவனத்தை உடனடி ஈர்க்கும் வகையில் செய்தனர் 1968இல் நடந்த அழகிப் போட்டியின் போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், ஒரு ஆட்டிற்கு மகுடம் சூட்டி ஊர்வலம் நடத்தினர். மேலும் இவர்கள், 1970 மார்ச்சில், சுய கருகலைப்பினால் இறந்துபோன பெண்களுக்காக மௌன இறுதி ஊர்வலம் நடத்த, இதனால் தூண்டப்பட்ட மிச்சிகன் சட்டசபையினர் (Michigan Legislature) கருக்கலைப்புச் சட்டச்சீர்திருத்த மசோதாவைக் கொண்டு வந்தனர். இவ்வகைப் புதுமைப் போராட்டங்கள் பலரைக் கவர்ந்து பிரபலமடைந்தன.

'New' இயக்கத்தின் முன்னால் தலைவி டைகிரேஸ் அட்கின்சன் (Ti-Grace Atkinson) என்ற அம்மையார் அக்டோபர் 17 இயக்கம் ஒன்றைத் தொடங்கினார். இவ்வியக்கத்தினர் தீவிரமாகப் 'பிரிவினையியம்' Separalism) பேசினர். அதாவது ஆண் மேலாதிக்கத்திலிருந்து விலகி வாழ்வதிலும், தாங்கள் தனிப்பட்டவர்கள் என்று காண்பிப்பதிலும் ஆர்வம் கொண்டிருந்தனர்.

1969இல் நியுயார்க் தீவிரவாதப் பெண்ணிய இயக்கம் (New York Radical Feminist Organisation) தங்களைச் சிவப்புக் காலுறையாளர்கள் (Red Stockings) என்று அழைத்துக் கொண்டனர். சுலாமித் பயர்ஸ்டோக் (Shulamith Firestone) இக்குழுவைத் தோற்றுவித்த பெருமைக்குரியவர். பெண்களிடையே சகோதரித்துவத்தை வளர்ப்பதையும், விழிப்

புணர்வை ஊட்டுவதையும் அவர்கள் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

1969இல் அமெரிக்காவில் எல்லா மாகாணத்திலுமாகச் சுமார் 5000 தீவிரவாதக் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஒவ்வொரு நகரத்திலும் ஆங்காங்கே உள்ள குழுக்கள், உள்ளூர் அரசியலிலும் பெண்களைப் பற்றிய பிரச்சாரங்களிலும் ஈடுபட்டனர். குறிப்பாகப் பல்கலைக் கழகங்களில் தங்களுடைய கொள்கைகளை முன்னேற்றியும், பெண்கள் தொடர்பான இதழ்களை, துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் தீவிரப் பணியாற்றினர்.

1969 நவம்பர் 24இல் நியூயார்க்கில் அனைத்துக் குழுக்களையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. இதில்-NOW இயக்கத்தின் சார்பாக, 10 கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன. சம வேலைவாய்ப்பு, சம கல்வி வாய்ப்பு, கருக்கலைப்பு உரிமை, தொடர்பு சாதனங்களில் பெண்களுக்கு முன்னுரிமை, பெண் விடுதலை என்பன அவை. 24 மணி நேரக் குழந்தைப் பராமரிப்பு மையங்கள் நாடெங்கிலும் நிறுவப்பட வேண்டும் என்பது மற்றொரு முக்கிய கோரிக்கையாக இம்மாநாட்டில் வைக்கப்பட்டது.

தீவிரவாதப் பெண் குழுக்கள் தங்களின் முழு தன்னாட்சி உரிமையைக் காப்பாற்றிக் கொண்டு, தீவிரப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வந்ததால், அடுத்து வந்த சில ஆண்டுகளில் அமெரிக்காவில் ஒரு பெரிய எழுச்சியை அவர்களால் ஏற்படுத்த முடிந்தது.

பிரிட்டனைப் பொறுத்தவரைத் தீவிரவாதப் பெண்ணிய இயக்கம் அதிகப் பாதிப்பை ஏற்படுத்த முடியவில்லை. இங்கிலாந்தின் அரசியல் அமைப்பும், வகுப்புவாதப் போக்குமே இதன் எழுச்சிக்குத் தடைக்கல்லாயின. இங்கிலாந்தைப் பொறுத்தவரை 'பெண்ணியம்' என்பதே புரட்சிகரமான ஒன்றாகும்.

அமெரிக்காவில் தீவிரவாதப் பெண்கள் நடத்திய புதுமைப் போராட்டமான எதிர்ப்புச் செயற்பாட்டுக்கு (Zap action) இங்கிலாந்தில் வரவேற்பு கிடைக்கவில்லை. எனவே, லண்டனில் நடந்த அழகிப் போட்டியின் போது மிகவும் கண்ணியமான முறையில் பெண்ணியவாதிகள் போராட்டம் நடத்தினர். அழகிப் போட்டியை எதிர்த்துப் பிரச்சாரங்கள் நடத்தித் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்தனர்.

1970இல் ஆக்ஸ்போர்ட்டில் சில முக்கிய பெண் பிரமுகர்கள் ஒன்று சேர்ந்து தேசிய அளவிலான பெண்கள் கருத்தரங்கு ஒன்றை நடத்தினர். இங்கிலாந்தைப் பொறுத்தவரை இதுவே பெண்ணியவாதிகள் நடத்திய பெரிய அளவிலான பொது மக்கள் சம்பந்தப்பட்ட கருத்தரங்காகும்.

அமெரிக்காவைப் பொறுத்தவரை 1960 முதல் 1970 வரையிலான காலக்கட்டம் 'தீவிரவாதப் பத்தாண்டாகக்' (Decade of Radicals) கணக்கிடப்படுகிறது.

## 1970-75ஆம் ஆண்டுகளில் பெண்ணிய வளர்ச்சி

1970 முதற்கொண்ட பத்தாண்டுகள் பெண்கள் பத்தாண்டுகள் (Decade of Women) என்று சுட்டப்படுகின்றது. எழுபதுகளில் பெண்ணியம் பிரிட்டன் அமெரிக்காவில் மட்டுமல்லாமல் பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, இத்தாலி, ஸ்பெயின், ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் வளர்ந்து வரும் பல நாடுகளிலும் ஆக்க பூர்வமான வளர்ச்சி பெற்றது. எழுபதுகளின் தொடக்கத்தில் ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் பெண்கள் சம ஊதியம், சம வேலை வாய்ப்பு, கருச்சிதைவு உரிமை இவற்றைப் பெற்றனர். ஆனால், மூன்றாம் உலக நாடுகளின் பெண்களுக்கும், பணம் படைத்த அமெரிக்க மற்றும் பிரிட்டனில் உள்ள பெண்களுக்கும் உள்ள பிரச்சினைகள் வேறுபட்டவைகளாக அமைந்திருந்தன. அதிலும், கத்தோலிக்க இஸ்லாமிய நாட்டுப் பெண்களுடைய பிரச்சினைகள் வெளிப்படையாகவே வேறுபட்டிருந்தன. ஆனாலும், உலகளாவிய அளவில் பெண்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டிருப்பதை ஒத்துக் கொள்ளுதல் வேண்டும். அடுத்து வந்த சில ஆண்டுகளில் பெண்விடுதலை என்பது உலகளவிலான செய்தியானது. பாலியல் பாகுபாடு (Sex Discrimination), பாலியம் (Sexism), பெண்ணியம் (Feminism), ஆண் மேலாதிக்கம் (Male Chauvinism) போன்ற சொற்கள் அந்தந்த நாட்டு மொழிகளில் அன்றாடப் புழக்கத்திற்கு வந்தன. பெண்ணிய இயக்க எழுச்சியால் உலகளவில் அந்தந்தச் சமுதாயங்களில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் தோன்றத் தொடங்கின.

1970-75 வரையிலான காலக்கட்டத்தில் பெண்ணிய இயக்கம் மேலும் சக்தி வாய்ந்ததாக உருப்பெற்றது. எழுபதுகளின் மத்தியில் பெண்ணிய எதிர்ப்பு இயக்கங்களும் (Anti Feminist Movements) தோன்றத் தொடங்கின.

'இங்கிலாந்து இயக்கத்தின் முதல் தேசிய கூட்டம்' (Nationa Gathering of the British Movement) பிப்ரவரி 1970இல் ஆக்ஸ் போர்டில் உள்ள ரஸ்கின் கல்லூரியில் நடந்தது. இக்கூட்டத்தில் 600க்கும் மேற்பட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் செயல்முறைத் திட்டம் ஒன்று வகுத்து முன்மொழியப்பட்டது. உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டியவைகளாகக் கீழ்கண்ட 4 கோரிக்கைகள் தீர்மானிக்கப் பட்டன.

1. சம வேலை, சம ஊதியம்
2. சம கல்வி வாய்ப்பு
3. இலவச, தன் விருப்பக் கருத்தடையும் கருக்கலைப்பும்
4. இலவச 24 மணி நேரக் குழந்தைப் பராமரிப்பு

1971 மார்ச்சில் முதன்முதலாக இக்கோரிக்கைகள் மக்கள் மத்தியில் எடுத்துரைக்கப்பட்டன. பல நூற்றிற்கும் மேலான பெண்கள், ஆண்கள், குழந்தைகள் முதலானோர் ஹைடு பார்க் (Hyde Park) கிலிருந்து டிரபால்கர் சதுக்கம் (Trafalgar Square) வரை ஊர்வலமாக நடந்து சென்று இக்கோரிக்கைகளைப் பிரதமரிடம் ஒப்படைத்தனர். இக்கோரிக்கைகள் சட்டசபைக்கு வந்தபோது முதலிரண்டும் அதிக எதிர்ப்பின்றி நிறைவேற்றப் பட்டன. அடுத்த இரண்டு கோரிக்கைகளை நடைமுறைக்குக் கொண்டு வருவதில் பல எதிர்ப்புகளும் சிக்கல்களும் எழுந்தன.

1969 இல் இலண்டனில் தொடங்கப்பட்ட 'லண்டன் மகளிர் விடுதலைப் பயிற்சிப் பட்டறை (London Women's Liberation Workshop) என்ற அமைப்பு 1973இல் பிரபலமடைந்தது. பிரிஸ்டல், லங்கஷைர், கார்டிப், எடின்பர்க் போன்ற நகரங்களுக் கும் இதன் கீர்த்தி பரவியது. 1971 இல் 'சிஸ்விக்' (Chiswick) என்ற நகரில் கைவிடப்பட்ட பெண்களுக்காக மையம் ஒன்று தொடங்கப்பட்டு, அதுவும் பிரபலமடைந்தது. 1973, 74ஆம் ஆண்டுகளில் தற்சார்புடைய, தலைமை வேண்டாத பெண் களின் விடுதலைக் குழுக்களைத் தீர்மானிக்க மாநாடுகள் நடத்தப்பட்டன.

அமெரிக்காவில் 1970 ஆகஸ்ட் 26இல் பெண்கள் ஓட்டுரிமை பெற்ற ஐம்பதாண்டு நிறைவு நாள் விழாகொண்டாடப்பட்டது. அன்றைய தினம் (NOW) அமைப்பைச் சேர்ந்தவர்கள் சமத்

துவம் வேண்டி தேசிய அளவிலான போராட்டம் ஒன்றை நடத்தினர். இஃது தேசிய மகளிர் போராட்டம் (National Women's Strike) என்றழைக்கப்பட்டது. தொடர்ந்து நாடெங்கிலும் இது போன்ற பல போராட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப் பட்டன.

'NOW' அமைப்பைச் சேர்ந்தவர்களும், தீவிரப் பெண்ணிய வாத இயக்கமும் இணைந்து நியுயார்க் நகரில் ஓர் ஊர்வலத்தை நடத்தினர். அதில் 50,000க்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு, 5ஆவது அவன்யூ வழியாக முழக்கமிட்டுச் சென்றனர். இது மிகப் பெரிய பெண்கள் ஊர்வலம் என்ற பெயரைப் பெற்று, சரித்திரத்தில் நிலை பெற்றது.

இதுபோன்ற போராட்டங்கள், ஊர்வலங்கள் காரணமாகப் பெண்ணியக்கங்கள் பத்திரிகையாளர்களின் கவனத்தை ஈர்த்தன. அவர்களும், பெண்ணியக்கங்களின் செயல்பாடுகளுக்குச் சிறப்பு கொடுத்து வெளியிடலாயினர்.

1971 க்குப் பிறகு 'NOW' அமைப்பு தம் உறுப்பினர்களை 3000 லிருந்து 15,000 ஆகவும் 74 இல் 40,000 ஆகவும் பெற்று மகிழ்ச்சியான அதிர்ச்சிக்குள்ளாகியது. உறுப்பினர்கள் அதிக மாக அதிகமாகச் சில வரன்முறைகளை நடைமுறைப்படுத்து வதில் சிக்கல் ஏற்பட்டது. சான்றாகப் பணப்பற்றாக்குறை, அனுபவம் மிக்க அலுவலர் இல்லாமை, தேசிய அளவிலான தொடர்புகொள்ள இயலாமை போன்ற நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்டன.

1971இல் பெட்டி ப்ரைடன் (Betty Friedan), பெல்லா அப்சக் (Bella Abzug), ஷெர்லி சிஸ்ஸோம் (Sherly Chisheom) மற்றும் பலரும் தேசிய மகளிர் அரசியல் குழு (National Women's Political Caucus) என்ற ஓர் அமைப்பை நிறுவி, அதன் முலம் தேர்தலில் பெண்களின் பங்கை வலியுறுத்தினர். 1973இல் எல்லா மாநிலங்களிலும் இதன் கிளைகள் தொடங்கப் பட்டன. இவ்வமைப்பு, அரசியலில் பால் இடைவெளி (Gender Gap) கூடாது என்று இடைவிடாது வற்புறுத்தி, அரசியலில் பெண்களின் பங்கை 13%லிருந்து 39% ஆக உயர்த்திய சாதனை செய்தது.

1972இல் வயதான பெண்களுக்கான விடுதலை அமைப்பு (Older Women's Liberation-OWL) ஒன்றை நிறுவி, அதன் மூலம்

கறுப்பர் இனப் பெண்களுக்காகப் போராடினர். 1973இல் தேசிய பெண்கள் கருக்கலைப்பு செயற்பாட்டுக் கழகம் (National Abortion Right Action League-NARAL) நிறுவியும் அமெரிக்கக் குடியுரிமைக் கூட்டுக் கழகம் (American Civil Liberties Union-ACLU) என்பதை நிறுவியும் வெற்றி கண்டனர். இவ்வமைப்பு களின் மூலமாகப் பெண்கள் பெரும்பான்மையான தங்களின் கோரிக்கைகளை அரசியல் ரீதியாக நிறைவேற்றிக் கொள்ள முடிந்தது.

தீவிரவாதிகள் மற்றும் சமதர்மவாதிகளின் பெண்ணியக் கொள்கைகள் பல இடங்களில் பரவினாலும், அவை எல்லா இடங்களிலும் முழுமையான வெற்றி பெறவில்லை. பல சிறிய பெண் அமைப்புகள் தோன்றியும், மறைந்தும் தங்களின் கொள்கைகளிலும் முன்னேற்றத்திலும் வெற்றி பெறாது போயின. 1970இல் தீவிரப் பெண்ணிய இயக்கத்தின் வெளி யீடான இரண்டாம் ஆண்டின் முக்கிய குறிப்புகள் *(Notes from the Second Year) என்ற பிரதி 40,000க்கும் மேலாக விநியோ கிக்கப்பட்டது. இதன் மூலமாகத் தீவிரப் பெண்ணிய இயக்கத் தின் செயற்பாடுகள் 1971இல் உச்சக்கட்டத்தை அடைந்தன ஆனாலும், அமெரிக்க அரசியல் அமைப்புகளின் அடிப்படைக் கொள்கைகளினால் இவ்வியக்கம் சற்று வீழ்ச்சியைக் கண்டது.

1970 முதல் பெண்ணியக் கருத்தை எதிரொலிக்கும் பத்திரி கைகள் அதிகம் தோன்றலாயின. 1970இல் ஸ்ரூ (Shrew) என்ற பெண்கள் பத்திரிகை தன் ஏப்ரல் வெளியீட்டில் பெண்ணிய இயக்கத்திற்காக அதிக இடத்தை ஒதுக்கியது. அஃது மேலும் தங்களின் கொள்கைகளை முன்னேற்றிக் கொண்டு, பத்திரிகை களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயத்தையும் விளக்கியது.

இதே ஆண்டு, லண்டனில் 'தொடர்பு சாதனப் பெண்கள் குழு' ஒன்று பெண்ணியக்கத்தால் தோற்றுவிக்கப்பட்டது. அக் குழுவினர் எழுபதுகளின் தொடக்கத்தில் மக்கள் தொடர்பு சாதனங்களில் காணப்பட்ட பால் பேதம் பற்றித் தொடர்ந்து எடுத்துரைத்து, அதை ஓரளவு நீக்கி வெற்றி கண்டனர்.

பர்மிங்ஹாம் போஸ்ட் (Birmingham Post), தி டைம்ஸ் (The Times) தி கார்டியன், (The Guardiar) போன்ற பத்திரிகைகள் மகளிர் பக்கத்தில் சமையல் குறிப்புகள், அழகுக் குறிப்புகள்,

---

* தீவிரப் பெண்ணிய இயக்கக் கொள்கைகளின் தொகுப்பு.

பெண்களைத் தாக்கி எழுதும் கட்டுரைகள் போன்றவற்றை வெளியிட்டன. இவ்வாறான பெண்களை அடிமைப்படுத்தும், தாக்கி எழுதும் போக்கை, பெண்ணிய அமைப்புகள் எதிர்த்துத் தடை செய்தன. 1975இல் தேசிய பத்திரிகையாளர் சங்கம் (National Union of Journalists) பெண்களின் கருத்துப்படிவம் (Images of Women) என்ற நூலை வெளியிட்டது. அந் நூலைப் பெண்ணிய இயக்கங்கள் பெரிய அளவில் வரவேற்கவில்லை.

முன்பு கூறிய ஸ்ரூ (Shrew) என்ற பெண்கள் பத்திரிகை இங்கிலாந்தில் அதிகமாக விற்பனையாகிச் சாதனை படைத்தது. 74இல் ஒரே வருடத்தில் பலமுறை 5000 படிகளுக்கும் மேலாக விற்பனையாகியது. என்றாலும் ஆசிரியர் குழுவின் செயற்பாடுகள் அரசியலில் சில தொல்லைகளை ஏற்படுத்தியதால் அவ்வாண்டின் முடிவிலேயே பத்திரிகை நின்று போனது. மீண்டும் 76, 77இல் வெளி வந்தது.

சமதர்ம பெண்கள் (Socialist Women) என்ற பத்திரிகை 1970இல் தொடங்கப்பட்டது. இது, அகில உலக மார்க்சிய கொள்கையைத் தழுவி வெளி வந்தது. உழைப்பாளி வர்க்கத்தையும், தீவிர தொழிற்சங்கப் பிரச்சினைகளையும் ஆராய்ந்த இதுவும் 5000 படிகளுக்கு மேலாக விற்பனையாகியது.

1972 இல் ஸ்பேர் ரிப் (Spare Rip) என்ற பெண்கள் பத்திரிகை தொடங்கப்பட்டது. இதுவே, இங்கிலாந்தில் அதிக அளவில் விற்பனையான பெண்கள் பத்திரிகையாகும். 20,000 பிரதிகள், தொடங்கிய ஆண்டே விற்பனையானது. இப் பத்திரிகையின் முக்கிய நோக்கம் பெண் விடுதலையை முதற் செய்தியாக்குவதாகும். இன்றளவில் 32,000 பிரதிகள் விற்பனையாகின்றன.

1972 இல் பெண்களின் குரல் (Women's Voice) என்ற பத்திரிகையும் வெளிவந்தது. இது அகில உலகச் சமதர்மவாதிகளின் குரலை ஒலித்தது.

பெண்ணியக்கத்தில் உள்ள கல்வியாளர்களின் ஊக்கத்தினாலும் முயற்சியினாலும் பெண்களுக்கான நூலகமும், பெண்கள் பற்றிய ஆராய்ச்சி மையங்களும் 1975 இல் லண்டனில் தொடங்கப்பட்டன. ஃபாஸட் நூலகம் (Fawcett Library) என்பது இதன் பெயர். அங்குப் பெண்ணிய இலக்கியங்களின் தொகுப்பு வைக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிலும், எழுபதுகளில் மகளிர் இதழ்கள் அதிகம் தோற்றம் பெற்றன. 1968இல் பெண் விடுதலை இயக்கத்தின் குரல் (Voice of the Women's Liberation Movement) என்ற பத்திரிகையும், 1969இல் பெண்கள் (Women) என்ற பெண் விடுதலை பற்றிய பத்திரிகையும் தொடங்கப்பட்டு வெளியாயின. அதன்பின் நாடு முழுவதும் புதிய புதிய பெண்ணியப் பத்திரிகைகள் தோன்றின. முதுகுக்குப் பின்னால் (Off our backs), நான் ஒரு பெண் இல்லையா? (Ain't I a women). நான் ஒரு பெண், குழந்தை அல்ல (Every woman and It Ain't Me Babe) என்பன போன்ற வித்தியாசமான பெயர்களைத் தாங்கிய பத்திரிகைகள் வெளியாயின.

'மிஸ்' (Ms) என்ற அமெரிக்கப் பத்திரிகை மிகவும் புகழ் பெற்றது. இது, தொடங்கிய சில மாதங்களிலேயே மூன்று லட்சம் பிரதிகள் விற்றுச் சாதனை புரிந்தது. இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட கடிதங்கள் இப்பத்திரிகையை விமரிசித்து வெளியாயின. க்ளோரியா ஸ்டைனம் (Gloria Steinem) என்ற அம்மையார் இதன் ஆசிரியர். மாதாந்திரப் பத்திரிகையான மிஸ், வியாபார நிலையிலும் பெரும் வெற்றியைக் கண்டது.

1974 இல் வெளியான அமெரிக்க மகளிரியல் கல்வியாளர்களின், தேடல் (Quest) என்ற பத்திரிகையும், 1975இல் வெளியான அடையாளம் (Sign) என்ற பத்திரிகையும் பெரும் வெற்றியைக் கண்டன. பெண்ணிய நூல்களை வெளியிடத் தனி வெளியீட்டகங்கள் தோன்றின (Feminist Press,Daughters Inc., Diana Press—போன்றன). எழுபதுகளில் சுமார் 30, தேச அளவிலான பெண்கள் பற்றிய பத்திரிகைகளும், சுமார் 20, கல்வியாளர்கள் பத்திரிகைகளும் பெண்ணியம், பெண்கள் பிரச்சினை மற்றும் பெண் கல்வி இவற்றைப் பேசின. இங்கிலாந்தை விட அமெரிக்காவில்தான் பத்திரிகைகள் மூலம் அதிக அளவு பெண் விடுதலை, பெண்ணியம், பெண்கள் பிரச்சினை போன்றவை பேசப்பட்டன.

எழுபதுகளின் பிற்பகுதியில் பெண்ணிய இயக்கங்களின் பிரச்சாரம் அதிகமானது. அவர்களின் கவனம் ஏழைப் பெண்களின் மீதும், ஒரு பெற்றோரை உடைய குடும்பங்களின் (One Parent Families) மீதும் திரும்பியது.

வீட்டு வேலை, அதற்கான ஊதியம் பற்றிய பிரச்சினையை முதன் முதலில் 1972 இல் இத்தாலிய பெண்ணியவாதிகளான

மரியரோஸா டெல்லா கோஸ்டா (Mariarosa Della Costa) மற்றும் செல்மா ஜேம்ஸ் (Selma James) என்பவர்கள் பெண் அடிமைத்துவமும் அவர்களின் சக்தியும் (The Power of Women and Subversion of the Community) என்ற பெயரில் ஒரு கட்டுரையாக எழுதி, தேசிய பெண்கள் மாநாட்டில் வாசித்தளித்தனர். இம்மாநாட்டில் இந்தக் கருத்து ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இருந்த போதிலும்,ஓரளவிற்குப் பெண்ணியவாதிகளும், சமதர்மவாதப் பத்திரிகையாளர்களும் அதை வரவேற்றனர். பின்பு, பெண்கள் விடுதலை இயக்கம் தங்கள் கோரிக்கைகளுள் ஒன்றாக 'வீட்டு வேலைக்கான ஊதியம்' (Wages for House work) என்பதை எடுத்துக் கொண்டனர்; இஃது அவர்களால் பல மாநாடுகளில் எடுத்துரைக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டது. அவர்களின் விடாமுயற்சி காரணமாக மார்ச்சு 1975 இல் லண்டனில் வீட்டு வேலைக்கான ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டி, முதல் பொதுமக்கள் பிரச்சாரம் நடந்தது. அத்துடன், பெண்களின் கூட்டு சக்தி, பெண் ஓரினச் சேர்க்கையாளரின் உரிமை, கறுப்பர் இனப்பெண் உரிமை, விலை மாதர் உரிமை, பாலியல் வன்முறை எதிர்ப்பு என்பனவற்றைப் பற்றியும் பிரச்சாரங்கள் செய்யப்பட்டன.

தொடக்கத்திலிருந்தே, வீட்டு வேலைக்கான ஊதியம் பற்றிய பிரச்சாரம் பொது மக்களிடையே வரவேற்பு பெற்றது. அதற்குக் காரணம் அதனின் புதிய கண்ணோட்டமும், தீவிர நோக்குமாகும். 1981 இல் தி சன், டெய்லி மெயில், டெய்லி ஸ்டார் போன்ற பத்திரிகைகள், 'பெண்கள் உலகம், (Women's World) என்ற பத்திரிகை—முழுக்க முழுக்க பெண்கள் பற்றிய தகவல் தரும் பத்திரிகை, வெளியிட்ட வீட்டு வேலை ஊதியம் பற்றிய ஆய்வுக் கட்டுரையை ஆராய்ந்து, அதனடிப்படையில், ஒரு குடும்பப் பெண்ணின் ஊதியம் ஒரு வாரத்திற்கு E180 என நிர்ணயித்தன. இந்தக் காலக் கட்டத்தில் பல நூல்களின் மூலமும் இந்தப் பிரச்சாரம் பிரபலமடைந்தது. பின் 'அகில உலக' வீட்டு வேலைக்கான ஊதியம் (International Wages for House work) என்ற ஒரு செய்தித் தொகுப்பு லண்டன் உள்ளிட்ட பல நகரங்களில் வெளியானது. இவ்வாறு புதிய பெண்கள் விடுதலை இயக்கத்தின் வீட்டு வேலைக்கான ஊதிய நிர்ணயப் பிரச்சாரங்களும் அறிக்கைகளும் ஓரளவு வெற்றியைத் தந்தன.

அமெரிக்காவிலும், இதற்கு நிகரான போராட்டம் ஒன்று நடந்தது. சமூகப் பாதுகாப்பும். வீட்டு வேலைக்கான

சம்பளமும் (Social Security, wage for House work) என்று பெயர்பெற்ற அப்போராட்டமும் வெற்றி கண்டது.

1977 இல் லண்டனைச் சார்ந்த ஒரு குழு, 'ஏன் நீ மனைவியாக இருக்க வேண்டும்?' (Why be a wife?) என்ற புதுமைப் போராட்டம் ஒன்றை நடத்தி, திருமணமான பெண்களின் கவனத்தைக் கவர்ந்தது என்பதும் இங்குக் குறிப்பிடத் தக்கது.

லண்டன் கருக்கலைப்புச் செயற்பாட்டுக்குழு (London Abortion Action Group)வைச் சேர்ந்தவர்கள் தேசிய பெண்கள் கருக்கலைப்பு மற்றும் கருத்தடை போராட்டம் (National Women's Abortion and Contraception Campaign-NWACC) ஒன்றை நடத்தினர். இப் போராட்டத்தின் அடிப்படைத் தத்துவம் 'பெண் தனக்கு வேண்டியதைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளுதல்' (A woman's right to choose) என்பதாகும்.

1975 இல் தேசிய கருக்கலைப்பு போராட்டக் குழு (NAC-National Abortion Campaign) தன் தீவிரச் செயற்பாடுகளைத் தொடங்கியது. இக்குழுவினர் 1967 ஆம் வருடத்திய 'வெள்ளை அறிக்கை' (White's Bill) என்று சொல்லக்கூடிய சட்ட மசோதாவை 1976 இல் செயலிழக்கச் செய்தனர். சுமார் 7 வருடங்கள் தொடர்ந்து போராடி, கருக்கலைப்புக்கு எதிரான கொள்கைகளைச் சட்டமன்ற அளவில் முறியடித்தனர்.

அமெரிக்காவில் நடந்த கருக்கலைப்பு பிரச்சாரங்களில், அங்குள்ள 52 மாநிலங்களும், கருக்கலைப்புப்பற்றித் தங்கள் தங்களுக்கென சட்ட திட்டங்களைத் தனித்தனியாக நிர்ணயித்துக் கொண்டன. 1972இல் 'மிஸ்' என்ற பத்திரிகையில் 52 முக்கிய பெண்பிரமுகர்கள் சுதந்திரக் கருக்கலப்பை வற்புறுத்தி ஒரு விண்ணப்பத்தை வெளியிட்டனர். 1973இல் தேசிய கருக்கலைப்பு உரிமைசெயற்பாட்டுக் குழு (National Abortion Rights Action League) தோற்றுவிக்கப்பட்டது. எழுபதிலேயே ஹவாய் மற்றும் அலாஸ்கா தீவுகளும் மற்றும் 17 மாநிலங்களும் கருக்கலைப்புச் சட்டங்களைத் தளர்த்தி விட்டன என்றாலும், நாடு முழுவதுமான சட்டத்தைக் கொண்டுவர இக்குழு பாடுபட்டது. முடிவாக அவ்வாண்டு இறுதியில் அமெரிக்க உச்ச நீதிமன்றம் கருக்கலைப்பைச் சட்ட பூர்வமாக்கியது. தன்விருப்பக் கருக்கலைப்பு மற்றும் கருக்கலைப்புச் சாதனங்களின் முன்னேற்றத்தினால் பெண்கள் பாலியல் ஈடுபாட்டில் அதிக உரிமை பெற்றனர்.

ஜெர்மெய்ன் க்ரீர் (Germaine Greer) மற்றும் எரிகா ஜாங் (Erica Jong) என்ற பெண்கள், இயற்கைப் புணர்வு முறை என்று சொல்லப்பட்டு வரும் ஆண்-பெண் பாலுறவு முறை பெண்ணியத்தின் புனிதத் தன்மையைக் கெடுத்துவிடும் என்று ஆய்ந்துரைத்தனர்.

1970 முதல் அநேகமாக எல்லாப் பெண்ணியப் பிரிவுகளும், பாலியலைப் பொறுத்தவரை, ஆண், பெண் இருபாலாரும் அவர்கள் விருப்பப்படி வாழ்க்கையை அனுபவித்து தங்களின் பாலியல் உணர்வைப் பயமோ, பொறாமையோ, வேறுபாடோ இன்றி வெளிப்படுத்தலாம் என்று கருதினர். ஆனாலும், பெண் ஓரினச் சேர்க்கைக்கு எல்லாப் பெண்ணியக் குழுக்களின் முழு ஆதரவும் கிட்டவில்லை.

1970இல் அமெரிக்கப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் தங்களுக்கென சில கொள்கைகளை உடைய அமைப்புகளைத் தொடங்கினர். ஆனி கெய்ட்டின் (Anne Koedt) புணர்ச்சிப் பரவச புனைகதை (The Myth of the Vaginal Orgasm) என்ற கட்டுரை மக்களிடையே பரவலாகப் பரப்பபட்டது. அது அவர்களிடையே மிகப் பெரிய விவாதத்தையும் சலசலப்பையும் ஏற்படுத்தியது. அதே வருடத்தில் நியுயார்க் தீவிரவாதப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் பரப்பிய 'பெண் பெண்ணை அடையாளம் கண்டு கொள்ளல்' (Women Identified Women) என்ற துண்டுப் பிரசுரமும் விவாதத்திற்குரியதாக அமைந்தது. மேலும் 1970இல் கேட் மில்லட்டின், பாலியல் அரசியல் (Sexual Politics) என்ற நூல் வெளியாகி ஆணின் பாலியல் மேலாதிக்கத்தை எடுத்துரைத்தது. அவ்வருடம் டிசம்பரில் நியுயார்க்கில் கருக் கலைப்பு மற்றும் குழந்தைப் பராமரிப்பு இவற்றை மைய பொருளாக்கி ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது. இதில் பெண்கள் கூட்டம் ஒன்று தங்களை ஓரினச் சேர்க்கையாளர்கள் என்பதை இனம் காட்டிக் கொள்ள (செஞ்சாயலுடைய) இளநீலநிற கைப் பட்டையை அணிந்து சென்றனர். மேலும் அவர்கள் பெண்ணைப் பெண் நேசிப்பது என்ற கருத்தில் எந்த மாசும் வராத வரையில் தங்கள் அனைவரையும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் என்று கூறிக் கொள்வதில் தவறில்லை என்றும், சகோதரித்துவம் சக்தி வாய்ந்தது என்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர். இந்த ஊர்வலத்தைப் பத்திரிகையாளர்கள் அதிகமாகப் பிரபலப்படுத்தினர். அதன் விளைவாகப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் உலகளவில் உணரப்பட்டனர். 'NOW'

அமைப்பாளர்கள் இது குறித்து மிகுந்த கவலையடைந்தனர்.* பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் இந் நடவடிக்கை மூலம் தங்களை நேர்மை உடையவர்களாகவும், உறுதி உடையவர் களாகவும், உலகினருக்கு உணர்த்தினர்.

1971இல் கவலையில்லா விடுதலை முன்னணி (Gay Liberation Front-GLF) என்ற அமைப்பு தங்கள் கொள்கை விளக்க அறிவிப்பைப் பிரிட்டனில் வெளியிட்டது. 1973இல் இவ்வணி பலமாக வேரூன்றத் தொடங்கியது. 'ஸ்ரூ' பத்திரிக்கையில், இவ்வணியினர் 'பாலியல் அரசியல்' பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு, தங்களது கொள்கைகளை நிலைநாட்டிக் கொண்டனர்.

1974இல் எடின்பர்க்கில் தேசிய பெண் ஓரினச் சேர்க்கை யாளர்களின் மாநாடு நடந்தது. இதில் 300 பெண்கள் கலந்து கொண்டனர். அவ்வருட முடிவில் பெண் விடுதலை இயக்கம் (WLM) பெண் ஓரினச் சேர்க்கையாளர்களைத் தனித்து இனம் காட்டுதல் கூடாது என்றும், பாலியலில் சுய விருப்பு வெறுப்பு மதிக்கப்பட வேண்டும் என்றும் தம் கொள்கையை வெளி யிட்டது. 75, 76ஆம் ஆண்டுகளில் மீண்டும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களின் மாநாடு நடத்தப்பட்டது. 1976இல் பிரிஸ்டலில் நடந்த மாநாட்டில் பங்கேற்பாளர்கள் பலர் ஆண் களால் தாக்கப்பட்டனர்.

1975ஆம் வருடத்தில் சம ஊதியச் சட்டம் (Equal Pay Act) பாலியல் பாகுபாட்டுத் தடைச் சட்டம் (Sex Discrimination Act) என்பன பெண்ணிய இயக்கங்களின் முயற்சியால் செயல் பாட்டுக்கு வந்தன. சம ஊதியச் சட்டத்தில் பல ஓட்டைகள் இருந்ததால் பெண்ணியவாதிகள் இச்சட்டத்தைத் தாக்கினர். அதை ஈடுகட்டும் வகையில் 'பாலியல் பாகுபாட்டுத் தடைச் சட்டம்' அமைந்தது. இங்கிலாந்தில் தொழில் கட்சியில் (Labour Party) பெண்களுக்குச் சமத்துவம் அளித்தல் என்ற கொள்கை பெரும் வெற்றி கண்டது.

1975ஆம் ஆண்டை ஐக்கிய அமெரிக்க அரசு பெண்கள் ஆண்டாக அறிவித்தது. அடுத்து வரும் பத்து ஆண்டுகளையும் பெண்கள் பத்தாண்டுகள் (International Decade of Women)

---

* இதை, பெட்டி ஃப்ரைடன் 'வெளிர் நீல அணிவகுப்பு' (Lavender March) என்று குறிப்பிட்டுள்ளார்.

எனப் பிரகடனப்படுத்தியது. இதனைத் தொடர்ந்து மெக்சிகோ நகரில் நடந்த உலக மாநாட்டில் 5000க்கும் மேற்பட்ட சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் தீவிர வாதப் பெண்ணியவாதிகளும், பெண் ஓரினச் சேர்க்கையாளர் களும் சமதர்ம பெண்ணியவாதிகளும் தாங்கள் ஒதுக்கப்பட்ட தாகப் பயந்தனர். பெர்லினில் நடந்த அகில உலகப் பெண்கள் மாநாட்டிலும் மேற்கூறியவர்கள் இதே உணர்வை அடைந்தனர். அதே சமயத்தில் தாராளப் பெண்ணியவாதிகள், ஓரினச் சேர்க்கையாளர்களும் சமதர்மபெண்ணியவாதிகளும் அமெரிக்கப் பாரம்பரியத்தைப் பாதிப்புக்கு உள்ளாக்குகிறார்கள் என்று பயந்தனர்.

இதற்கிடையில் 1975இல் பிலடெல்பியாவில் நடந்த 'NOW' இன் மாநாட்டில், அதற்குள்ளேயே இருந்த ஒரு தீவிரவாதக்குழு 'NOW' இன் தலைவர்களைக் குற்றம் சாட்டியது. இதனால் இம்மாநாட்டில் குழப்பம் ஏற்பட்டு மாநாடு தோல்வியைத் தழுவியது. இதையொட்டி, பெட்டி ஃப்ரைடன் 'NOWஇன் தீவிரச் செயல்பாட்டிலிருந்து விலகிக் கொண்டார். அந்த அமைப் புக்கு அப்பொழுது மனம் திறந்த கடிதம் ஒன்றை அனுப்பினார். அதில் 'NOW'இன் கொள்கைகளும், செயற்பாடுகளும் திசை திருப்பப்படுவதாகவும் விரைவில் இவ்வமைப்பிற்கு ஏற்படும் அபாயநிலை பற்றியும் பின் விளைவுகளைப் பற்றியும் எச்சரித் திருந்தார்.

ஆக, எழுபத்தைந்து முடிவில் அமெரிக்காவிலும், இங்கிலாந் திலும் பெண்ணிய இயக்கங்கள் ஒன்றை ஒன்று குற்றம் சாட்டிக் கொண்டு, திசை தெரியாமல் நின்றன.

## 1975க்குப் பின் பெண்ணியம்

1975க்குப் பின் வந்த ஆண்டுகளில் பெண்ணிய இயக்கங் களின் நடவடிக்கைகளை ஆராயும் போது, இக்காலக்கட்டத்தில் பெண்ணியத்திற்குள் மிகப் பல பிரிவுகள் இருந்தன என்பது அறியப்படுகிறது. அப்பிரிவுகள், தங்களுக்கென்று தெளிவான கொள்கைகளைக் கொண்டிருக்கவில்லை. ஒரு சாரார், இன்னொரு சாராரோடு முழுவதுமாக ஒத்துப் போகாமல், ஒரு பாதி ஒத்துப் போகும் நிலை காணப்பட்டது. தொடக் கத்தில், சமதர்ம பெண்ணியவாதிகளுக்கும், தலைமை வேண் டாப் பெண்ணியவாதிகளுக்கும் (Anarchist) இடையே நேரடி யான பிரிவினை இருந்தது. சமதர்மவாதிகள் அரசியல் அமைப்பு

களில் ஆர்வம் காட்டினர். தலைமை வேண்டாப் பெண்ணிய வாதிகள் அமைப்புகளை அடியோடு வெறுத்தனர். (No Organisation). 1976இல் இருபால் சேர்க்கையை ஆதரிக்கும் சமதர்ம வாதிகளுக்கும், பெண் ஓரினச் சேர்க்கையை ஆதரிக்கும் தீவிரப் பெண்ணியவாதிகளுக்கும் இடையே ஒரு பிளவு காணப்பட்டது. இதில் வேடிக்கை என்னவென்றால் எல்லாப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களும் இருபால் சேர்க்கையை எதிர்த்து விட வில்லை. அதுபோல், எல்லாச் சமதர்மவாதிகளும் பெண் ஓரினச் சேர்க்கையை ஒதுக்கவில்லை. அதாவது அவரவர் தம் பாலியல் அடிப்படை நோக்கை வைத்து அவர்களை இனம் பிரித்துப் பார்க்க இயலவில்லை.

1975இல் சிவப்புக் காலுறையாளர்கள் 'பெண்ணிய புரட்சி' (Feminist Revolution) என்ற கட்டுரைத் தொகுப்பை வெளி யிட்டனர். இக்கட்டுரை, தாராளப் பெண்ணியம் தாங்கள் குறித்த இலக்கை அடைந்துவிட்டது என்றும், தற்போது பெண்ணிய வரலாற்றில் தீவிரப் பெண்ணியவாதமே குறிப்பிடத் தக்க சிறப்பு இடத்தைப் பெற்றுள்ளது என்றும், முழு பெண்ணிய இயக்கமும் புரட்சியை நோக்கித் திசை திருப்பப்பட்டுள்ளது என்றும் கூறுகின்றது.

1975இல் பெண்ணிய இயக்கத்தில் தீவிரவாதிகளின் கை ஓங்கியது. குறிப்பாக, அமெரிக்காவில் பெண் ஓரினச் சேர்க்கை யாளர்கள் செல்வாக்குப் பெற்றனர். இவர்கள், 'பிரிவினையியம் (Separatism) என்ற கொள்கையை வளர்த்தனர். இதன்வழி ஆண்களிடமிருந்து விடுதலை வேண்டும் (Liberation from men) என்ற கருத்தாக்கத்தைப் பரப்பினர்.

பிரிவினை வாதத்தோடு தொடர்புடைய கொள்கைகளைக் கொண்டு 'புரட்சிப் பெண்ணியம்' (Revolutionary Feminism) என்ற ஒன்று 1977இல் தொடங்கப்பட்டது. இது, ஆணை எதிரியாகக் கருதி, அவர்களிடமிருந்து முற்றிலுமாக நீங்கி வாழ்வது என்பதைக் கொள்கையாகக் கொண்டு, அதற்கு வித்திடும் திருமண முறையை ஒதுக்கியது.

தீவிரவாதிகள், தாங்கள் வலிமையாகக் கால்ஊன்றி நின்ற பின் தாராளவாதிகளைக் குறைக் கூறத் தொடங்கினர். பிரபலம் வாய்ந்த தாராளவாதிகளின் பெயரை ஒடுக்குவது தீவிரவாதி களின் நோக்காக இருந்தது. 'மிஸ்' (Ms) பத்திரிகையின் ஆசிரியர் க்ளோரியா ஸ்டைனும், பெட்டி ஃபிரைடனும் சக்தி

வாய்ந்த தாராளப் பெண்ணியவாதியாவார்கள். தீவிரவாதிகளின் குறிக்கோள், குறிப்பாக இவர்களைக் குறை கூறுவதாகும்.

1975இல் சிவப்புக் காலுறையாளர்கள், க்ளோரியா ஸ்டைன், மத்திய உளவுத் துறையுடன் (CIA) கொண்டிருந்த தொடர்பை வன்மையாகக் கண்டித்தனர். ஸ்டைன், தான் சார்ந்துள்ள பெண்ணிய இயக்கத்தின் மூலமாக அதற்குப் பதிலுரைத்தார். அவருக்குப் பிரபல பெண்ணியவாதிகளின் ஆதரவும் கிடைத்தது.

1977இல் தேசிய மாநாடு லண்டனில் நடந்தது. அதில் பங்கேற்ற அநேக பெண்கள், பெண்ணிய இயக்கம் ஆணின் வன்முறையை வன்மையாகக் கண்டித்துக் குரல் எழுப்ப வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தனர்.

1978இல் பிர்மிங்காம் தேசிய மாநாட்டிலும் இதே கோரிக்கை வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் புரட்சிப் பெண்ணியக் குழு ஒன்று பெண் இயக்கங்களின் கூட்டு நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு ஏழு கோரிக்கைகளை வைத்தது. அதில் ஏழாவது கோரிக்கையானது, பெண்களுக்கு எதிரான ஆண்களின் வன்முறையானது ஆண் மேலாதிக்கத்தையும், பெண்ணை அடக்கி ஆளும் நிலையையும் உணர்த்துகிறது. எனவே நாங்கள் வேண்டுவது, 'அச்சுறுத்துவதிலிருந்தும் வன்முறையிலிருந்தும் பாலியல் வன்கண்மையிலிருந்தும் விடுபட வேண்டும்' என்பதாகும்.

இந்தப் புதிய கோரிக்கையானது, சம ஊதியம், சம வாய்ப்பு, கருக்கலைப்பு, பண உதவி மற்றும் சட்ட உதவி போன்ற கோரிக்கைகளுக்குச் சமமாக வைக்கப்பட்டது. இதற்குப் பல எதிர்ப்புக் குரல்கள் எழும்பின. இதைத் தொடர்ந்து எழுந்த விவாதங்களில், தீவிரவாதிகள் ஆண்கள் தங்கள் எதிரிகள் (Men are the enemy) என்றும், சமதர்மவாதிகள், ஆணாதிக்க அமைப்புத் தங்களுக்கு எதிரானது (Masculine institution is the enemy) என்றும், கருத்துரைத்தனர். இறுதியில் புதிய கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எழுபதுகளின் மத்தியில் தொடங்கிப் பெண்ணியக் குழுக்கள் வன்முறை, பாலியல் வன்முறை, ஆபாச இலக்கியம் இவற்றிற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடலாயின. 1976இல் லண்ட

னில், பாலியல் வன்முறை எதிர்ப்பு மையம் (Rape crisis Centre) ஒன்று பெண்ணியக்கத்தால் தொடங்கப்பட்டது. அதைப் பின்பற்றிப் பிரிட்டனில் உள்ள மிகப்பெரிய நகரங்களிலும் இவ்வமைப்புத் தோற்றுவிக்கப்பட்டது. இஃது பாலியல் வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவு தந்து வழிகாட்டும் உன்னத தொண்டாற்றியது.

அமெரிக்காவிலும் பாலியல் வன்முறைக்கு எதிரான பிரச்சாரங்களில் சில பெண்ணியக் குழுக்கள் ஈடுபட்டன (Women Against Rape). 1977இல் இராணுவ வீரன் ஒருவன் 17 வயது பெண்ணைப் பலாத்காரம் செய்ததை, இக்குழுக்கள் எதிர்த்துக் குரல் கொடுத்தன. 1977, 78 இல் பிரிட்டனில் சில குழுக்கள் பெண்கள் மீதான வன்முறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலும் ஆபாசத் திரைப்படம் மற்றும் இலக்கியம் இவற்றிற்கு எதிராகவும் இரவு நேர ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தினர். இதைச் 'சீர்படுத்தும் இரவு' (Reclaim the Night) என்று பெயரிட்டு அழைத்தனர். இஃது, லீட்ஸ், மான்செஸ்டர், பிரிண்டல்யார்க் போன்ற இடங்களில் நடத்தப்பட்டது. சோஹோ (Soho) என்ற இடத்தில் திரைப்படத் தொழிலாளர்களுக்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது காவல் துறையினர் அதை முறியடிக்க தடிஅடி நடத்தினர். அப்பொழுது 16 பெண்கள் கைது செய்யப்பட்டனர். இதைப் பெண்ணியவாதிகள் 'சோஹோ பதினாறு' (Soho Sixteen) என்று குறித்தனர்.

ஆபாச இலக்கியம் மற்றும் திரைப்படத்தை எதிர்த்து அமெரிக்கப் பெண்ணியக் குழுக்களும் பல போராட்டங்கள் நடத்தின. ஆபாசத்திற்கு எதிரான பெண்கள் குழு (Women Against Pornography) ஒன்றும், பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்க்கும் பெண்கள் குழு (Women Against Violence Against Women) ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டது.

1979 இல் 'வயர்ஸ்' செய்தி மடலில் (Wires News Letter) லீட்ஸ் புரட்சிப் பெண்ணிய வாதிகளின் (Leeds Revelutionayr Feminist) 'அரசியல் பெண் ஓரினச் சேர்க்கையியம்: இருபால் சேர்க்கையை எதிர்த்த வாதம்' என்ற கட்டுரை வெளியானது. இதில், எல்லாப் பெண்ணியவாதிகளும் அரசியல் ஓரினச் சேர்க்கையாளராக இருக்க வேண்டும் என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது, பெண்ணியவாதிகள் என்பவர்கள்

கட்டாயமாக ஆண்களோடு உறவு வைத்துக் கொள்ளக்கூடாது. ஆனால் கட்டாயமாகப் பெண்களோடு உறவு அல்லது புணர்வு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை என்று விளக்கியுள்ளது. மேலும், இக்கட்டுரை, பெண்கள் ஆண்வழிச் சமூக அமைப்புக்கு எதிராகப் போராடி வெற்றி பெற வேண்டுமானால், பாலியல் நெறியில் ஆண்களோடு உறவு வைத்துக் கொள்ளாமை ஒன்றே வழிமுறையாகும் என்கின்றது. மேலும், சில கட்டுரைகள் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் மிகச் சிறிய குழுக்களாக இயங்கினாலும் அக்குழுக்கள் பெண்ணி யக்கத்திற்கு ஒரு முன்னணிப் படையாகத் திகழ்கின்றன என்று கருத்துரைக்கின்றன. அரசியல் பெண் ஓரினச்சேர்க்கை யாளர்கள், எல்லாப் பெண்களும் ஆண்களோடு கொள்ளும் பாலியல் உறவை விலக்கிக் கொண்டார்களேயானால் புரட்சி கரமான மாற்றம் ஏற்படும் என்கின்றனர். அத்துடன் பெண்ணியம் என்பது கோட்பாடு, பெண் ஓரினச் சேர்க்கை என்பது செயல்முறை (Feminism is the theory and lesbianism is the practice) என்றும் பெண்ணியம் என்பது ஒரு முறையீடு, அதற்குத் தீர்வு பெண் ஓரினச் சேர்க்கை (Feminism is the complaint, and lesbianism is the solution) என்றும் வெளிப் படையாகப் பிரகடனம் செய்தனர். தீவிரவாதப் பெண்ணிய வாதிகள் ஒரு பெண்ணின் பெண்ணியக் கொள்கை அவளுடைய பாலியலால் உறுதிப்பட வேண்டும் என்றும், அதன் மூலம்தான் அப்பெண் தன்னை ஒரு அடிப்படையில் ஆதாரமிக்க பெண்ணிய வாதியாக இனம் காட்டிக் கொள்ள முடியும் என்றும் உறுதியாக கருத்துரைக்கின்றனர். இவ்வாறு தீவிரவாதப் பெண்ணியவாதி களும், அவர்களைச் சார்ந்தவர்களும் 'பாலியல் அரசியலை' அடிப்படைப் பெண்ணிய நோக்காகப் பிரகடனப்படுத்த, தாராளவாதிகள் அப்போக்கிலிருந்து அடியோடு விலகி நின்றனர். அதாவது பிரிவினை வாதிகள் அல்லாதவர்கள் அல்லது ஆணை இனங்காணும் பெண்ணிய வாதிகள் (Male identified feminist) அல்லது இருபால் சேர்க்கையாளர்கள் என்று கருதப்படும் தாராளவாதிகள் தங்களின் பெண்ணியக் கொள்கையைப் பாலியலின் மூலம் இனங்காட்டிக் கொள்ள வில்லை.

எழுபதுகளின் இறுதியில் சமதர்ம பெண்ணியம் வீழ்ச்சியை நோக்கி அடியெடுத்து வைக்கத் தொடங்கியது. அதில், ஆண் மேலாதிக்க இடதுசாரிகள் தலைதூக்கத் தொடங்கினர். குறிப்பாக, தேசிய கருக்கலைப்புப் பிரச்சாரம் (National

Abortion Campaign) என்ற அமைப்பில் பெண்கள், ஆண்களோடு சேர்ந்து பணியாற்றுவதில் மிக இடர்ப்பாடுகள் அனுபவித்தனர். 1977 இல் பாரிஸிலும் ஆம்ஸ்டர்டாமிலும் நடந்த மாநாடுகள் சமதர்ம பெண்ணியத்தின் வீழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்ந்தன.

எழுபதுகளில், பெண்ணியக் கொள்கைகளையும், கருத்துக்களையும் எழுதிய அட்ரைன் ரிச், மேர்லின் ப்ரென்சு, கேட் மில்லட், நான்ஸி ப்ரைட், ரீட்டாமே ப்ரௌன் போன்ற பெண்மணிகள் பிரபலமடைந்தனர். இவர்கள் வெளியீடுகள் வணிக நிலையிலும் பெரும் வெற்றி கண்டன.

மிக நெடுங்காலமாகக் கலைத்துறையில் பெண்கள் சார்பு நிலையில் இருந்து வந்திருக்கின்றனர். இந்நிலை எழுபதுகளின் பிற்பகுதியில் மாற்றம் பெறத் தொடங்கியது. பாட்டு, அரங்கு, ஓவியம், சிற்பம், புகைப்படக்கலை, திரைப்படம், அச்சுக்கலை, இலக்கியப் படைப்புக்கள் இவற்றில் பெண்கள் தங்களின் திறமைகளை வெளிக்காட்டி, புதிய போக்கையும் நோக்கையும் வேறுப்படுத்திக் காட்டினர். இதற்குப் பெண்ணிய இயக்கங்கள் போதிய அளவு துணை நின்றன.

பெண்ணியவாதிகள் கல்வித்துறையிலும் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். 'மகளிரியல் கல்வி' (Women's Studies) என்ற புதிய துறையைத் தோற்றுவித்து வளர்த்தனர். இதன் மூலம் பெண்கள் பற்றிய ஆய்வுகள் வளர்ச்சி பெற்றன. எழுபதுகளில் 'அனைத்துலக மகளிர் தகவல் தொடர்பு சேவை' (ISIS) மற்றும் அனைத்துலகப் பெண்ணிய கூட்டமைப்பு (International Feminist Network-IFN) என்பவை தோற்றம் பெற்றன. இவை, உலகெங்கிலும் உள்ள மகளிரிடையே தகவல் தொடர்பை ஏற்படுத்தின.

## எண்பதுகளில் பெண்ணியம்

எழுபதுகளின் கடைசியில் (அமெரிக்கா மற்றும் பிரிட்டனில்) பெண்ணிய இயக்கத்தில் தோன்றிய பல குழுக்கள், அவ்வியக்கத்தின் அடித்தளத்தைப் பாதித்தன. பாலியல் அரசியலுக்கும், பொருளாதார தேவைக்கும் இடையே சமநிலை இல்லாமல் போனது. எனவே, எண்பதுகளில் பெண்ணிய இயக்கத்தை

மிகவும் சக்திவாய்ந்ததாகவும், கவர்ந்திழுப்பதாகவும் அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதே சமயத்தில், எண்பதுகளில் பெண்ணியம் உலகளாவிலான இயக்கமாக உருப்பெற்று, மக்களின் அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாகிவிட்டது. அரசு, அரசியல், வணிகச் சங்கங்கள், கல்வி நிலையங்கள், தொடர்பு சாதனங்கள் என்ற பலதர அமைப்புகளிலும் பெண்களின் எழுச்சி அதிகரித்தது. மகளிர் நலவாழ்வு மையங்கள், பெண் எழுத்தாளர்கள் அமைப்பு, வேலை பார்க்கும் மகளிர் சங்கங்கள், மகளிர் கூட்டுறவு சங்கங்கள், மகளிர் புத்தக வெளியீட்டாளர் சங்கங்கள், சமதர்ம பெண்கள் சங்கம், தேசிய கருக்கலைப்பு பிரச்சாரக்குழு, பாலியல் வன்முறை எதிர்ப்புக் குழு, மகளிர் பாதுகாப்பு மையங்கள் என்று உலகெங்கிலும் பெண்களுக்கான பலவித அமைப்புகள் தோற்றம் பெற்றன.

1981 இல் அனைத்துலகப் பெண்ணியக் கூட்டம் ஒன்று இஸ்ரேலில் ஹபியா என்ற இடத்தில் நடந்தது. இதில், ஐரோப்பா, இந்தியா, ஆப்பிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், ஜப்பான், லத்தீன் அமெரிக்கா, வட அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து பெண்ணியக் கல்வியாளர்களும், செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். இம்மாநாட்டில் குடும்பம், குழந்தைப் பிறப்பு, குழந்தை நலம், பொருளாதார விடுதலை இவற்றைப் பற்றிய விவாதங்கள் மேற்கொள்ளப் பட்டன.

1981 இல் 'இருபால் சேர்க்கைப் பெண்ணிய வாதத்திற்கும் அரசியல் பெண் ஓரினச் சேர்க்கையியத்திற்கும் இடையேயான வாதப் பிரதிவாதங்கள் (The debate between hetero sexual feminism and political lesbianism) என்ற துண்டுப் பிரசுரம் வெளியானது. இதில், இருபால் சேர்க்கைப் பெண்ணியம் ஆணின் மேலாதிக்கத்தை ஆதரிப்பது என்றும், இருபால் சேர்க்கைப் பெண்ணிய வாதிகள் பகைவருடன் உறவு வைத்துக் கொண்டவர்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. அட்ரைன் ரிச் என்பவர் 'கட்டாய இருபால் சேர்க்கையும் பெண் ஓரினச் சேர்க்கை முறையும் (Compulsory Hetero Sexuality and lesbian Existance) என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டார். இந்நூல் இருபால் சேர்க்கையைப் பெண்ணிய நோக்கில் பகுத்தாய்ந் துள்ளது.

**1981**இல் பெட்டி ஃப்ரைடன் 'இரண்டாவது கட்டம்' (Second Stage) என்ற நூலை எழுதி வெளியிட்டார். இந்நூலில் தாய்மைப்பேறு என்பது ஒரு தனிப்பட்ட நபரின் உரிமைப் பிரச்சினையாகும் என்று விமர்சித்துள்ளார். அதாவது ஆண்களின் மூலம் குழந்தை பெறுவது தவறு என்ற கருத்தை அவர் ஆதரிக்கவில்லை. மேலும், அவர் தீவிரப் பெண்ணியவாதிகளைப் பெண்களின் எதிரியாகக் கருதினார். (Radical Feminist as the enemy). அத்துடன் மட்டுமன்றி, 'நம் இயக்கம் ஆபத்தில் இருக்கிறது. எதிர் சக்திகள் நம்மை ஒடுக்கப் பார்க்கின்றன' என்று எச்சரிக்கையும் விடுத்தார். இதனால், பெட்டி ஃப்ரைடன் பலரால் பலவிதமாக விமர்சிக்கப்பட்டார். ஃப்ரைடனின் இம்மாற்றத்தை வைத்து சில்லா எய்சன்ஸ்டீன் (Zillah R. Eisenstien) என்பவர், அவரைத் 'தற்காலத்திய பாரம்பரிய பெண்ணியவாதி' (Neoconservative Feminist) என்றும் மறுபார்வை கொண்ட தாராளப் பெண்ணியவாதி (Revisionist liberal feminist) என்றும் மதிப்பிட்டுள்ளார்.

பெண்ணியம் என்ற இயக்கத்தின் செயல்பாடுகளை மதிப்பிட்டுப் பார்க்கும் போது, அஃது உலக அளவில் ஒரு மறுமலர்ச்சிக்கு வித்திட்டதை அறிய முடிகிறது. அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் பெண்ணியம் பல வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மரபுவழிப் போக்கை (Conventional Pattern) மாற்றியது. அமெரிக்காவில் தாராளப் பெண்ணியம் ஏற்படுத்தியுள்ள அமைப்புகள் சுமார் 3 லட்சம் நடுத்தர வர்க்கப் பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்து வருகிறது. பெண்ணிய இயக்கங்கள், மக்கள் தொடர்பு சாதனங்கள், கல்வித்துறை, வணிகச் சங்கம் இவற்றில் பெருமளவு மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. அரசியலில் பெண்களுக்குப் பல அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தந்துள்ளன. மேலும் இவ்வியக்கம் பெண்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

மரபுவழி வந்த பழம் பண்பாட்டைக் கொண்ட பிரான்ஸ், ஜெர்மன், இத்தாலி, ஸ்பெயின், பெல்ஜியம், கிரீஸ் போன்ற நாடுகளில் பெண்ணியம் மிகப் பெரிய சவாலை எதிர்த்து வேரூன்றி, குறிப்பிடத்தக்க வெற்றியும் பெற்றுள்ளது. கத்தோலிக்க நாடான இத்தாலியில் கூட இவ்வியக்கம் விவாகரத்து உரிமை, கருக்கலைப்பு உரிமை என்பவற்றைப் பெற்றுத் தர முடிந்தது ஒரு சாதனையாகும்.

## பெண்ணியத்தின் எதிர்காலம்

பெண்ணியவாதிகள் அவரவர் நோக்குப்படி மாறுபட்ட கருத்துக்களைக் கொடுத்துக் கொண்டு வருவதால், மக்களின் மனத்தில் தாங்கள் ஒரே அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற நம்பிக்கையை உண்டாக்கவில்லை. மேலும், பல்வேறு குழுக்களாகப் பிரிந்துவிட்ட இயக்கமாக, தெளிவான ஆணித்தரமான கொள்கைகளைத் தராத இயக்கமாக, பெண்ணிய இயக்கம் இன்று மக்களால் உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில் உலக அரங்கில் பெண்ணிய இயக்கத்தின் முன் மூன்று கேள்விகள் வைக்கப்படுகின்றன.

1. நாளைய உலகில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துமா?

2. சமூகச் சீர்திருத்தத்தை இலக்காகக் கொள்ளுமா?

3. ஆண் வேறு, பெண் வேறு என்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளுமா?

ஆண், பெண் சமம் என்ற கொள்கையை மேற்கொள்ளுமா? இவற்றுள் எதைத் தன் பாதையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டாலும், நெருக்கடி சமயத்திலும், இடர்பாடுகளை எதிர் கொள்ளும் போதும், உலக அளவில் பெண்ணிய இயக்கங்கள் ஒன்றிணைந்து ஒருமைப்பாட்டுடன் கருத்து வேறுபாடுகளின்றித் தீவிரமாகச் செயல்பட்டால்தான் தொடர்ந்து வெற்றிப் பாதையில் செல்ல இயலும்.

# பெண்ணிய வகைகள்

பெண்ணியம் என்பது ஒரே கொள்கை உடைய இயக்கமல்ல. இதில் இணைந்துள்ள பெண்களின் வாழ்க்கைச் சூழலுக்கும், அனுபவத்திற்கும் ஏற்ப இவ்வியக்கத்தில் பலவிதமான கருத்துக் கள் கால்கொண்டு எழுச்சி பெற்றுள்ளன. அவற்றில் தாராளப் பெண்ணியம் (Liberal Feminism), சமதர்ம பெண்ணியம் (Socialist Feminism), தீவிரவாதப் பெண்ணியம் (Redical Feminism) என்பன, வெகு முக்கியத்துவம் வாய்ந்த கருத்தாக்கங் களாகும்.

இப்பெண்ணியவாதங்கள் பெண் விடுதலை, பெண் உரிமை என்பவற்றை மைய இலக்காகக் கொண்டிருந்தாலும் தங்க ளுடைய சில கொள்கைகளிலும், செயற்பாட்டிலும் வேறுபட்டி ருந்தன. அதற்கேற்ப அவர்களிடையே மிதவாதப் போக்கும், தீவிரவாதப் போக்கும் எழுச்சிப் பெற்றன.

பெண்ணடிமைத் தனத்தை நீக்கவும் பெண்களுக்கு உரிமை பெற்றுத் தரவும் தோற்றம் பெற்ற பெண்ணியவாதம், காலப் போக்கில் எழுந்த கொள்கை வேறுபாட்டால் ஆணாதிக்க எதிர்ப்பு பிரச்சாரமாகத் திசை திரும்பி, பின் ஆண் சமூகத்தை ஒதுக்கும் போக்காக வளர்ந்தது. அதற்கான சூழலையும் கார ணங்களையும் மூன்றுவிதக் கொள்கைகளை ஆராய்வதால் தெளிவுபடும்.

## 1. தாராளப் பெண்ணியம் (Liberal Feminism)

தாராளப் பெண்ணியத்தின் தொடக்க காலம் 18ஆம் நூற் றாண்டு. அக்காலக்கட்டத்தில் ஏற்பட்ட தத்துவப் புரட்சி மூலமே முதன் முதலாகத் தாராளப் பெண்ணியத்தின் கொள்கை கள் வேர்விட ஆரம்பித்தன. மேற்கத்திய நாடுகளில் அரசியல் கலாச்சாரத்தில் பகுத்தறிவு வாதம் (Rationalism) இடம் பெறத்

தொடங்கியது. இதனால் ஆட்சி ஆதிக்கக் கொள்கையை எதிர்த்தல், குடியாட்சி,பேச்சுரிமை என்ற இவையெல்லாம் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இக்காலக்கட்டத்தில் அதே பகுத்தறிவு எழுச்சியினால் விடுதலை உணர்விற்கும், பெண்களின் அடிமை நிலைக்கும் ஒரு நல்லுறவு தோன்றித் தாராளப் பெண்ணிய இயக்கத்திற்கு வித்திட்டது.

இவ்வியக்கம் தனி ஒருவரின் விடுதலை, மன மகிழ்ச்சி இவை அரசாங்கத்தாலும் சமூகத்தாலும் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நம்பிக்கையோடு தொடங்கப்பட்டது.

18ஆம் நூற்றாண்டில் தத்துவவாதிகள் மற்றும் எழுத்தாளர்கள் ஆண்களாகவே இருந்தனர். அவர்கள் விடுதலை பற்றிப் பேசியபோதும் அவர்களின் வாதங்கள் யாவும் ஆணினத்தின் மேம்பாடு பற்றியும், அவர்களின் விடுதலையைப் பற்றியும் மட்டுமே இருந்தது; பெண்கள் தங்களுக்காகப் படைக்கப்பட்ட, தங்களுக்கென்றே அடிபணிந்து போக வேண்டிய பகுத்தறிவில்லாத பால் வர்க்கம் என்பது அவர்கள் கருத்தாக இருந்தது.

அக்கருத்தை மாற்றியவர் மேரி வோல்ஸ்டோன் கிராப்ட் (Mary Wollstone Craft) என்பவராவார். இவர் 1790களில் அதிகம் படித்த பெண் தத்துவ ஞானியாவார். இவரே பெண் விடுதலை பற்றிப் பேசி 'தாராளப் பெண்ணியத்தின்' தோற்றத்திற்கு வித்திட்டார். சமூகத்தில் பெண்களுக்குச் சம உரிமை, எல்லா நிலைகளிலும் அவர்களுக்குச் சம வாய்ப்புகள் கொடுத்தல் என்பதே இவரது வாதமாகும். 1792இல் இவர் எழுதிய 'பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு' (A Vindication of the Rights of Women) என்ற நூலில் ஆண்கள் தங்களுக்கான உரிமையைச் சரிநிகராகப் பெண்களுக்கு விட்டுக் கொடுத்தும் அவர்களுக்கு ஓர் உயர்வான நிலையைக் கொடுத்தும் வாழ வேண்டும் என வற்புறுத்தியுள்ளார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இவரின் கருத்துக்கள் படிப்படியாக அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் அதிகம் பரவித் தாராளவாதத்திற்கு அடிகோலியது. தாராளவாதத்திற்கு மேலும் துணை போனவர்கள் ஜான் ஸ்டூவர்ட் மில் மற்றும் ஹேரியட் டெய்லர் என்பவர்களாவர். 1869இல் ஜான் ஸ்டூவர்ட் மில் எழுதிய 'பெண் அடக்கு முறை' (Subjecation of Women) என்ற நூல் தாராளவாதக் கருத்தை வளர்த்தது. பெண்களின் முன்னேற்றத்தை இந்நூலில் விரிவாக ஆராய்ந்துள்ளார். மில், பெண்கள் தம் கௌரவத்தைக் காத்துக் கொள்ள தாம் விரும்பியபடி பற்பல

பணிகளை ஏற்பதும், சொத்தில் பங்கு பெறுவதும், ஓட்டுரிமை பெறும் தகுதியைப் பெறுவதும் மிக இன்றியமையாதது என்று எடுத்துரைக்கின்றார். கல்வி அறிவு ஒன்றுதான் பெண்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்க முடியும் என்றும் திருமண ஒப்பந்தம் மாற்றப்பட வேண்டும் என்றும், பெண்கள் வேலைக்குச் சென்று கொண்டே குடும்பத்தையும் நிர்வகித்து, அதில் ஆணுக்கு நிகரான சமத்துவ இடத்தை நிலைநாட்ட வேண்டும் என்றும் போதித்தார்.

**சமூகத்தில் தங்களுக்கு நியாயமான வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்** என்பதே தாராளவாதிகளின் கோரிக்கையாகும். தாராளப் பெண்ணியமானது **ஏற்கனவே இருக்கும் சமூக அமைப்பை முன்னேற்றி, தேவையான மாறுதல்களைச் செய்து, அதன் மூலம் பெண்களுக்குத் தேவையான அளவு விடுதலையும் மதிப்பும், தகுதியும் பெற்றுத் தர முயன்றது.**

தாராளப் பெண்ணியம் புரட்சியின்றிப் பொருளாதாரத்திலும், சட்டத்திலும் மாறுதலைக் கொண்டுவர முயன்றது. இஃது அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளைப் பெரிய அளவில் தழுவி தனி ஒரு பெண்ணின் பிரச்சினை முதல் அரசியலில் பெண்களின் பங்கு, உயர்கல்வி, மக்கள் தொடர்பு ஊடகம், சம ஊதியம், பாலியலில் சம பங்கு நிலை போன்றவை வரை ஆராய்கிறது.

தற்போதைய கலாச்சாரத்தில் காணப்படும் 'பாலியல் பங்கு' (Sexual Role) என்பது இன்று புதிதாகத் தோன்றியதல்ல. பண்டைக் காலத்திலேயே உண்டானது. பாலியல் பங்குநிலை என்பது மனிதரால் உருவாக்கப்பட்டது. எனவே, அது மனிதராலேயே அழிக்கப்பட வேண்டும் என்பது தாராளவாதிகளின் கருத்தாகும்.

தனிநபர் ஒருவன் குடும்பம், சமூக அமைப்பு, கல்வி, மக்கள் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றின் மூலமாகப் பயிற்றுவிக்கப்படுகிறான். அவனுக்குள் இவற்றின் தாக்கம் அவனறியாமலேயே ஏற்பட்டு விடுகிறது. இப்புறத் தாக்குதல்கள் இளைஞர்களிடம் போட்டி போடும் மனப்பான்மையையும் எதற்கும் உணர்ச்சி வசப்படாமல் இருக்கும் ஒரு தன்மையையும், தன்னை ஆண்மகன் என்று அடையாளம் காண்பித்துக் கொள்ளும் திறனையும் வளர்க்கிறது. அதே சமயத்தில் பெண்களிடம் எதிலும் கூச்சத்துடன் அடங்கி இருக்கும் தன்மையை வளர்க்

கிறது. இப்படி சமூகக்கருவிகளால் உருவாக்கப்படும் ஆண்/பெண் என்ற பங்குநிலைகள் பெண்களின் தாழ்வு நிலைக்குக் காரணமாக அமைந்து விடுகிறது. இதையே சிமோன் தெபவார் 'ஒருத்தி பெண்ணாகப் பிறப்பதில்லை; பெண்ணாக உருவாக்கப்படுகிறாள்' (One is not born but rather becomes a Woman) என அழகாக வர்ணித்துள்ளார். பாலியல் வேறுபாடு இல்லாத சமூகம் உருவாக வேண்டுமானால் குழந்தைப் பருவத்திலிருந்தே ஆண் பெண் வேறுபாடு இன்மை என்ற கருத்தைச் சமூக நெறியில் பயிற்றுவிக்க வேண்டும்; அப்பொழுதுதான் 'பெண்கள்' என்ற ஒரு வேறுபாடான தனித்த கண்ணோட்டத்தை மாற்ற இயலும்; ஆண் பெண் என்ற இரு நிலையும் ஒருங்கிணைய முடியும் எனத் தாராளவாதிகள் கருத்துரைக்கின்றனர்.

தாராளப் பெண்ணியவாதிகள் பாதிக்கப்பட்ட பெண்கள், கைவிடப்பட்ட பெண்கள், பாலியல் வன்முறைக்காளான பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியும்—பெண்கள் காப்பகம் (Battered Women Centres), மறுவாழ்வு மையம் (Repecrisis Centres), குழந்தைகள் காப்பகம்(Child Care Centres) போன்றவற்றை அமைத்து உதவுவதோடு, தனி நபர் வெற்றிக்கும் உதவி வருகின்றனர்.

மற்ற பெண்ணிய இயக்கங்கள் தாராளப் பெண்ணிய இயக்கத்தை எதிர்த்துக் குறை கூறி வருகின்றன. பிற இயக்கவாதிகளின் குற்றச்சாட்டு இவர்களது செயல் அடிப்படையில் சீர்திருத்தப் போக்கினதே என்பதாகும். அதோடு புரட்சி இல்லாமல் பெண் விடுதலை கிட்டாது என்பது இவர்கள் வாதம். புரட்சியானது தங்களுக்குக் கொஞ்ச நஞ்சம் இருக்கும் வாய்ப்புகளையும் விடுதலையையும் நீதியையும் அழித்துவிடும் என்பது இவர்கள் வாதமாகும்.

தாராளப் பெண்ணியவாதிகளைப் பொறுத்தமட்டிலும் உடற்கூறு வேறுபாட்டில் ஆகட்டும், சமூகப் பொருளாதார நெறியிலாகட்டும் இவர்களுக்கு எதிரி (Villain) என்று யாருமில்லை. இந்நோக்கில்தான் இவர்கள் தீவிரவாதப் பெண்ணியவாதிகளோடு அதிகம் முரண்படுகிறார்கள். (தீவிரவாதிகளுக்கு ஆண்கள் தான் எதிரிகள்).

அமெரிக்காவில் 1960களில் தாராளப் பெண்ணியம், 'ஆதாரப் பெண்ணியம்' (Mainstream Feminism) என்றழைக்கப்

பட்டது. 'NOW' என்றழைக்கப்படும் (National Organisation of Women) என்ற தேசிய அமைப்பு தாராளப் பெண்ணியத்தை வளர்த்தது. இவ்வமைப்பு சம உரிமை, சம நீதி, சம மதிப்பு, விடுதலைப் போக்கு இவைகளையே வலியுறுத்தி வந்தது; முதலில் பெண்கள், பிறகுதான் மனிதப் பிறவிகள் என்று கருதப்பட வேண்டும் என்ற வாதத்தை முன் வைத்தது. சட்டத்தில் மாறுதல்கள் கொண்டு வர வேண்டும் என்ற நிலையில் அமெரிக்கப் பாராளுமன்றத்தில் பெண்கள் பற்றிய பல மசோதாக்கள் நிறைவேற்ற இவ்வமைப்பு துணைநின்றது. பொது மக்களிடையே தங்கள் கருத்துக்கள் பரவ இவ்வமைப்பினர் நாடெங்கும் பல கூட்டங்கள் நடத்தினர்.

அமெரிக்காவைப் போன்று இங்கிலாந்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான தாராளப் பெண்ணிய இயக்கங்கள் இல்லை. ஆனால் உழைப்பாளிகளின் இயக்கத்தையும் (Labour Party) தொழில் சங்கங்களையும் (Trade Unions) சார்ந்த இங்கிலாந்துப் பெண்மணிகள் 'NOW' என்ற இயக்கம் கொண்டு வந்த சட்டச் சீர்திருத்தங்களைத் தங்கள் நாட்டில் கொண்டு வரத் துணை நின்றனர்.

## தாராளப் பெண்ணியத்தின் திட்டங்களும் செயல்பாடுகளும்

பெண்களுக்கு எல்லா நிலைகளிலும் 'சமத்துவம் கொடுக்கப் படவேண்டும் என்பதைச் சட்டத்தின் வழி கொண்டு வருவதே தாராளவாதிகளின் மையச் செயல்பாடாக அமைந்தது. பெண்களின் பிரச்சினைகளைத் தகுந்த மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு ஆராய்ந்து வழி காணவும் இவர்கள் பாடுபட்டனர். ஏழ்மை நிலையில் உள்ள பெண்கள் மற்றும் வந்தேறிய (அகதி) பெண்கள் இவர்களின் நிலையை உயர்த்த பல உத்திகளைக் கையாண்டனர்.

தாராளப் பெண்ணியத்தின் முக்கிய செயற்பாடுகள் வருமாறு:

1. சம ஊதியம், சம கல்வி வாய்ப்பு, சம வேலை வாய்ப்பு- இவற்றைப் பெண்களுக்குப் பெற்றுத் தருதல்.
2. பெண்களை வேறுபடுத்தக் கூடிய அத்தனை அரசியல் அமைப்பையும் ஒழித்தல்,

3. தொடர்பு சாதனங்களில் காணப்படும் பால் பேதங்களை (Sex Discrimination) ஒழித்தல்.
4. பெண்களின் பிரச்சினைகளை முழுவதுமாக அறிந்து கொள்ளுதல்.
5. தன் விருப்பக் கருக்கலைப்பு, குழந்தைப் பராமரிப்பு, தாய்மைப் பேறு மற்றும் நல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருதல்.
6. பாலியலில் பெண்களுக்கு ஏற்படுத்தப்படும் வன்மைகளையும் கொடுமைகளையும் கடுமையாக எதிர்த்தல் மற்றும் அதற்கான தண்டனையைப் பெற்றுத் தருதல்.
7. பெண் ஒருபால்சேர்க்கையினரைத் தனிப்படுத்தி விமர்சிப்பதைத் தடுத்தல்.

தாராளப் பெண்ணியவாதிகளும தீவிரப் பெண்ணியவாதிகளும், கூட மேற்கூறிய செயற்பாடுகளுக்கு ஒருங்கிணைந்த ஆதரவு தந்தனர். அரசியல் வட்டாரத்திலும் அரசியல் நடவடிக்கைகளிலும் தங்கள் செயற்பாட்டால் தாராளப் பெண்ணியவாதிகள் பெருத்த அளவில் மாற்றத்தைக் கொண்டு வந்தனர்.

## சமதர்ம பெண்ணியம் (Socialist Feminisim)

சமதர்ம பெண்ணியம் என்பது இனம் மற்றும் பால் வேறுபாட்டை (Class and Gender discrimination) ஒழிப்பதை அடிப்படை நோக்காகக் கொண்ட இயக்கமாகும். சமதர்மத்தைச் சமுதாயத்தில் கொண்டுவர விரும்பியவர்களும் கம்யூனிசவாதிகளும், மனித உரிமை கோரும் மார்க்சியவாதிகளும், உழைப்பாளிகளும் சமதர்ம பெண்ணியத்தின் தோற்றத்திற்கு வித்திட்டவர்களாவார்கள். எனவே இப் பெண்ணியத்தின் போக்கில் கம்யூனிச மார்க்சிய கொள்கைகளை அடையாளம் காண இயலும். பெண் விடுதலையைக் கொள்கையாகவும், சமூகத்தில் வேரூன்றி உள்ள தந்தைவழிச் சமூகத்தின் மூலத்தைத் தூக்கி எறிவதைக் குறிக்கோளாகவும், தன்னலவாதிகளின் தன்னலத்தையும், ஆண் பெண் என்று பாகுபடுத்துவோரின் கொள்கைகளையும் சமூக நெறியில் ஒழிப்பதைச் செயல்பாடாகவும் கொண்டுள்ளது சமதர்ம பெண்ணியம்.

பெண்களின் ஒடுக்கு முறைக்கு முதலாளித்துவமும் பொருளாதார அமைப்புமே காரணம் என்று சமதர்ம பெண்ணியவாதிகள்

நம்புகின்றனர். எனவே, பொருளாதாரப் பண்பாட்டு அடிப் படையிலான முதலாளித்துவப் போக்கை இப்பெண்ணிய வாதிகள் கண்டனம் செய்கின்றனர்.

சமதர்ம பெண்ணியத்திற்கு, ப்ரெட்ரிக் எங்கெல்ஸினுடைய 'குடும்பம், தனிச் சொத்து ஆகியவற்றின் தோற்றம்' (1884) என்ற நூல் மூலாதாரமாக விளங்குகிறது. இந்நூல் 'ஆண் பெண் ஆகியோருக்கிடையே உள்ள உழைப்பின் அடிப்படை யிலான வேறுபாடே பெண்களை அடிமைப்படுத்துகிறது' என்கிறது எங்கல்ஸ், இந்த வேறுபாட்டிற்கு முதலாளித்துவ அமைப்பும், மரபு வழிவந்த குடும்ப அமைப்பும் காரணம் என்று விளக்கியுள்ளார். அதாவது, ஒருவனுக்கு ஒருத்தி என்ற திருமண அமைப்பு குடும்ப அளவிலும், முதலாளி-தொழிலாளி என்ற அமைப்பு சமூக அளவிலும் பெண்களை அடிமைப்படுத்தியுள்ளது என்கிறார். மரபு வழியாகப் பின்பற்றி வந்த கோட்பாடுகளின் வழி நடக்கும் திருமணங்களின் விளைவுகளை இந்நூல் மிகத் துல்லியமாகக் காட்டுகிறது. குடும்ப அமைப்பில் பெண்கள் அடிமைகளாகவும், பிள்ளை பெறும் இயந்திரங்களாகவும், உரிமையற்ற நிலையில் வாழும் நிலையையும் சுட்டிக்காட்டி யுள்ளது. சமதர்ம பெண்ணியவாதிகள் பாலியலை அடிப் படையாகக் கொண்ட (குடும்ப அலகு கொண்ட) சமூக அமைப்பைப் பொருளாதாரப் புரட்சியின் மூலம் மாற்ற முடியும் என்று நம்புகின்றனர். அதனடிப்படையில், பொருளாதார விடுதலையே பெண்களைத் தனியுரிமை உள்ளவர்களாக உருவாக்கும் என்கின்றனர்.

சமதர்ம பெண்ணிவாதிகள் தங்களுக்கென்று சில தனிக் கொள்கைகளைக் கொண்டுள்ளனர். 'அரசியல் ஈடுபாடு என்பது தங்களின் சொந்த விருப்பு வெறுப்பின்பாற்பட்டது' என்று நம்புகின்றனர். திருமணப் பந்தம், பாலியல் உறவு, குடும்பம், பிள்ளைப் பேறு என்பன தங்களின் வேண்டும் வேண்டாமை என்ற இயற்கையின் அடிப்படையின் தேவையில் தோன்றுவதுதான் என்று வாதிடுகின்றனர்.

சமதர்ம பெண்ணியம், பெண்கள் பாலியல் நெறியில் மட்டுமன்றி, வயது நிலையிலும், சமூக நிலையிலும், சக்தி அடிப்படையிலும், இன அடிப்படையிலும், தேசிய அடிப்படை யிலும் ஒடுக்கப்படுகின்றனர் என்று சுட்டிக் காட்டுகின்றது.

சமதர்ம பெண்ணியம், ஆண்களை நேரடி எதிரியாகக் கருதவில்லை என்றாலும் அவர்களைக் கண்டனம் செய்கின்றது.

ஆண்கள் தந்தை வழிச் சமூக அமைப்பின் தலைவனாகவும், குடும்பத் தலைவனாகவும், முதலாளியாகவும், சொத்துரிமை உடையவனாகவும், வேலை வாங்குபவனாகவும் இருப்பதால் அவர்கள் பெண்களை விட உயர்ந்தவர்களாகச் சமூகத்தில் பங்கு வகிக்கின்றனர். அதனடிப்படையில் ஆண்களிடம் காணப்படும் தன்னலம் மற்றும் சுரண்டல் போக்கையும் ஆதிக்க மனப்பான்மையையும் சமதர்மவாதிகள் கண்டனம் செய்கின்றனர். இவர்கள் தாராளவாதிகளின் 'ஆணுக்குப் பெண் சமம்' என்ற கொள்கை, சமூகத்தில் பெரிய பாதிப்பையோ கருத்து மாற்றத்தையோ ஏற்படுத்தி விடவில்லை என்று கருதுகின்றனர். பெண்கள் பெறும் பொருளாதார விடுதலையே, சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதே இவர்கள் வாதம்.

சமதர்ம பெண்ணியவாதிகள் தீவிரப் பெண்ணியவாதிகளின் கருத்துக்கள் சிலவற்றை ஒத்துக் கொண்டனர். அதனடிப்படையில் தங்கள் இயக்கத்தைச் சீர்திருத்தியும் கொண்டனர். மார்க்சிய கொள்கைகளை முக்கியமாக ஏற்றுக் கொண்டாலும், தீவிரப் பெண்ணியத்தின், 'பெண்கள் பெண்களுக்காக-பெண்கள் மட்டுமே' (Women for women and women only) என்ற கொள்கையை வரவேற்று, அதை அடிப்படையாகக் கொண்டு 'அனைத்திலும் பெண்கள்' (All Female Political Platform) என்ற கருத்தைப் பரப்ப முற்பட்டனர்.

சமதர்ம பெண்ணியத்தில் உள்ள பெண் அறிவாளிகள், பெண் ஒடுக்கு முறைக்கு இரு முக்கிய காரணங்களைச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

1. ஆணின் திறன் அல்லது சக்தி (Male Power)
2. முதலாளித்துவம் (Capitalism)

இவ்விரண்டின் விளைவே தந்தைவழிச் சமூக அமைப்பு. அதன் விளைவே 'பெண்ணின் ஒடுக்குமுறை' என்று கருத்துரைத்தனர். மேலும் அவர்கள் தீவிரவாதிகளின், தன்னாட்சி உடைய பெண்களுக்கான இயக்கம் ஒன்று தேவை என்ற கருத்தை ஒத்துக் கொண்டனர். தீவிரவாதப் பெண்கள், சமதர்ம பெண்ணியவாதிகளின் முதலாளித்துவம் பற்றிய ஆய்வை ஏற்றுக் கொண்டுள்ளனர். இவ்விரண்டு கொள்கையினருக்கிடையே தொடக்கக் காலத்தில் இருந்த கருத்து வேறுபாடு, காலம் செல்லச் செல்ல குறைந்தது.

சமதர்ம பெண்ணியத்திற்கு அமெரிக்காவைக் காட்டிலும், இங்கிலாந்தில் அதிதீவிர வரவேற்பு இருந்தது. சமதர்ம பெண்ணியம் பின்வரும் மூன்று கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

1. கூலி வேலை (Wage Labour)
2. குடும்பம் (The Family)
3. கருத்துருவம் (Ideology)

## கூலி வேலை

பெண்கள் ஒடுக்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணம் பொருளாதார அமைப்பே. நவீன மற்றும் சக்தி வாய்ந்த இயக்கங்களின் வருகையும் பெண்களின் வாய்ப்பின்மைக்கு ஓரளவு காரணமாயின என்பதைச் சமதர்மவாதிகள் அறிந்திருந்தனர். பெண்கள் மிகப் பல இடங்களில் மிகவும் குறைந்த ஊதியத்திற்குத் திருப்தியில்லாத நிலையில்லா வேலையைப் பார்க்க நேரிடுகிறது. பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்ப இவர்களை மிக எளிதாக வேலைக்குச் சேர்க்கவோ, தூக்கி எறியவோ முடிந்தது. 'பெண்களின் கூட்டமைப்பு' (Unionisation of Women-1968) என்ற இயக்கம் தோன்றிய பிறகு பெண்களின் பங்கில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. அவர்கள் வேலைத் தளத்தில் ஒடுக்கப்படுவதிலும்/ஏமாற்றப்படுவதிலும் இருந்து ஓரளவு விடுபட்டனர். சமதர்ம பெண்ணியவாதிகளின் இத்தகைய முயற்சிக்குப் பின், வேலை பார்க்கும் இனம் மற்றும் கறுப்பர் இனத்தாரிடையே (Working Class and Black Women) முன்னேற்றத்தைக் காண முடிந்தது.

## குடும்பம்

மரபு வழி வந்த 'குடும்பம்' என்ற அமைப்பு ஒரு நீண்ட வரலாற்றை உடையது. மார்க்சும், எங்கெல்சும் இவ்வமைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்ற புரட்சிகரமான கருத்தைக் கூறியிருந்தாலும், சமதர்ம பெண்ணியவாதிகள், குடும்ப அமைப்பில் தீவிரமான சில மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும் என்றே கருத்துரைத்தனர். பாரம்பரிய குடும்ப அமைப்பில் பெண்களைப் பொறுத்தவரையில் வீட்டிலும் வேலை செய்து, வெளியிலும் வேலை செய்து அதிக சுமைக்கு ஆளாகி, தனிமைப் படுத்தப்படுகிறார்கள். இதை லெனின், 'பெண்கள் சமையற்

கட்டுக்கும், பள்ளிக் கூடத்திற்கும், வீட்டு வேலைக்கும், வெளி வேலைக்கும் என்று அல்லல்பட்டு ஒரு தொடர் சங்கிலி போல் செயல்படுகிறார்கள்' என்று வர்ணித்துள்ளார். மத்தியதரக் குடும்பத்தில் ஒரு பெண் கணவனின் விருப்பத்திற்கு அடிபணிந்து, அவனின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகி, குழந்தை வளர்ப்பிலும் பாடுபட்டு, வீட்டையும் பராமரித்து ஓர் இயந்திரம் போன்று செயல்பட்டு, பல ஆண்டுக்காலம் உணர்ச்சியின்றி வாழ்வதால் அவளுக்குத் திடீரென்று இயலாமையும், கோபமும் தாபமும், பொறாமையும் உண்டாகி உடலளவிலும், மனத்தளவிலும் பாதிக்கப்படுகிறாள். குடும்பத்துவம் (Familism) என்ற போலியான மரபுக் கருத்தாக்கத்தை உடைத்து, குடும்ப அமைப்பில் மாறுபாட்டை ஏற்படுத்தி, பெண்ணுக்கு விடுதலை பெற்றுத் தர வேண்டும் என்று சமதர்ம பெண்ணியவாதிகள் கருதினர். மைக்கேல் பேரட், மேரி மிக்கின்டாஷ் (Michael Barrett and Mary Mcintosh) என்பவர்கள் தனிக்குடும்ப அமைப்பு (Nuclear family) ஓரளவு ஆண், பெண் இருவரும் குறைந்தது ஒருவரையொருவர் புரிந்து கொண்டு, நல்லது கெட்டதைப் பகிர்ந்து கொண்டு அவரவர்க்குரிய தனிமனித மதிப்பு நிலை பாதிக்கப்படாமல் வாழ வழிவகுக்கும் என்ற பரவலான கருத்தையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இப்படிப்பட்ட குடும்பத்திலிருந்து வரும் குழந்தைகள் மரபுவழிக் குடும்பத்திலிருந்து வரும் குழந்தைகளிடமிருந்து சிறிதும் மாறுபட்டு விளங்கவில்லை என்பதாலும் செல்வம், கல்வி, முன்னுரிமை போன்றவைகள், தனிக் குடும்ப அமைப்பிலும், தொடர்வதாலும் இவ்வமைப்பில் அவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை.

## கருத்துருவம்

மார்க்சிய பெண்ணியவாதிகள் 'கருத்துருவக் கொள்கை' (Theory and Ideology) என்பதை முன்னேறச் செய்வதையே ஒரு செயற்பாடாகக் கொண்டிருந்தனர்.

சக்தி அதிகம் மிக்க ஆண்கள், சக்தி குறைந்த பெண்களை நம்ப வைத்து ஏமாற்றி, அவர்களை அடக்கி ஒடுக்கி வந்துள்ளனர். மேலும் ஆண்கள் மதம், அரசியல், பண்பாடு இவற்றின் மூலமாக ஏதாவது ஒரு வழியில் 'மகிழ்ச்சியான குடும்பத் தலைவி' என்ற மாயையை ஏற்படுத்தி தொடக்க காலம் முதல் பெண்களை அடிமைப்படுத்தி வந்திருக்கின்றனர். மார்க்சியம் இக்கருத்தை எடுத்துச் சொல்லி மக்களிடையே பிரபலப்படுத்தியது.

மார்க்சியப் பெண்ணிய ஆராய்ச்சி,வாழ்க்கையின் ஒவ்வொரு மூலை முடுக்குகளையும் ஆராய்ந்தது. அதனடிப்படையில் குடும்பத்தில் காலம் காலமாகச் சார்பு நிலையில் இருந்து வந்த பெண்களின் அடிமை நிலையை மாற்ற முயன்றது. குடும்பத்தில் ஆண், பெண் இருவரின் பங்கு நிலை பற்றிய மாயை அவர்களின் மனத்தின் அடித்தளத்தில் வேரூன்றியிருந்ததால் சமூகப் போர்வையில் செயற்கையான முகம் கொண்ட இப்பண்பாட்டை மாற்றுவது மார்க்சியவாதிகளுக்கு ஒரு சவாலாக அமைந்தது. ஏனென்றால், பெண்கள் யாரால்? யாருக்காக? எப்படி? உருவாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை, திரைகிழித்துக் காண்பிப்பது அத்துணை எளிதான செயலல்ல. மார்க்சிய வாதிகளின் இந்த ஆராய்ச்சியும், அதனடிப்படையிலான கடும் முயற்சியும் படிப்படியாகச் சமதர்ம வாதிகளையும், தீவிரவாதி களையும் ஒன்று சேர்த்துச் செயலாற்ற வைத்தது.

பெண்கள் வணிக முறையிலும் அடிமைப்படுத்தப்பட் டுள்ளார்கள் என்பதை மார்க்சியவாதிகள் கீழ்க்கண்டவாறு எடுத்துக் காட்டியுள்ளனர். பெண் நுகர்வோரை எதிர் நோக்கி, அவர்களை அடியோடு தன்வயப்படுத்தும் விதமாகப் பொருட்கள் சந்தைக்குக் கொண்டுவரப்பட்டன. நடை உடை அணிகலன், தலைமுடி அலங்கரிப்பு, காலணி என்று பெண்களை இனம் பிரித்துக் காட்டும் பொருட்கள் சந்தைக்கு வந்தன. இவற்றின் மூலம், பெண்கள் தங்களை ஆணிலிருந்து பிரித்து இனம் காட்டிக் கொண்டனர். சிறு பெண் குழந்தையிடம் கூட இனம் பிரித்து தன்னைக் காட்டிக் கொள்ளும் மரபு வளர்ந் திருந்தது.

முழு நிறைவான இல்லம் (Ideal Home) என்ற பெயரில் வீட்டிற்கு அடிப்படைத் தேவை இல்லாத புதிய பொருட்களைச் சந்தைக்குக் கொண்டு வந்து பெண்களை வணிகத்தில் சுரண்டி னர். இப்பொருளாதார அடக்கு முறையைச் சமதர்ம பெண்ணிய வாதிகள் சுட்டிக்காட்டி, இங்கும் 'குடும்பம்' என்ற நிலை யிலேயே பெண்கள் அடிமைப்படுத்தப்படும் அவலத்தை எடுத்துக் காட்டுகின்றனர்.

1966இல் ஜுலியட் மிட்சல் (Julliet Mitchell) என்ற பெண் மணி மேற்கூறிய கருத்துருவக் கொள்கையை முதன் முதலில் இங்கிலாந்தில் பரப்பினார். அப்பொழுது அவர் பெண்களின் அடிமை நிலைக்கு வீட்டு வேலை, தாய்மைப் பேறு, குழந்தைப் பராமரிப்பு, பாலியல் பங்குநிலை இவற்றைக் காரணமாகக்

காட்டி, இவைகளே பெண்கள் உளவியல் நெறியில் சமத்துவத்தை நோக்கிச் செல்ல தடைக்கற்களாக இருக்கின்றன என்று சுட்டிக் காட்டினார்.

## சமதர்ம பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள்

சமதர்ம பெண்ணியவாதிகள் சீர்திருத்தப் பிரச்சாரங்களைச் செயற்பாடாகக் கொண்டிருந்தனர். இத்தகைய பிரச்சாரங்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பயன்பட்டதோடு, இயக்கத்தை வளர்ப்பதற்கும் உதவின. சமதர்ம பெண்ணியவாதிகள் இடைக்காலத் திட்டங்கள் வகுத்து செயற்பட்டனரே தவிர தங்களுக்கென முடிந்த முடிவான திட்டங்களை வைத்துக் கொள்ளவில்லை. அதனால் இத்தகைய பிரச்சாரங்கள் சில சமயம் தாராளவாதிகளின் பிரச்சாரங்களோடு ஒரு பாதி ஒத்துச் சென்றன.

சமதர்மவாதிகளின் செயற்பாடுகள் வேலை பார்க்கும் மகளிரின் (Working class women) முன்னேற்றத்தையே கருத்தில் கொண்டிருந்தன. அவர்களின் ஊதியப் பிரச்சினை, தொழிற் சங்கப் பிரச்சினைகள் இவற்றில் கவனம் செலுத்தின. முதலாளி வர்க்கத்தினரின் சுரண்டல் போக்கை ஒடுக்கப் பாடுபட்டன. வேலை பார்க்கும் மகளிர்க்குச் சமூகப் பாதுகாப்பு ஏற்படுத்துவதிலும் அவர்களுக்கு இலவசக் கருக்கலைப்பு மற்றும் எளிய கருத்தடைச் சாதனங்கள் கிடைக்கச் செய்வதிலும் பெண்களுக்கே உரிய தனிப்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தல் போன்ற நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர்.

சமதர்மவாதிகள் தொழில் கட்சியில் (Labour Party) தங்களை இணைத்துக் கொண்டு, வேலை பார்க்கும் மகளிர் முன்னேற்றத்திற்கான சட்டதிட்டங்களை உருவாக்குவதற்கும் பாடுபட்டனர்.

சமதர்மவாதிகளில் படித்த பெண்கள், குறிப்பாகப் பல்கலைக்கழகப் பேராசிரியைகள்,கல்லூரி ஆசிரியைகள் முதலாளித்துவ பண்பாட்டிற்கு எதிரான தங்கள் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்வதில் கவனம் செலுத்தினர். தங்கள் கொள்கைகளை மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலமும் பரப்பினர். குறிப்பாக ஃபெமினிஸ்ட்ரெவ்யூ (Feminist Review) போன்ற கல்வியிதழ்கள் இதற்குப் பயன்பட்டன. பெண்ணியப் பத்திரிகை அல்லாத பிற பத்திரிகைகளின் மூலமும் கருத்துக்களைப் பரப்பினர்.

பொருளாதார அமைப்பில் மிகப் பெரிய மாறுதல் ஏற்பட்டால் ஒழிய சமூக அமைப்பில் சமத்துவத்தைக் கொண்டு வருதல் இயலாது என்று சமதர்மவாதிகள் நம்பினர். எனவே சமூகத்தில் ஒரு பகுதியைச் சீரமைப்பதை விட, சமூகத்தின் மொத்தத்தையும் சீரமைப்பதே சிறந்தது என்று கருதி, அதற்காகப் பாடுபட்டனர்.

வேலை பார்க்கும் மகளிரிடையே 'முதலில் நீங்கள் பெண்கள், பின் தான் உழைப்பாளிகள்' (Women as women and then as workers) என்ற கருத்தாக்கத்தைப் பரப்பி, அவர்களிடையே ஒட்டுமொத்த விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்றனர் சமதர்மவாதிகள்.

## தீவிரவாதப் பெண்ணியம்

'Radical' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு 'வேர்' (root) என்பது பொருள். இச்சொல் லத்தின் மொழியிலிருந்து உருவான சொல்லாகும். சமுதாயத்தில் உள்ள பிரச்சினைகளின் காரணங்களை வேரிலிருந்து ஆராய்வது என்பதைக் கருத்தில் கொண்டே 'Radical' என்ற சொல்லைப் பெண்ணியவாதிகள் பயன்படுத்தினர். தமிழில் இதைத் 'தீவிரவாதம்' என்று மொழிபெயர்த்துள்ளனர். இஃது மேற்கூறிய பொருளை உணர்த்தவில்லை என்றாலும், Radical என்பதன் நேரடியான மொழிபெயர்ப்பாக அமைந்துள்ளது.

தாராளப் பெண்ணியத்திலிருந்து விலகி வந்த அமைப்பே தீவிரவாதப் பெண்ணியம். ஆணாதிக்கத்தின் பிடியிலிருந்த பல பெண் அமைப்புகளிலிருந்து பிரிந்து வந்த தீவிரவாதப் பெண்கள் அறுபதுகளில் தங்களுக்கென்று சில அமைப்புகளைத் தோற்றுவித்துப் பெண்களின் பிரச்சினைகளை ஆராய்ந்தனர். பெண்கள் அடிமைகளாக அன்றி ஓர் உயிரியாகக் கருதப்பட வேண்டும் என்ற கருத்து அவர்களிடையே உருவானது. இக் கருத்து வலுப்பெற்று, ஆண் ஒதுக்கப்பட வேண்டியவன் என்ற கருத்தாக்கம் நிலை பெற்றது. அதுவே, தீவிரவாதப் பெண்ணியத்தின் வலுவான கொள்கையானது.

தீவிரப் பெண்ணியக்கம் தொடக்கத்தில் பெண்களின் ஒடுக்குமுறைக்கான காரணத்தையும், அதன் வேரையும் கண்டறிந்து, அதை வேரறுப்பதை முக்கிய கொள்கையாகக் கொண்டிருந்தது.

இவ்வியக்கத்தைச் சார்ந்த பெண்ணியவாதிகள் பெண்களுக்குப் பாலுறவில் உள்ள பங்கை எடுத்துக் காட்டிக் கண்டனம் செய்தனர். நடைமுறையில் உள்ள பால் பேதம் (Gender discrimination) பற்றியும் ஆராயத் தொடங்கினர். மேலும் மனித சமுதாயத்தின் மறுஉற்பத்திக்குக் காரணமான திருமணம் மற்றும் கட்டாயக் குடும்ப அமைப்பு, தாய்மைப் பேறு போன்றவற்றை ஆராய்ந்து இவையே பெண்களின் அடிமைத்தனத்திற்கு வித்திட்டது என்று கண்டறிந்தனர். எனவே, பாரம்பரிய திருமண முறையை, குடும்ப அமைப்பை அடியோடு ஒழிக்க வேண்டும் என்று குரல் கொடுக்கத் தொடங்கினர். இதையே தங்கள் இயக்கத்தின் மையப் பிரச்சாரமாக எடுத்துக் கொண்டுப் புதிய சமுதாயத்தை உருவாக்க முனைந்தனர். அதற்காக, குடும்பம் என்பது பெண்களைச் சுரண்டும் அமைப்பு என்றும் அது அவர்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே முரண்பாடான முறைகேடான அடிமை மனப்பான்மைக்குப் பழக்குவித்து, அவர்களின் தனித்தன்மையை அழித்தது என்றும் கட்டுரையின் மூலமும் துண்டுப் பிரச்சாரங்கள் மூலமும் 1970களில் தீவிரவாதிகள் எடுத்துரைக்கத் தொடங்கினர். ஆண்களைத் தங்கள் எதிரிகள் என்று வெளிப்படையாகக் கூறினர்.

இதன் தொடர்ச்சியாகச் சில குழுக்கள் ஆண்களை முழுமையாக ஒதுக்கிய சமுதாயத்தை உருவாக்குதல் (Society for cutting up men-SCUM) என்ற கோட்பாட்டையும் பரப்பத் தொடங்கினர்.

'லெஸ்பியன் ஃபெமினிசம்' என்ற அமைப்பு தீவிரவாதப் பெண்ணியத்தின் ஒரு முக்கிய கிளையாகும். பெண்-ஓரினச் சேர்க்கையைக் குறிக்கும் இவ்வமைப்பு பாலியலில் மட்டுமல்லாது அரசியல் அளவிலும், பொருளாதார அளவிலும் வியக்கத்தக்க பங்கை நிலை நாட்டியுள்ளது. 1970இல் ரீடா மே ப்ரவுன் (Reta Mae Brown); சார்லட் பன்ஜ் (Charlotte Bunch), டைகிரேஸ் அட்கின்சன் (Tigrace Adkinson),ஜில்ஜான்ஸன் (Jill Johnsen) போன்ற அதி தீவிரப் பெண் ஓரினச் சேர்க்கையாளர்கள் அரசியல் அளவில் 'லெஸ்பியனிஸம்' பங்கு பெற வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தனர்.

சார்லட் பன்ஜ், லெஸ்பியன் பெண்ணிய அரசியல் கொள்கை (Lesbian Feminist Politics) என்பது மொத்த அரசியல் அமைப்பின் ஓட்டைகளையும் குறைபாடுகளையும் ஆராய்ந்து அதுபற்றி

விமர்சிப்பதாகும் என்கிறார். மேலும், இருபால் சேர்க்கை (Hetero sexual) என்பது ஆண் மேலாதிக்கத்தின் மைல் கல்லாகும் என்று வர்ணிக்கிறார். லெஸ்பியன் பெண்ணியவாதிகள், எல்லாப் பெண்களுமே ஓரினச் சேர்க்கையைச் சார்ந்தவர்கள் தான் என்று வாதிடுகின்றனர். ஆண்களின் மூலம் புகுத்தப்பட்ட கட்டாய இருபால் சேர்க்கை, பெண்களைப் பிரித்து இனம் காட்டுகிறது என்று குற்றம் சாற்றுகின்றனர். லீட்ஸ்-புரட்சிப் பெண்ணியம் (Leeds Revolutionary Feminist) என்ற அமைப்பு 'லெஸ்பியன் பெண்ணியம் என்ற ஒன்றே பெண்ணியமாகும்' என்ற கருத்தைப் பரப்பியது. லெஸ்பியன் பெண்ணியவாதிகள் பிற பெண்களோடு உறவு வைத்துக் கொள்ள வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால், அவர்கள் ஆண்களோடு கொண்டுள்ள உறவை அறவே விட்டுவிட வேண்டும். இத்தகைய கட்டுப்பாட்டைத் தங்களுக்குத் தாங்களே விதித்துக் கொண்டுள்ளனர். அரசியல் பெண் ஓரினச் சேர்க்கையாளர் என்பது கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகிறது.

1. பெண்ணியக் கொள்கையினால் தனக்கு ஏற்பட்ட ஈர்ப்பில் அல்லது பாதிப்பில் பெண் ஓரினச் சேர்க்கையை ஆதரிப்பவள் அல்லது ஏற்றுக் கொண்டவள்.

2. பெண்ணால் பெண் என்று அடையாளம் காட்டப்பட்டவள், பிற பெண்களிடத்து உறவு வைத்துக் கொள்ளாமலேயே, தன் வாழ்க்கையைப் பெண்ணியக் கொள்கைகளுக்காக அர்ப்பணித்துக் கொண்டவள்.

3. அரசியலில் ஈடுபட வைக்கப்பட்ட பெண், பெண்ணியக் கொள்கையை அடையாளம் கண்டு, அதன்வழி முன்பு தான் ஒதுக்கப்பட்ட முறையையும், தற்போது விடுதலையாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்கும் தன்மையையும் உணர்ந்து கொண்டவள்.

தீவிரப் பெண்ணியத்துள்ளே உருவான இத்தகைய கடுந்தீவிர அமைப்புகள், தங்களுக்குள்ளே தன்னாட்சி கொண்டவைகளாகவும், தனிமைப்படுத்திக் கொண்ட குழுக்களாகவும் உருப்பெற்றன. பெரும்பான்மையான தீவிரப் பெண்ணியவாதிகள் மரபு நெறியாக இவர்களோடு ஒத்துப்போக இயலவில்லை. எனவே, இப்படிப்பட்ட பிரிவுகளை, பண்பாட்டை எதிர்க்கும் குழுக்களாகக் கருத வேண்டிய சூழலும் ஏற்பட்டது.

தீவிரப் பெண்ணியவாதிகளுக்கும், அதிதீவிரப் பெண்ணியவாதிகளுக்கும் நோக்கம் ஒன்றுதான். ஆண்களால் உருவாக்கப்

பட்ட அனைத்து அமைப்புகளையும் சமூக மதிப்புகளையும் உடைத்தெறிந்து, 'பெண்கள் மட்டுமே' (Women only), 'முழுவதும் பெண்ணாட்சியே', 'எதிலும் எங்கும்' (Women oriented movement practically every where even in political action) என்ற தகுதி பெற்ற சமுதாயத்தை உருவாக்குவதே அவர்களின் ஒன்றுபட்ட குறிக்கோளாகும். அதற்கு முதற்படியாகப் பெண்களால் நடத்தப்படும் வணிகங்கள், உணவகங்கள், புத்தக கடைகள். பெரிய அளவிலான அலுவலகங்கள், நலவாழ்வு மையங்கள் போன்றவற்றைத் தோற்றுவிப்பதில் அதிதீவிரம் காட்டினர். அத்துடன், ஆண்களினால் உருவாக்கப்பட்டு, 'பெண்களின் நலவாழ்வு' என்ற பெயரில் நடக்கும் திட்டங்களை உடைத்தெறிந்து தங்கள் முன்னேற்றத்தைத் தாங்களாகவே பெற வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

'அந்தரங்கம் பகிரங்கம்' (Personal is Political) என்பது தீவிரப் பெண்ணியத்தின் மிக்க சிறப்புடைய கருத்துப் படிவமாகும். 1960இன் இறுதியில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் தோற்றம் பெற்ற இக்கருத்தாக்கம் எழுபதுகளில் எழுத்துகளின் மூலம் பிரபலமடைந்தது. 1970இல் கேரல் ஹெனிஷ் (Carol Hanish) என்பவர் இரண்டாம் ஆண்டின் குறிப்புக்கள்' (Note from the second year) என்ற கட்டுரையில் இக்கருத்துப் படிவத்தை விளக்கி, அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளார். 'தனி மனிதனுக்குரிய அந்தரங்கம்' என்று ஆண் ஆதிக்கச் சமூகம் சிலவற்றை வரையறை செய்திருந்தது. அதன்படிக் காதல், திருமண உறவு, பாலியல் உறவு, குழந்தைப் பேறு என்பன ஆணின் தனிப்பட்ட வாழ்விற்குரியதாகும். இதில் சம்பந்தப்பட்ட பெண்ணும் ஆணின் அந்தரங்கத்திற்குத் துணை போவாள். எனவே, அவளின் பிரச்சினைகள் பொது இடத்தில், பொது வாழ்வில் விவாதிக்கத் தக்கதல்ல எனக் காலம் காலமாகக் கட்டுப்படுத்தியிருந்தனர் தந்தைவழிச் சமூக அமைப்பினர். தீவிரவாதப் பெண்ணியத்தினர், பெண்களின் பிரச்சினைகள் பொதுப் பிரச்சினை எனப் பிரகடனப்படுத்தி, அதை விவாதத்திற்கு உட்படுத்தி, தீர்வு காண விளைந்தனர்.

தீவிரவாதிகள் சமதர்ம பெண்ணியவாதம் அவ்வளவு புரட்சிகரமானதோ, சக்தி வாய்ந்ததோ அல்ல என்கின்றனர். வகுப்பு, பொருளாதார அமைப்பு என்பன பெண்களின் ஒடுக்குமுறையைப் பொறுத்தமட்டில் இரண்டாம் நிலையை, உடற்கூறு என்பதே பெண்களின் ஒடுக்கு முறைக்கு முதன்மையான காரணம் என்று

தீவிரப் பெண்ணியவாதிகள் கருத்துரைக்கின்றனர். பொருளா தாரப் புரட்சியினால், பெண் ஒடுக்குமுறையை அடியோடு ஒழித்துவிட முடியும் என்ற சமதர்மவாதத்தை இவர்கள் நம்ப வில்லை.

ஆனால், தந்தைவழிச் சமூகத்தை எதிர்ப்பதில், சமதர்ம பெண்ணியவாதிகளும், தீவிரவாதப் பெண்ணியவாதிகளும் ஒன்றுபடுகின்றனர். இவர்கள் இருவரும் இக்கருத்தில் ஒன்றி ணைந்து தாராளப் பெண்ணிய வாதிகளை ஒதுக்கினர். தாராளப் பெண்ணியம் நடுத்தர மக்களுக்கு மட்டுமே பயன் தருகிறது என்றும், இவ்வியக்கம் தன்போக்குப்படி நடப்பதாகவும், உண்மையான சக்தியைப் பற்றி அறியாமையோடு இருப்ப தாகவும் குறை கூறினர். சுலாமித் ஃபயர்ஸ்டேன் என்பவர் 'பாலியல் பற்றிய வாதம்' (The dialectic of Sex) என்ற நூலில் தீவிரப் பெண்ணியத்தின் வாதப் பிரதிவாதங்களை எழுதியுள் ளார். இந்நூல் அன்றும் இன்றும் தீவிரப் பெண்ணியத்தின் சிறந்த நூலாகக் கருதப்படுகிறது. தீவிரவாதப் பெண்ணி யத்தின் முக்கிய கொள்கைகள் நான்காகும். அவையாவன;

1. தந்தைவழிச் சமூகம் (Patriarchy)
2. குடும்ப அமைப்பு (The family)
3. பாலியல் (Sexuality)
4. பெண்களின் வரலாறு (Women's history)

## தந்தைவழிச் சமூகம்

இதற்குத் 'தந்தையின் ஆட்சி' (Rule by the Father) என்பது பொருளாகும். ஆனால், தீவிரப் பெண்ணியவாதிகள், பெண் களை அடக்கி ஆளும் ஆணின் ஆளுகை (Dominance of men over women) என்பதைக் குறிக்க இச்சொல்லைப் பயன்படுத்தி வருகின்றனர். ஆணின் மேலாண்மை என்பது மிகவும் தொன்று தொட்ட ஒன்றாகும். எல்லா ஆண்களுமே பெண்களை அடக்கி ஆண்டதாகத்தான் வரலாறு. எனவே, பெண்களுக்கு 'ஆண்கள் எதிரி' என்று சுட்டிக் காட்டப்படுகிறார்கள். குடும்பம், பொரு ளாதாரம், அரசியல் மற்றும் பாலுறவு போன்றவற்றில் தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப பெண்களைப் பயன் படுத்தியிருக்கின்றனர், குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், தந்தைவழிச் சமுதாயம் என்பது வன்முறையாலேயே காக்கப் பட்டுள்ளது (Maintained by Violence). ஆண்கள் தங்களுடைய

சக்தியையும், மேலாண்மையையும் நிலைநிறுத்திக் கொள்ள பெண்களை வன்முறைக்கு ஆளாக்குகிறார்கள் என்று கருதப் படுகிறது.

அடக்கு முறையின் ஒரு வடிவம் கற்பழிப்பு (அ) பாலியல் வன்முறை. தனிப்பட்ட ஒரு பெண், தான் கற்பழிக்கப் பட்டாளோ இல்லையோ அதனுடைய பயத்தை உணர்ந்திருந் தாள். இதனுடைய விளைவே, அவளுக்கு ஆணிடத்து ஒரு அச்சமும், அவனிடத்து தன்னை எல்லா நிலையிலும் பாதுகாத் துக் கொள்ள வேண்டும் என்ற விழிப்புணர்ச்சியுமாகும்.

ஆண், பெண் இருவருக்கும் உடற்கூற்றில் அமைந்த வேறுபாடு சர்ச்சைகளுக்கு அப்பாற்பட்ட இயற்கையாக அமைந்த ஒன்றாகும். உடல் கூற்றைப் பொறுத்தமட்டில் பாலியலில் ஆண் அதிக ஈடுபாடும், பெண்களை அடக்கி ஆளும் தன்மையையும் கொண்டுள்ளான். சுலாமித் ஃபயர் ஸ்டோன் என்பவர், 'பெண்கள் தங்களின் உடற்கூற்றின் அமைப்பினாலேயே ஒருவிதத்தில் ஊனப்படுத்தப்பட்டவர்கள். ஏனெனில் அவர்கள் மட்டுமே தாய்மை அடைந்து பிள்ளைப் பேற்றின் சகல கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியுள்ளது. எனவே பெண்களைப் பொறுத்தவரை, தாய்மை என்பது காட்டுமிராண்டித்தனமானது (Pregnancy is Barbaricy)' என்று ஆணித்தரமாகக் கூறுகிறார்.

மேலும், ஒரு பெண் பிள்ளை பெற வேண்டிய நிர்பந்தம் உள்ள காலத்தளவும் ஆணைச் சார்ந்தே வாழவேண்டிய நிலையில் உள்ளாள் என்று இவர் கருதுகிறார். ஒரு பெண் ஆணுக்கு நிகரான நிலையை அடைய வேண்டுமானால் இரண்டே இரண்டு புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டால்தான் முடியும் என்கிறார்.

1. பெண்கள் தம் உடம்பிலிருந்து பிள்ளை பெறுவதைத் தவிர்த்தல் (Separation of child birth from female body).

2. பாலுறவு கொள்ளுதலையும், குழந்தை பெறுவதையும் விட்டுவிடுதல். இக் கூற்றைத் தீவிரவாதிகளும், சமதர்ம வாதிகளும் ஒத்துக் கொண்டுள்ளனர்.

தான் கர்ப்பமடையாமல், பெண்கள் மட்டுமே கர்ப்ப மடைவது தங்களின் மேலாண்மைத் தன்மையைக் காட்டு

கிறது என்று ஆண் மக்கள் நினைக்கின்றனர். மேலும், உடற் கூற்றின்படி, பெண்தன்மை என்பது ஆண்தன்மையைவிட ஒருபடி கீழானது என்றும் கருதுகின்றனர். எனவே, தீவிரப் பெண்ணியவாதிகள் உடற்கூறுதான் பெண்களை அடிமைப் படுத்தும் காரணி என்று கண்டுணர்ந்து, அது பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளனர்.

தீவிரப் பெண்ணியவாதிகளின் ஆராய்ச்சியின் விளைவாகப் 'பெண் மேலாண்மை'க்கு (Female Supremacy) வித்திடும் சிறிய கூட்டம் ஒன்று உருவாகியது. இவர்கள், பெண்கள் ஆண்களை விட உயர்வானவர்கள் என்று கூறுகின்றனர். பெண்கள் குழந்தை பெற்றுக் கொடுப்பவர்களாகவும், ஆண்களை விடச் சற்று அதிக வயது வாழ்பவர்களாகவும், குடும்பத்தில் ஒத்து வாழ்பவர்களாகவும், உடலியலில் ஆண்களைவிட நோய் தாங்கும் சக்தி வாய்ந்தவர்களாகவும் இருக்கின்றனர் என்பதே பெண் மேலாண்மைக்கு அவர்கள் கூறும் காரணங்களாகும். ஆனால், இஃது, பெண்ணியத்தின் அடிப்படைக் கொள்கையான பாலியல் சமத்துவத்தை உடைத்தெறிவதாக இருப்பதால் பெரும்பான்மையான பெண்ணியவாதிகள் இதை அடியோடு ஒதுக்கிவிட்டனர்.

## குடும்ப அமைப்பு

தீவிரவாதப் பெண்ணியவாதிகள் பெண்களின் அடிமைத் தனத்திற்கு வித்திடுவது குடும்பம் என்ற அமைப்பும் அதற்குத் தொடக்கமாக அமையும் திருமணம் என்பதுமாகும் என்று கருதுகின்றனர். எனவே, பெண் விடுதலை என்பது திருமண முறையை அடியோடு அழித்தால் ஒழிய கிடைக்க முடியாது என்று அதி தீவிரவாதத்தை முன் வைத்தனர்.

சமதர்மவாதிகளுக்கு முதலாளித்துவம் எப்படியோ, அப்படியே தீவிரவாதிகளுக்குத் திருமணமும். குடும்ப அமைப் பிற்கு அடிப்படையான, ஆண் பெண் இணையும் இருபால் சேர்க்கையைத் (Heterosexual) தீவிரவாதிகள் தீவிரமாக எதிர்த் தனர். இஃது பெண்களை ஆணுக்குக் கீழானவர்களாக, அடிமை களாக உருவாக்குவதால், இவ்வகைப் புணர்ச்சிக்கு வித்திடும் 'ஒருத்திக்கு ஒருவன்' என்ற அமைப்பை (Monogamy) பாலியல் தடைக்கட்டாகக் (Sexual taboo) கருதி அதை ஒழிக்கப் பாடுபட்டனர்.

## பால் தன்மை

பால் உறவு அல்லது பால் ஈடுபாடு என்பது ஆணையும் பெண்ணையும் உடல்வழி இணைக்கும் பாலம் என்றாலும், அதுவே ஆண் பெண் இருவருக்கும் முரண்பாடுகளை உருவாக்கும் இடமாகவும் அமைந்துள்ளது. முதலாளித்துவம் என்பது பெண்ணினுடைய எதிரி என்று சமதர்மவாதிகளால் சுட்டப்பட்டாலும், அதைவிட நெருக்கமான எதிரியாக (Intimate Enemy) 'ஆண்மகன்' தீவிரவாதிகளால் சுட்டப்படுகிறான்.

தீவிரப் பெண்ணியவாதிகளின் குறைந்தளவு வேண்டுகோள், உடலுறவு, பெண்களின் விருப்பு வெறுப்புகளைப் பொறுத்தே இருக்க வேண்டும் என்பதாகும். அதாவது, பெண்களுக்கு உடலுறவில் விடுதலை இருக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்து. பாலியல் உறவு பெண்களை அடிமைப்படுத்த ஆண்களால் கையாளப்பட்டு வரும் வரை, அவர்களுக்குள்ளே உளவியல் பாங்கில் விலகித்தான் போவார்கள்; எனவே, பாலியல் விடுதலையே தனிக்குடும்ப அமைப்பில் திருமணத்தினால் ஏற்படும் கட்டாய உடலுறவுக்கு ஒரு முடிவு கட்டும் என்கின்றனர்.

ஆனி கொயட் (Anee Koedt) என்பவர் எழுதிய 'புணர்ச்சிப் பரவசப் புனைகதை' (The Myth of the veginal orgasm) என்ற நூல், பெண் ஓரினச் சேர்க்கையாளர்களிடம் மிகவும் பிரபலமடைந்தது. 'ஆண் தேவையில்லை' என்ற கொள்கை எழும்ப இந்நூல் ஒரு காரணமாக அமைந்தது. பெண்களுக்கு ஆண்கள் தேவையில்லை என்கிற நிலையில் அவர்கள் தங்கள் விருப்பப்படி பலருடன் வரையறையற்ற பாலுறவு கொண்டோ, இருதர (இருபால் சேர்க்கை மற்றும் ஓரினச் சேர்க்கை இரண்டிலும் ஈடுபாடு) பால் சேர்க்கை (Bisexual) அனுபவித்தோ, ஓரினக் கல்வியில் ஈடுபட்டோ (Lesbian), மணம் செய்யாமல் தனி வாழ்க்கையை மேற்கொண்டோ (Celibate life style) வருவார்களேயானால் அது காலங்காலமாக இருந்துவரும் தனிக் குடும்ப அமைப்பை (Monogamous Family) முறித்து விடும். அதன்வழி, தந்தைவழிச் சமுதாயத்தின் சக்தியும் வலுவிழக்கும் என்று பாலியல் புரட்சி (Sexual Revolution) பற்றி இந்நூலில் ஆனி கொய்ட் கூறியுள்ளார்.

## பெண்ணின் வரலாறு

தந்தைவழிச் சமூகக் கருத்துருவம் கடந்த காலத்தின் வரலாற்றை உணர்த்தும். தந்தை வழிச் சமூகத்தின் தோற்ற

மானது, உடற்கூறு வேறுபாட்டிலோ பொருளாதார நிலையிலோ இல்லாமல் இருக்கும் அளவில் தொன்றுதொட்ட காலத்தில் பெண்கள் ஆண்களை விட உயர்வான நிலையில் இருந்ததால் ஏற்பட்டதாகும். பிற்பாடே, வரலாற்று உண்மைப்படி ஆண் மேலாண்மை தோன்றியது.

லண்டனில் உள்ள **தாய்வழிச் சமூக ஆய்வு மற்றும் மீட்பு நிலை** (Matriarchy Research and Reclaim in London) என்ற அமைப்பு ஒரு காலத்தில் தாய்வழிச் சமூகம் இருந்தது என்பதை ஆராய்ச்சி வழி ஒத்துக் கொள்கிறது. அந்நாளைய தாய்வழிச் சமூகம், சமாதானம் உள்ளதாகவும், சண்டைச் சச்சரவுகள் இல்லாத தாகவும், தெய்வீக ஈடுபாடு மிகுந்ததாகவும் அறியப்படுகிறது.

தாய்வழிச் சமூக வரலாற்றைக் கண்டு, அதை எடுத் துரைத்து, அதன் வழிப் பெண்களும் ஒரு காலத்தில் உயர்விடத் தைப் பெற்றிருந்தனர் என்பதைச் சுட்டிக்காட்டிச் சமூகத்தில் உயர்வு தாழ்வை ஒழிப்பது இவ்வாய்வின் நோக்கமாக அமைந்தது.

## தீவிரப் பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள்

தீவிரவாதப் பெண்ணியவாதிகளின் செயற்பாடுகள் மிகவும் புதியதாகவும் மக்களைக் கவர்ந்திழுக்கும் வகையிலும் அமைந் திருந்தன. அவர்கள் நடைமுறையிலிருக்கும் ஆணாதிக்கப் போக்கிற்கு எதிரான பண்பாட்டை (Counter-Culture) கடைப் பிடிக்கத் தொடங்கினர். சிறு சிறு குழுக்களாகச் செயற் பாட்டில் ஈடுபட்டனர். பாதிக்கப்பட்ட பெண்களும், பிற பெண்ணிய இயக்கங்களில் சேருவதைவிட, இத்தகைய சிறு குழுக்களில் எளிதாகத் தங்களை இணைத்துக் கொள்ள முடிந்தது. அவர்கள் தங்கள் எண்ணங்களையும், கருத்துக் களையும், உணர்வுகளையும் எளிதாக இக்குழுக்களில் பரிமாறிக் கொள்ள முடிந்தது. தந்தைவழிச் சமூகப் போக்கு, அதிகாரப் படிநிலை அமைப்பு (Hierarchical Structure) என்ற மேலாதிக்கப் போக்குகளை இக்குழுக்கள் புறக்கணித்தனர். தங்களுக்குள் ஆட்சி ஆதிக்கப் போக்கு இருக்கக் கூடாது என்பதற்காக, தலைமையை ஏற்படுத்திக் கொள்ளவில்லை. அனைவரும் சம வாய்ப்புகள் பெற்று, சம மதிப்புடன் விடுதலையாகச் செயல் பட்டனர் தலைமை வேண்டாப் பெண்ணியவாதிகள் (Anarcha Feminist) என்று இவர்கள் குறிப்பிடப்பட்டனர். இத்தகைய தலைமை வேண்டாப் போக்கு இங்கிலாந்திலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும் வளர்க்கப்பட்டது.

அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் (Sharing Experience) என்பது சிறு குழுக்களில் காணப்படும் மற்றொரு நடைமுறையாகும். இது 'விழிப்புணர்வூட்டல்' (Consciousness Raising) என்று சுட்டப்படுகிறது. ஒவ்வொரு பெண்ணும் தன் சொந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதால் பெண் அடக்குமுறைக்கான காரணங்களைக் கண்டறிவது எளிதாயிற்று. இம்முறையே அறுபதுகளின் இறுதியில் 'தனிநபர்களுக்குரியது பொதுவானது' (Personal is Political) என்ற தீவிரப் பெண்ணியவாதக் கொள்கை உருவாக வழிவகுத்தது.

தீவிரவாதப் பெண்ணிய குழுக்கள் 'எதிர்வு செயற்பாடுகள்' (Zap action) என்று சொல்லக் கூடிய நூதன போராட்ட முறையைக் கையாண்டு, தங்கள் கொள்கைகளைப் பரப்பி, மக்களை ஈர்த்தனர். இஃது அமெரிக்காவில் மிகப் பிரபலமடைந்த கொள்கைப் பரப்பு முறையாகும். சீர்திருத்தப் பிரச்சாரம் மேற்கொள்ளும் போது, குறிப்பாகக் கருக்கலைப்பு, இழிபொருள் இலக்கிய எதிர்ப்பு, அல்லது ஓரினச்சேர்க்கை உரிமை, கட்டுப்படா உரிமை (Gay Right) போன்ற கொள்கைகளைப் பரப்ப இம்முறை கையாளப்பட்டது.

தீவிரப் பிரிவினையாளர் (Radical Separatists) என்ற ஒரு பிரிவு தங்களைச் சுற்றி உள்ள தந்தைவழிச் சமூகப் பண்பாட்டை எந்த அளவு ஒதுக்கி வாழ இயலுமோ, அந்த அளவு ஒதுக்கி வாழ முடிவெடுத்தனர். தங்கள் வாழ்க்கையை ஆணாதிக்கச் சமூகத்திலிருந்து விலக்கி, தனியாகவோ அல்லது பிற பெண்களோடு சேர்ந்தோ வாழ்வது என்பதைத் தற்காலிக அல்லது நிரந்தர இலக்காகக் கொண்டிருந்தனர். நடைமுறையில் பிரிவினைவாதம் பின்பற்றுவதற்கு மிகக் கடுமையானதும், மூலதனம் அதிகம் உடையதுமாகும். இத்தகைய பிரிவினைவாதிகள் தங்களுக்கென்று நலவாழ்வு மையம், பத்திரிகைகள், புத்தகக் கடைகள், உணவகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பள்ளிகள், பாதுகாப்பு மையங்கள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொண்டனர். அமெரிக்காவில் இத்தகைய போக்கு அதிகரித்தது என்றாலும், பிரிட்டனில் பொருளாதாரச் சூழலால் (Economic Climate) இவ்வணுகு முறை வெற்றி பெறவில்லை.

## முடிவுரை

மேற்கண்ட பெண்ணியவாதங்களை உருவாக்குவதில் மேரி வோல்ஸ்டன் கிராப்ட், ஜான் ஸ்டூவர்ட் மில், சைமன்-டி

பெவாயர், கேட் மில்லட் போன்றவர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

தாராளப் பெண்ணியவாதம் மேற்கத்திய நாடுகளுடைய நீண்ட மரபின் அடிப்படையில்,புதிய கருத்துக்களை இணைத்துக் கொண்டுள்ளது. தனிநபர் விடுதலை, அரசியல் செல்வாக்கு, சமவாய்ப்பு போன்ற கோரிக்கைகளை மக்களாட்சிக்கு ஏற்ற முறையில் வடிவமைத்து வெற்றி பெற்றது.

சமதர்ம பெண்ணியம் முதலாளித்துவத்தின் வகுப்புவாத அடக்குமுறையை எதிர்த்துத் தன்னுடைய கொள்கைகளை வகுத்துக் கொண்டது. எனவே, அப்போக்குடைய மார்க்சியம் இடதுசாரி கொள்கை இவற்றிலிருந்து கருத்துக்களை எடுத்துக் கொண்டு, தன்னை வளர்த்துக் கொண்டது.

தீவிரவாதப் பெண்ணியவாதிகள், அடிப்படையில் ஆண் அடக்குமுறைக்கு ஆட்பட்டவர்கள். எனவே, அவர்கள் அதை எதிர்க்கும் தீவிரச் செயற்பாட்டாளர்களாக உருவாகினர். அவர்களுக்கு ஆண்கள் முக்கிய எதிரிகளானார்கள். அவர்கள் எந்த ஒரு முன்னேற்ற இயக்கத்தையும், பின்பற்றாமல் தங்கள் அனுபவத்தின் அடிப்படையில் தங்களுக்கென்று தனிப்பட்ட கொள்கைகளை வகுத்துக் கொண்டனர்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பத்திரிகைகளின் மூலம் பெண்ணியக் கொள்கைகள் பரிமாறப்பட்டு, ஒன்றுக்கொன்று இடைமிடையப்பட்டு வளர்ந்தது என்றாலும், அமெரிக்காவில் தீவிரவாதமே ஆற்றல் பெற்றிருந்தது. இங்கிலாந்தில் அரசியல் அமைப்பு மற்றும் மரபு ஆதிக்கப் போக்கு இவற்றின் காரண மாகச் சமதர்ம பெண்ணியமே வரவேற்கப்பட்டுப் பிரபல மடைந்தது.

# பெண்ணியக் கோட்பாட்டாளர்கள்

பெண்ணியம் என்பது திடீரென்று பிறந்து வளர்ந்த இயக்கம் அன்று. இவ்வியக்கத்தை உருவாக்க, வளர்க்கப் பாடுபட்டவர்கள் சுமார் மூன்று நூற்றாண்டைச் சேர்ந்தவர்களாவர். 17ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அப்ரா பெண் (Aphra Behn) முதல் இன்றைய கேட் மில்லட் (Kate Millet) வரை பலரும் பெண்ணியத்தின் அடிப்படைக் கொள்கைகளை உருவாக்கித் தந்துள்ளனர். இவர்களில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் மேரி வோல்ஸ்டன் கிராப்ட் (Mary Wollstone craft), ஜான் ஸ்டூவர்ட் மில் (John Stuart Mill), சைமன் டி பெவாயர் (Simone de Beauvoir), பெட்டிஃப்ரைடன் (Betty Friedan), கேட் மில்லட் (Kate Millet) போன்றவர்களாவர். மேரி வோல்ஸ்டன் கிராப்ட் பெண்ணிய இயக்கத்திற்கு வித்திட்டார் என்றால், சைமன் டி பெவாயரும், பெட்டி ஃப்ரைடனும் அதை வளர்த்தவர்களாவர். ஜூலியட் மைக்கேல் (Juliet Michael) ஷீலா ரோபோத்தம் (Sheilla Rowbotham), அட்ரைன் ரிச் (Adrienne Rich) போன்றோர் பெண்ணிய இயக்கத்தைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இவர்களைப் பற்றிய வரலாற்றை அறிவது பெண்ணியத்தை முழுமையாக அறிவதற்குத் துணை நிற்கும்.

## மேரி வோல்ஸ்டன் கிராப்ட் (1759-1797)

பெண்ணியக் கோட்பாட்டாளர்களிடையே காலத்தால் மூத்தவர் மேரி வோல்ஸ்டன் கிராப்ட் என்ற அம்மையார். இவர் 18 ஆம் நூற்றாண்டிலேயே பெண்ணுரிமைக்காக முதல் குரல் கொடுத்தவராவார். கி.பி 1792இல் 'பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு' (The Vindication of the Rights of Women) என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். இந்நூலில் பெண்ணியக்கம், பெண் விடுதலை, பெண் கல்வி, பெண்களுக்குச் சட்டத்தில் தகுந்த வாய்ப்பு, பெண் ஓட்டுரிமை, பெண்ணுக்குச் சொத்துரிமை, பெண் வேலை வாய்ப்பு என்ற புரட்சிகரமான கருத்

துக்கள் விளக்கப்பட்டிருந்தன. இந்நூல் தோன்றிய காலத்தில் அதிகம் பிரபலமடையவில்லை. அதுமட்டுமன்றி, மிகச் சில பெண்மணிகளே, அக்காலத்தில் இந்நூலின் கருத்தை வரவேற்றி ருக்கின்றனர். இந்நூலில், மேரி வோல்ஸ்டன் கிராப்ட், 'தங்கள் வாழ்நாளில் ஆண்கள் தங்களுக்கான உரிமையைச் சரிநிகராகப் பெண்களுக்கு விட்டுக் கொடுத்தும், ஓர் உயர்வான நிலையைக் கொடுத்தும் வாழ வேண்டும்' என்று வலியுறுத்தியுள்ளார். இவருடைய இக்கருத்தைக் ஹொரேஸ் வால்போல் (Horace Walpole) என்பவர் 'இயற்கைக்கு மாறானது' என்று வர்ணிக் கிறார். மேலும், இவர் வோல்ஸ்டோன் கிராப்ட்க்கு 'ஆடைக்குள் மறைந்திருக்கும் கழுதை புலி' (Hyena in Petticoats) எனும் அடைமொழியைக் கொடுத்து, அதன் மூலம், அவரைப் பூடக மாக எள்ளி நகையாடியுள்ளார்.

வோல்ஸ்டோன் கிராப்ட், தம் இளம் வயதிலிருந்ததே பெண் விடுதலைக்காகப் போராடியவர். பெண் என்ற பாகுபாகு பாட்டால் உண்டான பல கொடுமைகளைத் தன்னுடைய அனுபவத்தின் மூலமே தெரிந்து கொண்ட இவர், தம்முடைய குடிகாரத் தந்தையினால் பட்ட துன்பங்கள் மூலம், பெண் விடுதலை இன்றியமையாதது என்றுணர்ந்து போராடத் தொடங்கினார். தன்னுடைய 28ஆவது வயது வரை பெண் களுக்கே உரியது என்று முத்திரை குத்தப்பட்ட ஆசிரியைத் தொழில், வீட்டுப் பராமரிப்பு, குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளுதல் போன்ற வேலைகளைச் செய்து வந்தவர், பின், தாம் ஒரு எழுத்தாளராகவும், தீவிரச் சீர்திருத்தவாதியாகவும் உருவாக எண்ணி, அவ்வேலைகளைத் துறந்தார். தான் வாழ்ந்து வந்த, டுபிளினை விட்டு இலண்டனில் குடியேறினார். அங்குத் தத்துவ ஞானியான வில்லியம் காட்வினைச் (William Godwin) சந்தித்து மணந்து கொண்டார். கில்பர்ட் இம்லே (Gilbert Imley) என்ற ஆண் நண்பனின் தொடர்பும் ஏற்பட்டது.

வோல்ஸ்டோன் கிராப்ட் பெண்களின் ஓட்டுரிமைக்காகத் தம் காலத்தில் குரல் எழுப்பினார். பெண்கல்வியை வற்புறுத் தினார். "பெண்கள் படிப்பறிவு பெறுவதினால் தகுதியானவர் களாகிறார்கள்; தகுதியானவர்களாவதால் நற்குணமுடையவர் களாகிறார்கள்; எனவே, சமூகம் அனைத்துமே மகிழ்ச்சியாக, நிறைவாக வாழ முடியும்; சமூகத்தில் போராட்டத்திற்கு இடம் இருக்காது" என விவரிக்கிறார்.

பாலுறவு பற்றியும் இவர் வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்தார். பாலுறவு என்பது இயல்பானது. ஆணுக்கு அது

எவ்வளவு தேவை என உணரப்படுகிறதோ அதுபோல் பெண்ணுக்கும் தேவை என உணரப் படவேண்டும் என்கிறார். உணர்ச்சிக்கு இடம் கொடாமல், அறிவுக்கு இடம் கொடுத்து நோக்கினால் ஆண்கள் இவ்வாதத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள வாய்ப்புண்டு என்று கூறினார். மேலும், இனம், வகுப்பு இவற்றிலும் சமநிலை வேண்டும் என்றும் வற்புறுத்தினார்.

கிராப்ட், ஆங்கிலச் சமூகத்தில் பெண்கள் நியாயத்திற்குப் புறம்பாக நடத்தப்படுகிறார்கள் என்றும், கல்வியின் மூலம் மட்டுமே இப்போக்கைச் சீர் செய்ய முடியும் என்றும் நம்பினார். தந்தைவழி ஆட்சிமுறையில் அமைந்த குடும்ப அமைப்பில், பெண்களின் கல்வி மறுக்கப்பட்டதால் அவர்களுடைய திறமையும் சக்தியும் வீணாக்கப்பட்டுவிட்டன என்று வருந்துகிறார்.

வோல்ஸ்டோன் கிராப்டின் தனிப்பட்ட வாழ்க்கை, போராட்டம் நிறைந்ததாகவும், சர்ச்சைக்குரியதாகவும் அமைந்திருந்தது. தம் காதலர்களால் கைவிடப்பட்டும், காட்டிக் கொடுக்கப்பட்டும் நட்டாற்றில் விடப்பட்ட துடுப்பில்லாப் படகு போல் அலைக்கழிக்கப்பட்டார். தம் 38 ஆவது வயதில் குழந்தைப் பேற்றின் போது காலமானார். இவர் இறந்தபின், இவரது கணவர் வில்லியம் காட்வின் தம் மனைவியின் அந்தரங்க வாழ்வு பற்றி 'மேரி வோல்ஸ்டோன் கிராப்டின் நினைவுகள்' (Memories of Mary Wollstone Craft) என்ற நூலை எழுதி 1798 வெளியிட்டார் இதில் அவரின் தனிப்பட்ட வாழ்வைப் பகிரங்கப் படுத்தினார். ஏற்கெனவே இவரது தீவிரவாதத்தை எதிர்த்து வந்த பழமைவாதிகள் அதற்கு இவரது வாழ்வை ஒரு காரணமாகக் காட்டி இவரை ஒரு 'மன நோயாளி' என முத்திரை குத்தவும், இந்நூல் துணைபோயிற்று.

தம் வாழ்நாளில் போற்றப் படாத இவர், பின் நாட்களில் பெண்ணியவாதிகளால் போற்றப்பட்டார்; மதிக்கப்பட்டார்; இவரது கருத்துக்கள் பெண்ணிய இயக்கத்திற்கு முன்னோடியாக அமைந்தன. அமெரிக்கப் பெண்ணியவாதியான மார்கரெட் ஃபுல்லர் (Margaret Fuller) என்பவர் இவரைப் பற்றிக் கூறுகையில், மேரி வோல்ஸ்டோன் கிராப்ட், தாம் எழுதிச் சாதித்ததை விடத் தம் சொந்த வாழ்க்கை அனுபவம் மூலமாகச் சாதித்தது அதிகம் என்று வர்ணித்துள்ளார்

## ஜான் ஸ்டூவர்ட் மில் (1806-1873)

ஜேம்ஸ் மில் என்ற தத்துவ ஞானியின் மகனான ஜான் ஸ்டூவர்ட் மில் ஆங்கிலத் தத்துவ ஞானியாவார், அத்துடன்

சிறந்த பொருளாதார நிபுணராகவும் அரசியல்வாதியாகவும் விளங்கினார். இவர், ஒரு பிறவி மேதையாகக் கருதப்பட்டவர். அரசியல், பொருளாதாரம், சமூகவியல் பற்றிப் பல நூல்களை எழுதியுள்ளார்.

பெண்ணியத்தைப் பொறுத்தமட்டில், ஒரு ஆண்மகனாக இருந்து அதன் வரலாற்றில் புகழ் பெற்றவராக விளங்குகிறார். பெண்ணடிமைத்தனத்தை ஒழிப்பதில் ஒரு தாராளவாதியாக வாதித்து, சாதனை பல கண்டவர். உலக அளவில் பெண் விடுதலை, அவர்களின் கல்வி வாய்ப்பு மற்றும் கருப்பர் அடிமை ஒழிப்பு போன்றவற்றிற்கு மிகவும் பரிந்துரைத்தார். பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து இவர் எழுதிய 'பெண்ணடிமை நிலை' (The Subjection of Women) என்ற நூல் மிகப் புகழ் பெற்றது. இந்நூலில், பெண்ணடிமைத் தனம் என்பது கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டும் என்றும் விடுதலை அவர்களுக்கு அளிக்கப் படுதல் வேண்டும் என்றும் தற்போதுள்ள சமூக அமைப்பில் காணப்படும் 'பாலியல் பாகுபாடு' என்பது சட்டப்படி அகற்றப் பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். இப்பாகுபாடு அடிப்படையில் தவறுடையது, ஆதலால் இது மனிதகுல முன்னேற்றத் திற்கு முதன்மைத் தடங்கலாக உள்ளது என்றும் விளக்கியுள்ளார். முழு சமவுரிமை என்ற கொள்கையை நடைமுறையில் கொண்டு வந்தால் மட்டுமே எல்லா வர்க்கத்தினருள்ளும் முன்னேற் றத்தைக் காண முடியும் என்றும், அதை நடைமுறைப் படுத்து வதில் எந்தச் சக்தியும் குறுக்கிடக் கூடாது என்றும் வாதிட் டுள்ளார்.

மேலும், பெண்ணடிமைத்தனத்திற்கு ஆண்களின் அரசியல் பங்கே காரணம் என்று கருதும் இவர், குடும்ப அமைப்பில் காணப்படும் ஆணாதிக்கத்தை* ஒழிக்க வேண்டும் என்றும், அப்படி ஒழித்தால்தான் அதனை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்தை மாற்ற முடியும் என்றும் கருத்துரைத்துள்ளார்.

ஸ்டூவர்ட் மில், பிரிட்டிஷ் நாடாளுமன்றத் தேர்தலில், வெஸ்ட்மின்ஸ்டர் தொகுதியில் போட்டியிட்டபோது, 'பெண்கள் எல்லோர்க்கும் எல்லாவிதத்திலும் சமம்' என்ற கருத்தைத் தன் முக்கிய கொள்கையாகப் பிரகடனப்படுத்தி வெற்றி பெற்றார். **1866** இல் ஹவுஸ் ஆப் காமன்ஸில் (House of Commons)

---

* ஆண்களிடம் காணப்படும் 'தான்' என்ற எண்ணமும், அவர்கள் தங்கள் வலிமை பற்றிக் கொண்டிருக்கும் நம்பிக்கையும் ஆகும்.

கென்சிங்கிடன் சொஸைட்டி, ஸ் சப்ரேஜ் பெடிஷன் (Kensington Society's Suffrage Petition) என்ற மனுவைத் தாக்கல்செய்தார். பெண்கள்ஓட்டுரிமை பெறுவதற்கான இம்மசோதா அவ்வாண்டில் குறை கூறப்பட்டதோடு, ஆதரவின்றி ஒதுக்கப்பட்டது. ஆனால் ஸ்டுவர்ட் மில்லின் தொடர் முயற்சியால் பின்வந்த ஆண்டுகளில் பெருத்த வெற்றியையும், ஆதரவையும் பெற்றது. இதுவே, இங்கிலாந்தில் பெண்களுக்கான முதல் வெற்றிப்படியாக இருந்தது.

இவரின் மாற்றாள் மகளான ஹெலன் டெய்லர் என்பவரைப் 'பெண்கள் ஓட்டுரிமை இயக்க'த்திற்குத் தலைவி யாக்கினார். இவ்வமைப்பின் கீழ் பல பெண்களை ஒன்று சேர்த்தார். அவர்கள் மூலம் நிதி திரட்டி, இயக்கத்தை வளர்த்தார். பெண்கள் வெளிப்படையாக எல்லா இயக்கங் களிலும் பங்கேற்க வேண்டும் என்ற தம் கொள்கையை இதன் மூலம் செயலாக்கினார். மேலும், பெண் கல்விக்காக, தம் சொத்தின் பெரும் பகுதியை அர்ப்பணித்தார்.

'ஹெரியட் டெய்லர்' என்ற பெண்மணியின் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார் மில். அவரோடு இணைந்து 'சமவுரிமைக் கொள்கை' (Principle of Equal Rights) என்ற சக்தி வாய்ந்த கொள்கையைப் பரப்பினார்.

இவரின் கொள்கைகளைப் பார்க்கும்போது, இவரை 'இங்கிலாந்தின் பாரதி' என்று வர்ணிக்கத் தோன்றுகிறது.

## சைமன் டி பெவாயர் (1908-1986)

சைமன் டி பெவாயர் என்பவர் பிரெஞ்சு தத்துவ ஞானி. 1949 இல், பிரெஞ்சு மொழியில் வெளிவந்த 'லே டியாக்ஸைன் செக்ஸ்' என்ற இலக்கியத் தரம் வாய்ந்த நூலின் ஆசிரியராவார். இந்நூல், ஆங்கிலத்தில் 'The Second Sex' என்ற பெயரில் மொழிபெயர்க்கப்பட்டு உலகளவில் பிரபலமானது. தமிழில் இந்நூலை 'இரண்டாம் பால்' என்று மொழி பெயர்க்கலாம்.

பெவாயர், தம் கருத்துக்களாலும் செயல்பாட்டாலும், புதிய பெண்ணியத்தின் ஒரு தலைசிறந்த பெண்மணியாக விளங்கினார். தம்முடைய வாழ்வில், தாமே ஒரு சுதந்திரப் பெண்ணாக இருந்து திருமணம் செய்து கொள்ளாமல், பிள்ளைப் பேறுமின்றி, ஆண், பெண் இருபால் நண்பர்களோடு, 'சமத்துவம்' என்ற கொள்கையை நடைமுறையில் காண்பித்து வாழ்ந்து வெற்றி கண்டவராவார்.

பெவாயர், இரண்டாம் பால் என்ற நூலை எழுதும் போது, 'தான் ஒரு பெண்ணியவாதி அல்ல' என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். அதாவது தொடக்கத்தில் பெண்ணிய இயக்கத்தோடு தொடர்பு கொள்ளாது, பெண்கள் நலனில் அக்கறை கொண்டவராக மட்டுமே தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். பெண்களுக்கு எல்லா உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என்று கூறிவந்தார்.

ஒரு சமதர்மவாதியாக (Socialist) இருந்த இவர், 'பாலியல் வேறுபாடு' சமூகத்தைப் பாதிப்பதையும், அது பல புரட்சிகர மான இடதுசாரிகளிடையேயும் நடைமுறையில் இருந்ததையும் கண்டு வருந்தினார். எனவே, பெண்கள் தங்களுக்கான உரிமை களைப் போராடிப் பெறவில்லையானால், அவர்களுடைய எதிர்காலம் சூன்யமாகும் என்ற கருத்து அவர் மனதில் எழுந்தது. அதன் காரணமாக, 1970இல் தீவிரவாதப் பெண் இயக்கமான 'பெண்கள் விடுதலை இயக்கத்தில்' (Women's Liberation Movement) தம்மை இணைத்துக் கொண்டார். அவ்வியக்கத் தின் முன்னேற்றத்திற்காகப் பலவழிகளில் பாடுபட்டார்.

பெவாயர் 1971 இல், ஜீசேல் ஹலிமி (Gisele Halimi) என்பவரோடு இணைந்து, பெண்ணியச் சட்ட மறுமலர்ச்சிக் கழகம் (Feminist Legal Reform Group) என்ற அமைப்பைத் தோற்றுவித்து நடத்தினார் பிரான்ஸில் கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கியதில். இவரது பங்கு தலையாயதாகும். இவர் 'கொஸ்டின்ஸ் ஃபெமினிஸ்ட்' என்ற பிரெஞ்சுப் பத்திரிகை யின் ஆசிரியராக இருந்தார்; 1974 இல் 'லீக்யூடு ப்ராய்ட் டி பெமிஸ்' (League of Women's right) என்ற பிரெஞ்சு மொழிக் கருத்தரங்கத்தைத் தலைமை ஏற்று நடத்தினார். பிரான்சு நாட்டைச் சேர்ந்த மார்க்சிய பெண்ணியவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்.

பெவாயர், பெண்களுக்கென தனிப்பட்ட சிறப்புச் சலுகைகள் கோரப்படுவதை ஏற்றுக் கொள்ளாததுடன், அதை வன்மையாக எதிர்க்கவும் செய்தார். 'மனித இனம் என்பது ஓரினம், எல்லோரும் எல்லார்க்கும் சமம்' என்பது இவரது அசைக்க முடியாத கருத்தாக இருந்து வந்தது. அதனடிப்படையில், பெண்கள் ஆண்களுக்கு நிகராக உழைத்து, தங்கள் விடுதலையை நிலைநாட்ட வேண்டும் என்ற கொள்கை யைப் பரப்பி, அக்கொள்கையோடே வாழ்ந்து மறைந்தார்.

## பெட்டி ஃப்ரைடன் (1921-)

பெட்டி ஃப்ரைடன் ஒரு மனோதத்துவ அறிஞர், இவர் 'பெண்ணியல்பு புதிர் நிலை' (Feminine Mystique) என்ற நூலின் ஆசிரியராவார். பல வருடங்களாகப் பெண்ணியத்தில் இருந்தும் பிரபலமாகாத நிலையில், இந்நூல் உலக அரங்கில் எதிர்பாராத அளவில் அவரை அடையாளம் காட்டியது. இந் நூலில் பலரும் சொல்லத் தயங்கிய/பயந்த சில புரட்சிகரமான கருத்துக்களை இவர் துணிந்து வெளியிட்டார். வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் போன்றவை இவரை ஒரே நாளில் உலக மேடையில் தோன்றச் செய்தன.

பெட்டி ஃப்ரைடன் 'புதிய பெண்கள் இயக்கத்தினைத் தொடங்கி வைத்தவர்' என்றும்; 'பெண்ணியக்கத்தின் இரண்டாவது அலைக்கு வித்திட்டவர்' என்றும் போற்றப்படுபவர். இவர் பெண்ணியம் என்பது 'மனித உரிமைகள் என்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ளது' என்று விளக்கியுள்ளார். இவரது தனித்துவப் போக்கும், தாராளவாதமும் அநேக அமெரிக்கப் பெண்களிடையே வரவேற்பைப் பெற்றது. ஃப்ரைடன் தாராளவாதப் பெண்ணியத்தை 'ஆதாரப் பெண்ணியம்' (Mainstream Feminism) என்று சுட்டியுள்ளார்.

1966இல் 'NOW' என்ற 'தேசிய மகளிர் அமைப்பு' என்பதைத் தொடங்கி, 1970 வரை அதன் தலைவியாகப் பணியாற்றினார். 1971இல் 'தேசிய மகளிர் அரசியல் குழு' (National Women's Political Caucus) அமைப்பதற்கும் பெரிதும் உதவினார். 1973இல் முதல் 'மகளிர் வங்கி' (Women's Bank) அமைப்பதற்கும் உதவினார். அவ்வாண்டிலேயே, அகில உலகப் பெண்ணியவாதிகளின் கூட்டத்தை நடத்தினார். அத்துடன் சமவுரிமைக்கான 'தேசிய மகளிர் போராட்டம்' (National Women's Strike for Equality) ஒன்றையும் நடத்தினார். எழுபதிலிருந்தே இவர் சட்ட மாற்றத்தை வலியுறுத்தி, குறிப்பாக, சமவுரிமை மசோதா கொண்டுவரப்பட வேண்டும் என்று தீவிரமாகப் போராடினார்.

இவர், தம் முதல் நூலான 'பெண்ணியல்பு புதிர்நிலை' என்பதில், பெண்கள் ஒரு மனைவியாகவும், தாயாகவும் மட்டுமே வாழ்ந்து விடக்கூடாது; கல்வியறிவு மூலம் தங்களை ஒரு முழுமையான மனிதராக உருவாக்கிக் கொண்டு முன்னேற வேண்டும் என்று எடுத்துரைத்தார். ஆனால் 1981இல், சுமார் 18 வருடங்

களுக்குப் பின், 'இரண்டாம் நிலை' (The Second Stage) என்ற நூலில், முந்தைய கருத்திலிருந்து வேறுபடுகிறார். இந் நூலில், புதிய பெண்ணியக் கொள்கையான 'பெண்கள் ஆண் மூலமாகக் குழந்தை பெறுவது கூடாது' என்ற கருத்தைக் கடுமையாகச் சாடியுள்ளார். பெண்கள் விடுதலை அவர்கள் விருப்பத்தின் அடிப்படையிலேயே (Women's liberty, by their own choice) என்பது இவரின் கருத்தாகும். இவர் தீவிரப் பெண்ணிய வாதிகளைக் கடுமையாக எதிர்த்தார். இவர்களால், பெண்ணிய இயக்கம் திசை திரும்பி, அழிவுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று எச்சரிக்கை விடுத்தார். ஃப்ரைடனின் இம் மாற்றத்தைக் கருத்தில் கொண்டு, சில்வா எய்ன்ஸ்டீன் என்பவர் இவரைத் 'தற்காலத்திய மரபு பெண்ணியவாதி' என்றும், 'மறு பார்வை கொண்ட தாராளப் பெண்ணியவாதி' என்றும் மதிப்பிட்டுள்ளார்.

## கேட் மில்லட் (1934—)

கேட் மில்லட், புதிய பெண்ணிய அமைப்பின் மிகச் சிறந்த கோட்பாட்டாளராவார். அமெரிக்க எழுத்தாளரான இவர் சிறந்த கலைஞரும் ஆவார். பெண் விடுதலை இயக்கத்திற்குத் தொடக்க காலத்தில் வித்திட்டவர். அந்த இயக்கத்தில் செல்வாக்குடையவராகவும் விளங்கினார். 1960களில் குடியுரிமை இயக்கத்தில் (Civil Right Movement) ஒரு எழுச்சிமிக்க செயல்பாட்டாளராகத் திகழ்ந்தார். 1970இல் 'பாலியல் அரசியல்' (Sexual Politics) என்ற இவரது நூல் வெளிவந்து, பெருமளவில் வரவேற்புப் பெற்றது. 'NOW' இன் தொடக்க உறுப்பினரான இவர், பின் தீவிரவாதியானார். சட்டச் சீர்திருத்தம் மற்றும் பொருளாதார மாற்றம் மட்டும் பெண் விடுதலைக்கு வித்திடும் என்று இவர் நம்பவில்லை. ஆண்-பெண் இருபாலாரும் தங்களின் சொந்த மற்றும் பாலியல் நடவடிக்கைகளை மாற்றிக் கொண்டால்தான், முழு விடுதலை பெற முடியும் என்று கருத்துரைத்துள்ளார். 1970இல் அமெரிக்கப் பெண்கள் விடுதலை இயக்கத்தின் ஒரு சாரரான பெண் ஓரினச் சேர்க்கையாளரிடையே எழுந்த பிரச்சினை குறித்து வாதாடினார். அப்பொழுது, தம் சொந்த வாழ்க்கையில் அனுபவித்த, இருபால் சேர்க்கையைப் பற்றி வெளிப்படையாகப் பேசினார். ஆனால், அவருடைய இந்தக் கொள்கைக்காகத் தாக்கிப் பேசப்பட்டார். பிற்பாடு, கவலையிலா விடுதலைப் பெண்கள் (Gay Liberation Women) இவருக்கு ஆதரவு கொடுத்து, தங்கள் இயக்கத்தை மேலும் வலுவுடையதாக்கிக் கொண்டனர். எழுபதுகளின் முடிவு வரையில்,

தீவிரச் செயற்பாட்டாளராக அகில உலக அளவில் அறியப் பட்டார். ஆனால், பெண்கள் உரிமைக்கான இவரது நடவடிக் கையும், போராட்டமும் இவரை ஈரானிலிருந்து வெளி யேற்றியது. பின்பு, நியுயார்க்கிலும் லாஸ் ஏஞ்சல்ஸிலும் சிற்பி யாகத் தம் வேலையைத் தொடர்ந்தார். மேலும் 1971இல் பெண்கள் பற்றிய ஒரு படத்தை (Three Lives) வெளிக் கொணர்ந் தார். 1974இல் தம்முடைய தன்வரலாற்றை 'ப்ளையிங்' (Flying) என்ற பெயரில் எழுதி வெளியிட்டார். 1976இல் தி ப்ராஸ்டிடியுசன் பேப்பர்ஸ் (The Prostitution Papers) என்ற நூலும், 1977இல் சீதா (Sita) என்ற நூலும், 1979இல் 'தி பேஸ்மெண்ட்: மெடிடேஷன் ஆன் எ ஹியூமன் சேக்ரிபைஸ்' (The Basement; Meditation on a Human Sacrifice) என்ற நூலும் எழுதி வெளியிட்டார்.

## முடிவுரை

ஓர் இயக்கம் உருவாக வேண்டுமெனால், அது அடிப்படை யானக் கோட்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும். பெண் ணியக் கோட்பாடுகள் பெண் விடுதலை, ஆண்களுக்கு நிகரான சமவுரிமை, சம வாய்ப்பு, சம ஊதியம் இவற்றைப் பெறுதல், காலம் காலமாக இருந்து வந்த ஆணாதிக்கத்தை எதிர்த்தல் போன்றவற்றை வற்புறுத்துவதாகும். இக்கோட்பாடுகளை உருவாக்கித் தந்தவர்கள், பெண்ணிய வரலாற்றில் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

# பெண்ணிய நூல்கள்

பெண்ணியத்தை மிகச் சரியாகப் புரிந்து கொள்வதற்கும் அதை வெற்றிகரமாகக் கை கொள்வதற்கும் பல நூல்கள் துணை செய்கின்றன. அந்நூல்கள் வெவ்வேறு காலக்கட்டங்களில் வெவ்வேறு சூழலில் எழுதப்பட்டிருந்தாலும், அந்தந்தக் காலப் பெண்ணிய வளர்ச்சிக்கு மட்டுமன்றி, இன்றுவரை இவ்வியக்க வளர்ச்சிக்கும் துணை செய்து வருகின்றன. பெண்ணியத்தின் எழுச்சிக்கும், போராட்டத்திற்கும் உத்வேகம் கொடுத்த அந் நூல்கள், சமூக மாறுதலுக்கும் வித்திட்டுள்ளன என்ற வகையில் அனைவரும் அறிந்து கொள்ளத்தக்கன. பெண்களுக்கு விழிப் புணர்வூட்டி, ஆக்க நெறிச் செயல்பாடுகளுக்கு வித்திட்ட அந் நூல்களுள் குறிப்பிடத்தக்கன, பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு (The Vindication of the Rights of Women), பெண் ணியல்பு புதிர்நிலை (Feminine Mystique), இரண்டாம் பால் (The Second Sex), பாலியல், அரசியல் (Sexual Politics) என்ற நான்குமாகும்.

## பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு (The Vindication of the Rights of Women)

பெண்ணுரிமைக் கொள்கை நிறுவீடு என்பது மேரி வோல்ஸ் டோன் கிராப்ட் என்ற புகழ்பெற்ற தத்துவவாதியால் எழுதப் பட்ட மிக நீண்ட வாத நூலாகும். இது, 1792இல் இங்கிலாந்தில் வெளியானது: புதிய கண்ணோட்டத்தை உடைய அரசியல் தத்துவம், தாராளப் போக்கு இவை இரண்டும் கலந்து, 18ஆம் நூற்றாண்டில் மானிடச் சமூகத்தின் உரிமைகளை மேம்பாடு அடைய செய்யத் தூண்டிய நூலாகும். ஆணினத்தைச் சார்ந்த, அதிதீவிரத் தாராளவாதிகள் (Most radical of the male liberas) பொதுவாகவே, ஆண்கள் உரிமைகளும் ஆற்றலும்அதிகம் உடையவர்கள் என்றும், பெண்கள் இயற்கையிலேயே பலவீன மானவர்கள் என்றும், அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க

வேண்டும் என்றும் எண்ணி இருந்த காலக்கட்டத்தில், வோல்ஸ் டோன் கிராப்டின் இந்நூலானது, அவரின் தாராளப் போக்கை எடுத்துக் காட்டியதுடன், பெண்ணின் முன்னேற்றத்தை எடுத்துரைக்கும் முதற்படியாகவும் அமைந்தது. மேலும் தன்னுடைய நூலில் பெண்களின் பலவீனம் என்பது, சமூக அமைப்பின் அடிப்படையிலேயே அமைந்தது என்று விளக்கியுள்ளார். இதைத் தகர்த்து எறிந்து அவர்கள் முன்னேற, 'கல்வி கற்பதே, அதிலும் மேற்படிப்புக்குச் செல்வதே ஒரே வழி முறையாகும்' என்கிறார். சிறுவர் சிறுமியருக்குச் சமவுரிமை மற்றும் நல்ல கல்வி வாய்ப்புக் கொடுத்து, வேலை வாய்ப்புக்களையும் அளித்தால், அவர்கள் நன்கு முன்னேற முடியும் என்றும் கருத்துரைத்துள்ளார். இந் நூலின் இக்கருத்துக்கள் பொதுமக்களை வெகுவாகக் கவர்ந்தன. அதே சமயம் ஒரு சாராரால் தாக்கியும் பேசப்பட்டன. ஆனால் பிற்காலத்தில் இவருடைய சொந்த வாழ்க்கையை அறிந்த சமூகத்தினரும் மற்றும் பெண்ணியவாதிகளும் இந்நூலைப் பெரிதும் புகழ்ந்தனர். அதற்கும் மேலாக, இன்றைய நாளில் 200 ஆண்டுகள் சென்ற பின்னும், புகழ்ந்து பேசக்கூடிய நூலாக உள்ளது அதன் சிறப்பாகும்.

## பெண்ணியல்பு புதிர் நிலை (Feminine Mystique)

இந்நூல், 1963இல் அமெரிக்காவில் வெளியானது. இதன் ஆசிரியர் பெட்டி ஃப்ரைடன். பெண் விடுதலையை விளக்கும் இந்நூல் நல்ல வரவேற்பைப் பெற்றது.

இந்நூல், அமெரிக்கப் பெண்களுக்கு உண்டான பிரச்சினைகளையும், அதிருப்தியையும், இன்னதென்று பெயரிட முடியாத பிரச்சினைகள் குறித்தும் (Problem that has no name) அழகாக விளக்குகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், அமெரிக்காவின் புறநகர்ப் பகுதியில் வாழும் சாதாரணப் பெண்மணிகளின் சாதாரணக் கனவுகள் பற்றிப் பகிரங்கமாக வெளிப்படுத்தியது. இது போன்ற கருத்துக்களைப் பலர் முன்பே கூறியிருந்தாலும் அவை இந்த நூல் விளக்கியபடி ஒரு தாக்குதலை மக்களிடையே ஏற்படுத்தவில்லை. தனக்கென்ற ஒரு தனி வழியிலும் மொழி நடையிலும் விளக்கியதே இதன் சிறப்புக்குக் காரணங்களாகும்.

அதிகம் முன்னேறாத புறநகர்ப் பகுதிப் பெண்கள் விளங்காச் சூழலில் வாழ முற்பட்டபோது, அவர்கள் ஆண்களைச் சார்ந்தும் அவர்களோடு உறவு கொண்டும், அவர்களால் அரவணைக்கப்

பட்டும், பிள்ளைகள் பெற்றுக் கொண்டும், குடும்பத்தைப் பேணிக் கொண்டும், எதற்கும் மற்றவர்களை எதிர்பார்க்கும் சிறு குழந்தைகளைப் போன்றும் தான் வாழ முடிந்ததே தவிர அவர்களாக, தற்சார்புடன் வாழ இயலவில்லை. அப்பெண்களும் மேற்கொண்டு முன்னேறவோ, சிந்திக்கவோ தயாராக இல்லை. இந்நிலையிலேயே நீடித்திருப்பதற்கான காரணங்களையும் ஆராய்ந்து கூறியுள்ளார்.

சமுதாயத்தில் பாலுக்கேற்ற படிப்பு முறை நிலவியது (Sex directed Education) ஒரு காரணமாகும். அதாவது, சமையற்கலை பெண்களுக்கும், அறிவியல் ஆண்களுக்கும் என்ற வேறுபாடாகும்.

மகளிர் இதழ்களும், விளம்பர உத்திகளும், நாகரிக உந்துதலும், ப்ராய்ட் கொள்கையின் அடிப்படையில் தோன்றிய உளவியல் கருத்துக்களும், மரபு கருத்தாக்கங்களும் பெண் இனம் சார்பு நிலையில் இருக்க மற்றொரு காரணமாக அமைந்துள்ளன என்கிறார் ஃப்ரைடன்.

மிகச் சிறந்த உளவியல் கோட்பாட்டாளர்களாலும் கூட, பெண்ணை ஒரு தனி மனுஷியாக, அவள் ஆணைப் போன்றே எல்லா விதத்திலும் வளரக் கூடிய ஓர் உயிரியாகக் காண முடியவில்லை. அநேக மரபு வழி வந்த கருத்துக்களும், மறை அச்சச் சூழலமையும் ஆண்–பெண் வேறுபாட்டின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. பெண் (ஒரு போதும்) தன்னைத் தானே உணர்ந்து கொள்ளாத நிலையும், காலம் காலமாகத் தொடர்ந்து வந்த முந்தைய நிகழ்வுகளின் பாதிப்பும் (Shadow of the past) பெண்கள் புதிய பாதையை நோக்கி அடியெடுத்து வைக்க இயலாத நிலையை உணர்த்துகின்றன என்று ஃபிரைடன் சுட்டிக் காட்டுகிறார்.

மேலும், அவர், பெண்கள் அதிக அளவு கல்வி பெற்று, தன்வாழ்வைத் திட்டமிட்டு, ஆண்களுக்கு நிகராக உழைத்துச் சம்பாதித்து, வாழ்வினை அர்த்தமுள்ளதாக்கிக் கொண்டால் மட்டுமே அவர்கள் புதிய பாதையில் செல்ல முடியும் என்று உரைக்கிறார்.

பெட்டி ஃப்ரைடன், மேற்கூறிய ஆய்வுக் கருத்துக்களைப் பல உளவியல் அறிஞர்கள், சமூகஅறிவியலாளர்கள் சாதாரணப் பெண்மணிகள் இவர்களைப் பேட்டி கண்டதன் மூலம் திரட்டினார். அதன் மூலம் அவரால், அதிர்ச்சிக்குரிய ஓர் உண்மையை

உலகுக்கு இனம் காட்ட முடிந்தது. பல லட்சக்கணக்கான மனைவிமார்களும் தாய்மார்களும் தங்களின் இயலாமையினால் பல வருடங்களாக மனதிற்குள்ளேயோ, தங்களுக்குள்ளேயோ வருத்திக் கொண்டே வந்திருக்கின்றனர். எனவே, இன்று அவர்கள் 'குறுகிய வட்டத்தில் இருந்து வெளியேறப் பயப்படுதல்' என்ற சூழலுக்கு ஆளாகியுள்ளனர் என்கிறார். இதை, அவர் 'Claustrophobia' என்ற வார்த்தையால் மிக அழகாக வர்ணித்துள்ளார்.

வெறுப்பின் உச்சக்கட்டத்தில் இருந்த பல பெண்கள் மாற்றுவழி தெரியாது, அதிகப்படியான மதுவுக்கும், மாத்திரைகளுக்கும், உடலுறவுக்கும் அடிமையாகின்றனர் என்று இந்நூல் எடுத்துக் காட்டியுள்ளது.

பின்னாளில், அமெரிக்கப் பெண்களிடையே, விழிப்புணர்ச்சியையும், வேறுபட்ட நோக்குகளையும் ஏற்படுத்த இந்நூல் பெரிதும் துணை நின்றது.

1970களில் இந்நூல் அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் மட்டுமே சுமார் 10 லட்சம் பிரதிகள் வரை விற்பனையாகி சாதனை புரிந்தது.

அமெரிக்காவில் பெண்ணியத்தின் இரண்டாவது அலை (Second wave of Feminism in America) ஏற்படுத்தியதற்கு இந்நூல் பெரிதும் காரணமாக இருந்திருக்கிறது. இந்நூலுக்கு ஏற்பட்ட வரவேற்பே பெட்டி ஃப்ரைடனை, 'NOW' என்ற அமைப்பைத் தோற்றுவிக்கத் தூண்டியது.

## இரண்டாம் பால் (The Second Sex)

சைமன் டி பெவாயர் இந்நூலின் ஆசிரியர். முதன் முதலாகப் பிரெஞ்சு மொழியில் 1949ஆம் ஆண்டு இந்நூல் வெளியானது. 1952இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடப்பட்டது. மேலும், புதிய பெண்ணிய இயக்கங்கள் தொடங்கும் முன்பே (சுமார் 20 வருடங்களுக்கு முன்பே) இந்நூல் வெளியிடப்பட்டு, பெண்ணிய மறுமலர்ச்சிக்கு (Feminist Renaissance) அடிகோலியது. ஆலிஸ் ரோஸி (Alice Rossi) என்ற பெண்ணியவாதி, பெவாயரின் நூலானது, 'பழைய பெண்ணியம் மற்றும் புதிய பெண்ணியம் இவை இரண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை விளக்கும் நூலாகும்' என்று விமர்சிக்கிறார். இந்நூலின் கருத்

துக்களை ஒட்டிப் பல நூல்கள் பின்னால் வெளியாயின. பெவாயர் தாம் ஒரு தீவிரப் பெண்ணியவாதி ஆவதற்கு முன்பே இந்நூலை இலக்கியத்தரம் வாய்ந்ததாகவும், அறிவார்ந்த படைப்பாகவும், அதிக அரசியல் கருத்து இல்லாததாகவும் எழுதியுள்ளார். பெண்ணை முழுமையாக ஆராய்ந்து, அவளை முழுவதுமாக இனம் காட்டியுள்ளார். மேலும் ஆண் பெண் இருவரின் சமூக உறவு பற்றிய கருத்துக்களைப் புலன் உணர்வால் உணரச் செய்தார்: வரலாறு, கலை, உளவியல் ஆய்வு, உடற்கூறு, புராணம், இலக்கியம், நடைமுறைத் தத்துவம் இவற்றைத் தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து, அதன் மூலம் ஆண்கள், தோன்று தொட்டே பெண்களுக்குச் சமவுரிமை கொடுக்கவில்லை என்பதை வெளியிட்டுள்ளார்; இந்நூல் 'வுமன்' (Woman) என்று ஒரு திருத்தியமைக்கப்பட்ட நூலாகப் பல முறை வெளியிடப்பட்டது. இந்நூல் மூலம், பின்னால் பலர் பெண்ணியவாதிகளாக உருவாயினர்.

மேரி இவான்ஸ் என்ற பெண்மணி, பெவாயரின் நூலை ஆராய்ந்துள்ளார். பெண்கள் ஒடுக்கப் படுவதன் அடிப்படைக் காரணங்கள், பெண்கள் பாலியலில் எவ்வாறு வேறுபடுகிறார்கள் என்ற ஆய்வு, பெண்களின் மறுவுற்பத்தித் திறன் பற்றிய ஆய்வு, பெண்ணியவாதிகளை முழுமையாகப் புரிந்து கொண்ட திறன் ஆகிய இந்தக் கூறுகளை இந்நூல் விளக்குவதாக அவர் கூறுகிறார்.

இந்த நூலின் பெருத்த வெற்றிக்குக் காரணம் என்னவென்றால், மனித இயற்கையில் இயல்பாக இருக்கும் நடைமுறைத் தன்மையையும், ஆண் பெண் இருவரையும் வேறுபடுத்திப் பார்க்காத/சமமாக நடத்தும் தன்மையையும், பெண்கள் ஆண்களை வெறுக்கக் கூடாது என்ற ஒரு சமவுரிமைக் கருத்தையும் விளக்குவதாகும். அதன் காரணமாக, புதிய பெண்ணியவாதிகள் இந்நூலால் பெரிதும் கவரப்பட்டனர். அத்துடன், சுமார் 30 ஆண்டுகளாக இன்றைய பெண்ணியக் கத்தில் இந்நூல் முன்னிலை வகிக்கிறது.

## பாலியல் அரசியல் (Sexual Politics)

கேட் மில்லட்டின் பி.எச்டி ஆய்வு அறிக்கையே 'பாலியல் அரசியல்' என்ற நூலாகும். இதைக் கொலம்பியாப் பல்கலைக் கழகத்தில் சமர்ப்பித்தார். 1970 இல் நூலாக வெளியான போது அதிகம் விற்பனையாகிச் சாதனை படைத்தது. இந்

நூலை முதல் தரம் என்றும் புதிய யுகத்தின் விவாதத்திற்குரிய சிறந்த ஆய்வு என்றும் விமர்சித்துள்ளனர். இந்நூல்/ஆய்வு, ஆண் பெண் இருபாலார்க்குமிடையே உள்ள அதிகார உறவு முறையை (Power Relationship) எடுத்துரைக்கிறது.

அதாவது, ஆண் மேலாதிக்கம் உடையவனாகவும், பெண் பணிந்து போகின்றவளாகவும் இருக்கும் உறவு முறையை வாதப் பிரதிவாதங்களோடு எடுத்துரைக்கின்றது. மேலும், நடைமுறையில் இருந்துவரும் சமுதாய அமைப்பு வலுக்கட்டாயமான அடக்குமுறையினதாகும்; குடும்பம் என்பது எல்லாவிதமான அதிகார உறவு முறைக்கும் ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளது; அதில், ஒரு சாரார் மற்றொரு சாராரை மேலாதிக்கம் செய்வதைப் பிறப்புரிமையாகக் கொண்டுள்ளனர் என்று கேட் மில்லட் விளக்குகிறார். இவரது கண்ணோட்டத்தின்படி, பாலியல் அதிகாரப் பங்கு நிலையானது, பெண்களின் தனித்த தொரு பண்பு நிலையைச் சீர்குலைப்பதாகவும், ஆண்களிடம் போர்க்குணத்தையும், வன்முறையையும் மேலோங்கச் செய்வதாகவும் அமைந்துள்ளது.

மேலும், இந்நூல், அதிகார உறவு முறைக்குக் காரணமான தந்தைவழிச் சமூக அமைப்பு பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளது. சமூகவியல், உளவியல், பொருளாதாரம், வரலாறு, தத்துவம், இலக்கியம், மதம், புராணம், இவற்றில் தந்தைவழிச் சமூகத்தின் தொன்றுதொட்டு வந்த நடவடிக்கைகளை ஆராய்ந்து, அது எப்படி ஒரு அரசியல் அமைப்பாக உருவானது என்று கேட் மில்லட் விளக்கியுள்ளார்.

இந்நூலில் கேட் மில்லட், இன அடிப்படையிலான, பண்பாட்டு அடிப்படையிலான இலக்கியத் திறனாய்வு முறையை மேற்கொண்டு, நவீன ஆண் எழுத்தாளர்களான டி.எச். லாரன்ஸ் (D.H. Lawrance), ஹென்றி மில்லர் (Henry Miller), நார்மன் மெய்லர் (Norman Mailer), ஜீன் ஜெனட் (Jean Jenat) என்பவர்கள் எழுதிய பால்சார்பு கருத்துக்களை, பாலியல் அடிப்படையிலான மேலாதிக்கப் போக்கை விரிவாகப் பகுத்தாய்ந்து, அதைத் தகர்த்தெறிந்துள்ளார்.

'பாலியல் அரசியல்' வெளிவந்து 20 ஆண்டுகளாகியும், இது ஒரு பெண்ணியவாதியின் விளக்கக் கட்டுரையாக மட்டுமல்லாது ஒரு தலைசிறந்த காரணத்தை எடுத்துரைக்கும் இலக்கிய மற்றும் பண்பாட்டு ஆய்வாகவும் உணரப்பட்டு வருகிறது.

## முடிவுரை

பெண்ணியக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் வெளிப் படுத்துகின்ற மேற்கூறிய நூல்கள், பெண்களின் உரிமைக் காகவும் ஒடுக்குமுறைக்கு எதிராகவும் குர ல் கொடுத்துள்ளன. அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸில் சமூக மாற்றத் திற்கு வித்திட்ட இந்நூல்கள், பெண்களிடையே புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன. பெண்ணினத்தின் அடிப் படைச் சித்தாந்தத்தை எடுத்துரைக்கின்ற இவற்றைத் தவிர, மேலும் சில நூல்களும் படித்தறியத்தக்கன. குறிப்பாக, சுலாமித் ஃபயர்ஸ்டோனின், 'பாலியல் பற்றிய வாதம்' (The Dialectic of Sex), ஆனி கொய்ட் என்பவரின் 'புணர்ச்சிப் பரவச புனைகதை' (The myth of the vaginal orgasm), இவர்கள் இருவரும் இணைந்துப் பதிப்பித்த, முதல் ஆண்டின் குறிப்புக்கள் (Notes from the first year), இரண்டாம் ஆண்டின் குறிப்புக்கள் (Notes from the second year), மூன்றாம் ஆண்டின் குறிப்புக்கள் (Notes from the third year), ஆகிய நூல்களும் புதிய பெண்ணியத்தைப் புரிந்து கொள்ள உதவுவன.

# மகளிரியல் கல்வி

'மகளிரியல் கல்வி, (Women's Studies) என்பது அமெரிக்காவில் தோற்றம் பெற்று, இன்று உலகெங்கிலும் பரவி வரும் கல்வித் துறையாகும். இஃது, உலகளவில், பெண்களால், பெண்களை மையப்படுத்தி அனைத்துத் துறைகளையும் ஆராய்கின்றது. பண்டைய கல்விக் கோட்பாடுகளை மீறிய இக்கல்வி, ஆண்களை மையமாகக் கொண்டு இயங்கி வரும் அனைத்துத் துறைகளுக்கும் சவாலாக முன்னேற்றம் அடைந்துள்ளது.

உலகெங்கிலும், கல்வி மற்றும் அதனைச் சார்ந்த அனைத்துத் துறைகளும், ஆண் பார்வையினதாக, ஆணை மையமிட்டதாக அமைந்திருந்தன. அமெரிக்காவில், அறுபதுகளின் தொடக்கத்தில், பெண்ணிய இயக்கங்களின் எழுச்சியால், மகளிரிடையே தங்களைப் பற்றியும் தங்களினம் பற்றியும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இதன் விளைவாக, பெண் கல்வியாளர் மற்றும் மாணவியர் மத்தியில் ஆண் மையமிட்ட அல்லது ஆணின் பார்வையில் மட்டுமே பல்கலைக்கழகப் பாடத் திட்டங்கள் அமைந்திருப்பது குறித்து விவாதங்கள் கால் கொண்டன.

வரலாற்றில் பெண்களின் பங்கு மறைக்கப்பட்டிருந்தது. சமூகவியலில் பெண்கள் இரண்டாம்தரக் குடிகளாக, ஆண் சார்புடையவர்களாக, தனித்து இயங்க இயலாதவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இலக்கியங்களில் பெண் வர்ணனைக் குரியவளாக, அழகியாக, அனுபவிக்க உகந்தவளாக, வாழ்க்கைத் துணையாக என்று ஏறக்குறைய ஒரே கோணத்திலேயே படைக்கப்பட்டிருக்கிறாள். உளவியல் பெண்களைப் பலவீனமானவர்களாக, திடமற்றவர்களாகக் காட்டியது. இப்படி, பெண்கள் ஒட்டு மொத்தமாக அனைத்துத் துறைகளிலும் புறக்கணிப்பட்டதற்கான காரண காரியங்களை அவர்கள் ஆராய்ந்த போது, 'மகளிரியல் கல்வி' என்ற ஒன்றை உருவாக்க வேண்டிய

தேவையை உணர்ந்தனர். 1934 இல் மேரி ரிட்டர் பேர்டு (Mary Ritter Beard) என்ற அம்மையார், 'மகளிரியல்' என்ற ஒரு புதிய கருத்தாக்கத்தை உருவாக்கி இருந்தார்.* அஃது மேற் கூறிய கல்வியாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக முன் மாதிரியாக அமைந்தது.

பெண்ணியக் கல்வியாளர்கள், மகளிருடைய சாதனைகளும், அனுபவங்களும் கல்வி நூல்களில் இடம்பெற வேண்டும் என்றும், பழங்கால மகளிர் வரலாறு, பண்பாடு போன்றவற்றை வெளிப் படுத்தும் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுக்கு வேண்டுகோள் விடுத்த னர். அதை உடனடியாக ஏற்றுக் கொண்ட பல்கலைக் கழகங் களும் அதற்குச் சாதகமாக செயல்படலாயின. மகளிரும் வர லாறும், மகளிரும் இலக்கியமும், மகளிரும் சமூகவியலும், மகளிரும் மானுடவியலும், என்பதை ஆராய்ந்து, மகளிர் பற்றிய செய்திகளை அவ்வவ் துறை பாடத்திட்டத்தில் இணைத்தனர். குறுகிய சில ஆண்டுகளில் 'மகளிரியலைப்' பற்றிய தனித்த துறையை உருவாக்கி, அதை இளங்கலை மற்றும் முதுகலை அளவில் அறிமுகப்படுத்தின. 1969இல் இத் துறையில் பதினாறு

---

* மேரி ரிட்டர் பேர்டு, அரசியல் மற்றும் பொருளா தாரத்தை அடிப்படையாகக் கொண்ட, மகளிரியல் கல்விப் பாடத்திட்டத்தை உருவாக்கினார். இது, பின்வரும் நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது.

1. அமெரிக்கப் பெண்களின் மதிப்பு பற்றிய உண்மை நிலையைக் கண்டறிதல்.
2. பெண்ணியக் கொள்கைகளை அறிதல்
3. தேசிய அளவில் அக்கொள்கைகள் ஏற்படுத்திய பாதிப்பை அறிதல்.
4. பெண்களுக்கான மரபு வழிப்பட்ட கருத்தாக்கங்களின் தாக்கங்களைக் கண்டறிதல்.

56 பக்கங்களைக் கொண்ட இப்பாடத் திட்டத்தின் தலைப்பு 'அரசியல் பொருளாதார மாற்றமும் அதனடிப் படையிலான பெண்களின் பாதிப்பும்' (A Changing Political Economy as it affects Women) என்பதாகும். அமெரிக்கப் பல்கலைக் கழகப் பெண்களின் கூட்ட மைப்புச் சார்பாக (American Association of University Women) அதை வெளியிட்டார். அப்பாடத் திட்டம் நடைமுறைச் செயற்பாட்டுக்குக் கொண்டு வரப்படா விட்டாலும் 'மகளிரியல் கல்வி' என்ற கருத்தாக்கத் திற்கு வித்திட்டது.

வேறுபட்ட பயிற்சி முறைகள் (Courses) தொடங்கப்பட்டு இன்று 30,000க்கும் மேற்பட்ட வெவ்வேறு பயிற்சி முறைகள் அளிக்கப் பட்டு வருகின்றன. 1977இல் தேசிய மகளிரியல் கல்விக் கழகம் (National Women's Studies Association) தொடங்கப்பட்டது. இது, மகளிரியல் கல்வியை முன்னேற்றுவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

அமெரிக்காவில் மகளிரியல் கல்வி முன்னேறியது போல, இங்கிலாந்தில் உடனடியாகத் தீவிரமடையவில்லை. மகளிரியல் கல்வியும், அதன் வழி வந்த ஆராய்ச்சிகளும், மரபு வழி வந்த இங்கிலாந்துப் பல்கலைக் கழகத்தினரைக் கலங்க வைத்தன. இக் கல்வி முறை, இங்கிலாந்துப் பெண்களிடையேயும் ஒரு மருட்சியை ஏற்படுத்தியது. இருந்தபோதும், அந்நாட்டுப் பெண் கல்வியாளர்களின் இடைவிடாத முயற்சியால் முதன் முதலில் 1980இல் கென்ட் பல்கலைக்கழகம் (University of Kent) மகளிரியல் கல்வியை, முதுகலை நிலையில் அறிமுகப் படுத்தியது. அதன் பின், 1982இல் ப்ராட்போர்டிலும் (Bradford), 1983இல் தொழில் பயிற்சிப் பள்ளியிலும் (Sheffield Polytechnic) மகளிரியல் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், இன்று வரை இளங்கலை நிலையில் மகளிரியல் கல்வி கற்பிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1970 முதல் 80 வரை யிலான காலக்கட்டத்தில், இங்கிலாந்தில் முதியோர் கல்வித் துறையின் பாடத் திட்டத்தில் மகளிரியல் அதிகம் இடம் பெற் றது. மற்ற மேற்கத்திய நாடுகளில் எண்பதுகளில் தான் மகளிரியல் கல்வி தொடங்கப்பட்டு, மெது மெதுவாகப் பரவத் தொடங்கியது.

மகளிரியல் கல்வி என்பது பிற கல்வித் துறைகளைப் போன் றதே. ஆனால், பெண்ணை மையமிட்டதாக அமைந்துள்ளது. இது, ஆண்களை வெறுத்து ஒதுக்கவில்லை. மாறாக, பெண்கள் மீது அக்கறையும், ஆர்வமும் கொண்டுள்ளது. மகளிரியல், ஆண்மையவாதத்தில் (Androcentric View Point) அமைந்த அனைத்தையும், பெண் மைய வாதப்போக்கில் மறுபரிசீல னைக்கு உட்படுத்துகிறது. இதைக் கருத்தில் கொண்டே, டேல் ஸ்பென்டர் (Dale Spender) என்ற பெண்மணி, இக் கல்வி முறையை, 'ஆண்மையக் கல்வியை உருமாற்றுதல்' (Men's Studies Modified) என்று விளக்கியுள்ளார். இவரே, இக் கல்வியைப் 'புரட்சிகரமான போக்கினது' என்றும் விமர்சித்துள்ளார்.

1970 இலிருந்து 80 வரையிலான காலக்கட்டத்தில் மகளி ரியல் கல்வியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது.

1983இல் சார்லட் பன்சும் (Charlottee Bunch) சான்ரோ போலக்கும் (Sandro Pollack) மகளிரியல் கல்வியை ஒன்றுக் கொன்று தொடர்புடைய மூன்று பிரிவுகளாக அடையாளம் காட்டியுள்ளனர்.

1. நடைமுறையில் உள்ள பண்பாட்டில், பெண்கள் எப்படி வாழ வேண்டும் என்ற வழிமுறையைக் கற்றுக் கொடுத்தல்.

2. பெண்ணியக் கொள்கைகளை எடுத்துரைப்பதன் மூலம் பெண்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துதல்.

3. பெண்களின் முன்னேற்றத்திற்காக அவர்களின் சொந்தக் கருத்து, கலை, கொள்கை, ஆராய்ச்சி போன்றவற்றை ஊக்குவித்தல்.

அதன்பின் வந்த ஆண்டுகளில், அமெரிக்காவில் மகளிரியல் கல்வியில் குறிப்பிடத்தக்க இரு முக்கிய போக்குகள் எழுச்சி பெற்றுள்ளன. அவை,

1. கறுப்பர் இன மகளிர் பற்றிய ஆய்வு

2. மகளிர் ஓரினச் சேர்க்கையாளர் பற்றிய ஆய்வு

என்பனவாகும்.

கேதரின் ஸ்டிம்ப்சன் (Catherine Stimpson) என்பவர் 'மகளிரியல் கல்வி'யின் நோக்கங்களைக் கீழ்க்கண்டவாறு மிகத் தெளிவாக வரையறுத்துள்ளார்.

1. நடைமுறையைச் சீர்திருத்துதல்

2. பெண்கள் பற்றிச் சமுதாயத்தில் நிலவி வரும் தவறான கருத்துக்களையும் வாதங்களையும் நீக்குதல்.

3. பெண்களைப் பற்றிப் புதிய கருத்துக்களையும் கொள்கைகளையும் வடிவமைத்தல்.

மகளிரியல் கல்வியின் பாடத்திட்டம் 'சமத்துவம் என்ற தத்துவத்தை' (Equal rights philosophy) அடிப்படையாகக் கொண்டதாகும். இதனடிப்படையில், அப்பாடத் திட்டத்தில் தனிப்பட்ட பெண்களின் சரிதம் மற்றும் அனுபவம், பெண் சமூகத்தின் பழைய வரலாறு, காலங்காலமாக இருந்துவரும் பாலியல் அடிப்படையிலான வேறுபாடுகள் முதலானவை இனம் காட்டப்படுகின்றன. இக்கல்வியின் பாடத்திட்டம் பெண்கள்

அனுபவத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டவையாகும். மனித அனுபவத்தைப் புரிய வைப்பதிலும், விளக்குவதிலும் இப்புதிய துறை முனைப்புடையதாக விளங்குகிறது. அதற்கேற்ப, செயல்முறைக் (Action oriented) கல்வியை அடிப்படையாக இணைத்துக் கொண்டுள்ளது.

'மகளிரியல்' துறையில் ஆய்வுப் போக்கும் வளர்ச்சி பெற்றுள்ளது. பெரும்பான்மையான ஆய்வுகள் இருதுறை (Inter disciplinary) மற்றும் பல்துறை (Multi disciplinary) சார்ந்து நிகழ்த்தப்படுகின்றன. மகளிரியல் ஆய்வுக்குப் பெண்களே தகவலாளிகள். அவர்களின் தனிப்பட்ட மற்றும் கூட்டுஅனுபவம் இவ்வாய்வுகளின் தரவுகளாக அமைகின்றன. மகளிரிடையே தரவுகளைத் திரட்டுவது என்பது மிக அரிதான செயலாகும். இதற்கு மிகுந்த முயற்சியும் உழைப்பும் தேவை. இதைப் பற்றி, அமெரிக்காவைச் சேர்ந்த மகளிரியில் கல்வியின் முன்னோடியான ப்ளாரன்ஸ் ஹவ் (Florance Howe) என்ற பெண்ணியவாதி கீழ்க்கண்டவாறு விமர்சித்துள்ளார்.

> 'பெண்களின் பிரச்சினைகளைப் பற்றிச் சிந்திப்பவர்களும், அதுபற்றி ஆய்வு செய்பவர்களும், எந்த அறிவுத் துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், பெண்கள்பற்றிய செய்திகள், கருத்துக்கள் அவர்களுக்கே உரிய தனித்த பிரச்சினைகள் பற்றிய தகவல்களைப் பெறுவது என்பது ஓர் ஆராய்ச்சிப் பட்டத்தைப் பெறுவதற்குச் சமமாகும்'.

பெரும் முயற்சியுடன் செய்யப் படும் இவ்வாய்வுகள் பெண்களின் அன்றாட வாழ்க்கையை மேம்படுத்தவும் மாற்றியமைக்கவும் துணை நிற்கின்றன.

மகளிரியல் கல்வியும், அதனடிப்படையிலான ஆய்வும் நல்ல பயன்பாடுகளைத் தந்து வருகின்றன. குறிப்பாக மேலை நாடுகளில் இம்மாற்றம் எளிதில் அடையாளம் காணக்கூடிய அளவில் நிகழ்ந்துள்ளது. மரபுவழிக் கல்வியினால் நிலை நிறுத்தப்பட்ட மக்களின் போக்கில், மகளிரியல் கல்வி ஒரு மாற்றத்தை உண்டாக்கியுள்ளது. பெண்களைப் பற்றி இருந்து வந்த சார்புக் கண்ணோட்டத்தை நீக்கி, மனித நலக் கோட்பாட்டை முன்னேற வைத்துள்ளது. எல்லாத் தரப்பு பெண்களிடத்தும் இருந்து வந்த மருட்சியைப் போக்கி, அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. நடைமுறையில் இருந்துவரும் ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடுகள் எந்த அளவு சரியானது என்று சிந்திக்கத் தூண்டியுள்ளது.

பெண்கள் அடிமைப்படுவதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சியில் மெதுமெதுவான வெற்றியை எட்டி வருகிறது.

மேலும், மகளிரியல் கல்வி, 'ஆண் மையம்' என்பதை அனைத்து நிலையிலும், துறையிலும் மாற்றி, 'மனித மையம்' என்ற கருத்தாக்கத்தை மெள்ள மெள்ள எழுச்சி பெற வைத்து வருகிறது. அது போன்றே 'பால் வேறுபாடு' (Sex & Gender Discrimination) என்பதை அனைத்து நிலையிலும் ஒழித்து வருகிறது. நடுத்தர வகுப்புப் பெண்கள், அடிமட்டத்துப் பெண்கள், கிராமப்புற பெண்கள், தொழில் புரியும் பெண்கள், படிப்பறிவில்லாப் பெண்கள், சமுதாயக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பெண்கள், அநாதரவான பெண்கள் என்ற இவர்கள் அனைவரையும் ஒரு பொருட்டாக மதிக்கும் பண்பாட்டு முன்னேற்றமும், அவர்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் செயல்பாடுகளும் மகளிரியல் கல்வி காரணமாக விரைவுபட்டுள்ளது. அரசியல், பொருளாதாரம், மதம், இவற்றின் அடிப்படையில் பெண்களுக்கு,எதிராக நிகழ்த்தப்படும் அநீதிகளும், அடக்கு முறைகளும் கண்டறியப்பட்டு, அவை வேரறுக்கப்பட்டு வருகின்றன.

மேலும், இக்கல்வியின் பயனாகப் பெண்களைப் பற்றி, பெருமளவு செய்திகள்/கருத்துக்கள் கிடைத்து வருகின்றன. கோட்பாடுகள் உருவாகின; உருவாக்கப்பட்டு வருகின்றன. கடந்த 20 வருடங்களில் மகளிர் பற்றிய தொகுப்புக்கள் தன் வரலாறுகள், கட்டுரைகள், நூல்கள், அவற்றின் மறு பதிப்புக்கள் புதிய பத்திரிகைகள் எனப் பல்கிப் பெருகியுள்ளன. இவை அனைத்தும் சமூகத்தில் பெண்களின் இடத்தை நிலைப்படுத்தியுள்ளன.

பெண்ணிய இயக்கத்தைப் பொறுத்தவரை, மகளிரியல் கல்வி ஒரு பேராயுதமாகவும், அதே சமயத்தில் அவ்வியக்கத்தின் மேம்பாட்டுக்கு உதவும் தூண்டுகோலாகவும் அமைந்துள்ளது.

ஆசியப் பகுதியில், 'மகளிரியல் கல்வி,' எண்பதுகளில் எழுச்சி பெறத் தொடங்கியது. மேற்கத்திய நாடுகளுக்கு இணையாக இப்பகுதியில் இக்கல்வி மிக விரைவாகப் பரவவில்லை என்றாலும், மெதுமெதுவாக வளர்ச்சி பெற்று வருகிறது. இப்பகுதியில் பெண்கள் பற்றிய ஆய்வு புதிய நோக்கும் போக்கும் கொண்டதாக விளங்கினாலும், உயர்

கல்வித் திட்டத்தில் 'மகளிரியல் கல்வி' கற்பிக்கப்படுவது இன்னும் குழந்தைப் பருவத்தைத் தாண்டவில்லை. கொரியா வைத் தவிர்த்து, பிற ஆசிய நாடுகளில் மகளிரியல் கல்வியில் பட்டப்படிப்பு எதுவும் இல்லை. ஆனால், வரலாறு, சட்டம், சமூகவியல், உளவியல் போன்ற துறைகளில் பெண்கள் தொடர்பான தலைப்புகள் இடம் பெற்று வருகின்றன. மிக அண்மைக் காலத்தில் மகளிரியல் கல்வியை எல்லாக் கல்விக் கூடங்களிலும் கற்பிக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன. ஆசியப் பகுதியில் செய்யப்படும் ஆய்வு கள், அப்பகுதிக்கே உரிய பெண்களின் பிரச்சினைகளை மைய மிட்டதாக அமைந்துள்ளன. சான்றாக, சாதிப் பிரச்சினையும் இந்திய மகளிரும், சுற்றுலா பயணியரைக் கவரும் தாய்லாந்து மகளிரின் பாலியல் பிரச்சினைகள் போன்றவைகளைக் கூறலாம்.

இந்தியாவில் மகளிரியல் கல்வி அண்மைக் காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக வளர்ச்சி பெற்று வருகிறது. 1981 இல் பம்பாயில் மகளிரியல் கல்வி பற்றிய முதல் தேசிய மாநாடு (First National Conference on Women's Studies–NCWS) நடந்தது. அம்மாநாட்டுக் குழுவினர் ஒவ்வொரு துறையிலும் மகளிரியல் கல்வியை அறிமுகப்படுத்தி, அதனடிப் படையிலான பாடத்திட்டத்தை உருவாக்கி, பல பல்கலைக் கழகங்களுக்கும் கல்வி அமைப்புகளுக்கும் அனுப்பித் தந்தனர். தொடக்கத்தில் இம்முயற்சிக்கு ஐம்பது விழுக்காடே ஆதரவு கிடைத்தது. 1984 இல் SNDT-இல் (Shreemathi Nathibai Damodar Thackarsay Women's University, Bombay) மகளிரியல் ஆய்வு மையம் (Research Centre on Women's Studies) தொடங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, புது டெல்லியில் மகளிர் முன்னேற்ற ஆய்வு மையமும் உருவானது.

1981 இல் பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) ஊக்குவிப்பால், மகளிரியல் கல்வி பற்றிய பயிற்சிப் பட்டறை களும், கருத்தரங்குகளும், கோடைகால வகுப்புகளும் நடத்தப் பட்டன; மேலும், பல்கலைக்கழக அளவில் பெண்கள் பற்றிய பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்த பொருளாதார நிலையில் உதவியது; பல்கலைக்கழகங்களில் மகளிர் பற்றிய ஆய்வு மையங்களை உருவாக்கியும் உள்ளது.

1985 ஏப்ரலில் புது டெல்லியில் அரசியல் அறிவியல் துறையைச் சார்ந்த மகளிரியல் ஆய்வுக் குழுவானது, 'இந்திய பல்கலைக்கழகங்களில் மகளிரியல் கல்வி பற்றிய தொலை

நோக்கும், அதன் அமைப்பும், என்ற பொருளில் கருத்தரங்கு ஒன்று நடத்தியது. அதில், பல்கலைக்கழக அளவில் மகளிரியல் பாடத்திட்டம் உருவாக்குவது குறித்துப் பேசப்பட்டது. மகளிரியல் கல்விக்கான நோக்கங்களையும் அம் மாநாடு வரையறுத்தது.

மகளிரியல் கல்வியைப் பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் இணைக்கச் சிறப்பாக இரண்டு காரணங்கள் கூறப்பட்டன.

1. கல்வித் திட்டத்தில் இடம் பெறவேண்டும்

2. சமூகத்திலும் அது பரவ வேண்டும்

என்பவையே அவை.

மகளிரியல் கல்விக்கான நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டன.

1. பெண்களின் பங்கு மற்றும் உரிமை குறித்து சமுதாயத்தில் நிலவுகின்ற மனப்போக்குகளை மாற்றுதல்.

2. ஒரு நாட்டின் பொருளாதார/அரசியல்/சமூக/பண்பாடு சார்ந்த முன்னேற்றத்திற்கான மூல வளங்களாக விளங்கும் பெண்களுடைய சக்தியினை ஆக்கமுறையில் பயன்படுத்தல்.

3. சமூகத்தில் நிலவுகின்ற மரபு சார்ந்த மதிப்பீடுகளைத் தகர்த்தெறிந்து, அதனடிப்படையில் ஆண், பெண் இருபாலாரும் விழிப்புணர்ச்சியைப் பெறுதல்.

4. பெண்களைப் பிள்ளை பெறும் இயந்திரமாகக் கருதும் பிற்போக்குச் சக்திகளை ஒடுக்குதல்.

5. எல்லாத் துறைகளிலும், பெண்களுடைய முன்னேற்றத்திற்குக் கொள்கைப் பிடிப்போடும் நடப்பியல் முறையிலும் பாடுபடக்கூடிய உணர்வாளர்களை உருவாக்குதல்.

6. சமூகச் சமத்துவம் மற்றும் பாலியல் சமன்பாடு, மதச் சார்பின்மை, தேசியம் இவற்றை வளர்க்கக்கூடிய பால்பேதமற்ற கல்வித் திட்டத்தை வகுத்தல்.

7. பெண்களை வேறுபடுத்திப் பார்க்கின்ற பாசிபடிந்த கோட்பாடுகளையும் ஆய்வுப்போக்கினையும் மாற்றியமைத்து புதிய சித்தாந்தத்தை உருவாக்குதல்.

8. பல்வேறு துறைகளுடன் மகளிரியலை இணைத்து, அதற்கேற்றாற்போல் கற்பிக்கும் முறை, பாடத்திட்டம், ஆய்வு முறையியல் விரிவாக்கச் செயற்பாடுகள் போன்றவற்றை உருவாக்குதல்.

9. உயர்கல்வி அமைப்புகளும், களத்தில் இறங்கிப் பெண்களின் நலத்திற்குப் பணிபுரியும் தன்னார்வக் குழுக்களும் இணைந்து செயலாற்றி, பெண்களின் பிரச்சினைகளுக்கான ஆணிவேரைக் கண்டறிய முயலுதல்.

10. நாட்டுப்புற இலக்கியங்களை உள்ளடக்கிய இந்திய இலக்கியங்களின் மொழிபெயர்ப்பு மற்றும் ஆராய்ச்சி இவற்றின் மூலமாக, பண்டைய காலத்திலிருந்து இன்று வரையில் பெண்களைப் பற்றி நடைபெறுகின்ற தர்க்கத்தினைத் தொகுத்து, பெண்ணினப் பிரச்சினை குறித்து உலகு தழுவிய விவாதத்தினை மேற்கொள்ளுதல்.

1984 இல் மகளிரியலைச் செயல்படுத்தும் நோக்கில் தமிழ் நாட்டில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் தோற்று விக்கப்பட்டது. தற்போது இப்பல்கலைக்கழகத்தில், மகளிரியல் கல்வி முதுகலை நிலையில், நேரடி மற்றும் அஞ்சல்வழிக் கல்வியின் மூலம் கற்பிக்கப்பட்டு வருகிறது. இப்பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் அனைத்து ஆய்வுகளும் மகளிர் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டவைகளாகும். திருப்பதியில் 'பத்மாவதி மகிள வித்யாலயம்' என்ற கல்விக்கூடம் மகளிரியலை வளர்த்து வருகிறது. சமீபத்தில் காரைக்குடிப் பல்கலைக்கழகத்தில் 'மகளிர் ஆய்வு மையம்' உருவாக்கப்பட்டு, மகளிர் பிரச்சினைகளை ஆய்வதில் ஆர்வம் காட்டி வருகிறது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், மகளிரியலைக் கற்பிப்ப தற்குரிய நூல்கள் அதிகம் இல்லை என்பது மிகப் பெரிய குறையாகும். யுனெஸ்கோ நிறுவனத்தின் சார்பாக நடந்த மகளிரியல் வல்லுனர் கூட்டத்திலும் இக்குறை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. மகளிரியல் கல்வி மிக வேகமாகப் பரவாததற்குக் கற்பிக்கும் நூல்கள் இல்லாததும் ஒரு காரணமாகச் சுட்டப்படு கிறது.

## முடிவுரை

அமெரிக்காவில் தோற்றம் பெற்று, மிகச் சிறப்பாக நிலை பெற்றுள்ள மகளிரியல் கல்விக்கு இன்று இங்கிலாந்து முன்னோடி

யாகத் திகழ்கிறது. மேற்கத்திய நாடுகளில் மகளிரியல் கல்வியின் அபரிதமான வளர்ச்சிக்குக் காரணம், அவர்களிடையே இருக்கும் அதிகப்படியான நூல்களேயாகும். கடந்த 25 ஆண்டு களில் தன்வரலாறுகள் வாழ்க்கைவரலாறுகள், தொகுப்பு நூல்கள், கருத்துப்பிழிவு நூல்கள், செய்தி மடல்கள் எனப் பல்கிப் பெருகியுள்ளன. இவை அனைத்தும் புதிய கல்வித் துறையில் ஆய்வுப் பட்டம் பெற உறுதுணையாக அமைகின்றன.

கீழை நாடுகள், மகளிரியல் கல்வியில் போதிய ஆர்வம் காட்டவில்லை என்பது வருந்துதற்குரிய செய்தியாகும். இந்தியாவைப் பொறுத்தவரை, மகளிரியல் கல்வி வளர வேண்டிய, வளர்விக்க வேண்டிய இளம் குருத்தாக அமைந் துள்ளது.

# பெண்ணிய இலக்கியத் திறனாய்வு

பெண் விடுதலை இயக்கத்தின் செயற்பாடுகளுள் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு (Feminist Literary Criticism) என்பதுவும் ஒன்று. அமெரிக்கா, இங்கிலாந்து, மற்றும் பிரான்ஸில் அறுபது களின் இறுதியில் இத்திறனாய்வு முறை தோற்றம் பெற்றது. 'இலக்கியத்தில் பெண்ணை மையமாக வைத்து தொலை நோக்கு ஆய்வு மேற்கொள்வது' என்பதே பெண்ணியத் திறனாய்வின் போக்கு எனச் சுருக்கமாக மேக்கி ஹம் (Maggie Hamm) என்பவர் விளக்கியுள்ளார். பெண்ணியத் திறனாய்வின் மூலம், இயக்கச் செயற்பாடுகளை முன்னேற்றுவதைப் பெண்ணிய வாதிகள் நோக்கமாகக் கொண்டிருந்தனர். சான்றாக, இலக்கி யத்தில் பாலியல் வன்முறைக்கு ஆட்பட்ட ஒரு பெண்ணின் நிலையை ஆராய்வது என்பது, தந்தை வழிச் சமூகத்தில் ஆண்களிடையே இருந்து வரும் வன்முறை, மனப்போக்கு, அவர்கள் பெண்களின் மேல் கொண்டிருந்த உரிமை இவற்றைத் தகர்த்தெறிவதற்கே ஆகும்.

பெண்ணிய இலக்கியத் திறனாய்வு என்பது, அரசியலிலும், தந்தை வழிச் சமூகத்தை எதிர்ப்பதிலும், பாலியல் கொள்கை களிலும் தனிப் பங்கை வகிக்கிறது. முதலாளித்துவ, தன்ன லத்துவ-அதிகாரப் படிமுறை போக்கை எதிர்க்கும் புரட்சிகர மான அடிப்படைக் கருத்தைக் கொண்டது.

எழுபதுகளில் தீவிரப் பெண்ணியவாதிகள் தங்களுக்கென்றே, தனி அமைப்புகளை உருவாக்குவதில் மிகுந்த ஆர்வம் காட்டினர். புத்தகக் கடைகள், நூலகங்கள், நாடகக் குழுக்கள், பத்திரிகை கள், கலையரங்கங்கள், சமூக நலச் சங்கங்கள், திரைப்படங்கள் என்பன அவை. இவை போலப் பெண்ணியத் திறனாய்வுப் போக்கையும் இவர்கள் உருவாக்கி, தீவிரப் பெண்ணிய இயக்கத்தின் ஒரு பகுதியாக இணைத்துக் கொண்டனர்.

பெண்ணியத் திறனாய்வு என்பது மரபு வழிவந்த இலக்கியங்களில் எடுத்தாளப்பட்டுள்ள பெண் பற்றிய போலியான கருத்தாக்கங்களை உடைத்தெறிவதையும், இலக்கிய வடிவத்திலான பெண் அடக்கு முறையை (Women's oppression in Literary form) வெளிப்படுத்துவதையும், பலகாலமாக ஒதுக்கப்பட்டு வந்த பெண்களுக்கு புதிய இலக்கிய வரலாற்றில் இடம் பெற்றுத் தருவதையும் அடிப்படை நோக்கங்களாகக் கொண்டுள்ளது.

பெண்ணியத் திறனாய்வு என்பது,

1. வடிவத்திற்கு (Literary form) சிறப்புத் தருவதில்லை.
2. கருத்து மற்றும் பொருளுக்கே (Content) சிறப்புத் தருகிறது.
3. சமூகம் மற்றும் பண்பாட்டுப் பார்வையை அடிப்படையாகக் கொண்டது.

இம்மூன்றும், பெண்ணிய இலக்கியத் திறனாய்வுப் போக்கைத் தெளிவாக இனம் காட்டி நிற்கின்றன.

பெண்ணியத் திறனாய்வுக்கு முன்னோடியாகத் திகழும் சைமன்-டி-பெவாயர், பெட்டி ஃப்ரைடன், கேட் மில்லட் போன்றோர் அடிப்படையில் வினா ஒன்றை முதன்மையாக வைத்துத் தங்கள் ஆய்வை மேற்கொண்டுள்ளனர். பெவாயர், 'பெண் ஏன் ஆண்கள் படைப்புகளில் தவறான கண்ணோட்டத்தில் படைக்கப்பட்டிருக்கிறாள்?' என்ற வினாவையும், ஃப்ரைடன், 'மரபு வழியான பழக்க வழக்கங்களைப் பெண்கள் ஏன் ஏற்றுக் கொள்கிறார்கள்?' என்ற வினாவையும், மில்லட், 'பாலியல் அரசியலை இலக்கியங்கள் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன?' என்ற வினாவையும் முன்வைத்து தங்கள் ஆய்வுகளை மேற்கொண்டனர்.

பாலியல்/பாடவியல் அரசியல்: பெண்ணிய இலக்கியக் கோட்பாடு (Sexual/Textual Politics: Feminist Literary Theory) என்ற நூலை எழுதிய டோரில் மோய் (Toril Moi) அந்நூலில், பெண்ணிய இலக்கியத் திறனாய்வை இரண்டு முக்கிய வகையாக எடுத்துரைத்துள்ளார்.

1. ஆங்கிலோ-அமெரிக்கன் பெண்ணியத் திறனாய்வு (Anglo-American Feminist Criticism)

2. பிரெஞ்சு பெண்ணியத் திறனாய்வு (French Feminist Criticism)

ஆங்கிலோ-அமெரிக்கன் பெண்ணியத் திறனாய்வு என்பது அமெரிக்கா மற்றும் இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்ட திறனாய்வு முறையாகும். இத்திறனாய்வுக்கு முன்னோடியாக 'கேட் மில்லட்' கருதப்படுகிறார். இவர் எழுதிய 'பாலியல் அரசியல்' என்ற நூல் ஆங்கிலோ-அமெரிக்கன் திறனாய்வுக்கு அடிப்படையானது 'பாலியல் அரசியல்' நூலானது மூன்று பகுதிகளைக் கொண்டது.

1. பாலியல் அரசியல் (Sexual Politics)
2. வரலாற்றுப் பின்னணி (Historical background)
3. இலக்கிய வெளிப்பாடு (The Literary reflection)

'பாலியல் அரசியல்' என்ற முதல் பகுதியில் பாலினங்களுக்கிடையே காணப்படும் அதிகார உறவு முறை எடுத்துரைக்கப்படுகிறது. இரண்டாவது பகுதியான 'வரலாற்றுப் பின்னணியில் 19ஆம், 20ஆம் நூற்றாண்டின், பெண்ணியப் போராட்ட வரலாறு பேசப்படுகிறது. 'இலக்கிய வெளிப்பாடு' என்ற பகுதியில் டி எச். லாரன்ஸ் (D. H. Lawrence), ஹென்றி மில்லர் (Henry Miller), நார்மன் மெய்லர் (Narman Mailer), ஜீன் ஜெனட் (Jean Jenat) என்பவர்களது படைப்புகளில் காணப்படும் பாலியல் அதிகார அரசியல் இனம் காட்டப்பட்டுள்ளது. இலக்கியங்களைப் பெண்ணிய அணுகுமுறையில் ஆய்வதற்கு ஒரு முன்மாதிரியாக இம்மூன்றாம் பகுதி அமைந்துள்ளது.

இந்நூலில், கேட் மில்லட். தந்தைவழிச் சமூகம் பற்றிய வாதங்களை முற்பகுதியில் எடுத்துரைத்து, இறுதிப்பகுதியில் அதை இலக்கியங்களின் வழிச் சான்றுகள் பல காட்டி நிறுவியுள்ளது குறிப்பிடத்தக்க பெண்ணிய ஆய்வுப் போக்காக அமைந்துள்ளது.

மேரி எல்மான் (Mary Ellmann) என்பவர் 'பெண்களைப் பற்றிய சிந்தனை' (Thinking about Women) என்ற நூலை 1968இல் எழுதி வெளியிட்டார். இது கேட் மில்லட்டின் 'பாலியல் அரசியலுக்கு' முன்பு வெளியானது. இந்நூல், மற்றொரு வகையான திறனாய்வுப் போக்கை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்தியது. இஃது, பெண்களின் கருத்துருவம் பற்றிய ஆய்வு (Image of Women Criticism) என்ற பெயரில்

சுட்டப்படுகிறது. இந்நூலில், எல்மான், ஆண் படைப்பாளிகளின் படைப்புக்களில் காணப்படும் பெண் பாத்திரங்களைப் பற்றிய ஆய்வை மேற்கொண்டுள்ளார்.

ஆண்களின் படைப்புக்களில் பெண்கள் கீழ்க்கண்ட பதினொரு மாதிரியான பாத்திரங்களிலேயே சித்திரிக்கப்பட்டுள்ளனர். அடங்கிப் போகும் குணமுடையவர்களாக (Passivity), உருவமற்றவர்களாக (Formlessness), மனவுலைச்சலுக்கு ஆட்பட்டவர்களாக (Instability), கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவர்களாக (Confinement), கடமையுணர்வுடையவர்களாக (Piety), பொருள் பற்றுடையவர்களாக (Materiality), ஆன்மீக நம்பிக்கையுடையவர்களாக (Spirituality), பகுத்தறிவுக்கு மாறானவர்களாக (irrationality), கவர்ச்சி மற்றும் சூன்யம் உடையவர்களாக (witch), அடங்காப் பிடாரிகளாக (Shrew), குறை கூறுபவர்களாக (Compliancy) என்று முரண்பட்ட குணமுடையவர்களாகப் படைக்கப்பட்டுள்ளனர். சமூகம், பண்பாடு, அரசியல் மற்றும் தனிப்பட்ட சூழல் என்று எல்லா நிலைகளிலும், ஆண் மேலாதிக்கம் வேரூன்றியிருப்பதால்; அவர்கள் படைத்த இலக்கியங்களும் அதற்கு விதிவிலக்காக அமையவில்லை என்கிறார் எல்மான்.

மேலும், அவர் தன் நூலின் 2ஆவது தலைப்பில் 'படைப்பவர் குறியீட்டுத் திறனாய்வு' (Phallic Criticism) என்பது பற்றிப் பேசியுள்ளார். இது, ஒரு படைப்பை ஆராயும்போது அல்லது மதிப்பிடும்போது. அதைப் படைத்தவர் ஆணா, பெண்ணா என்பதற்குச் சிறப்பளித்து அதனடிப்படையில் ஆராய்வதாகும். குறிப்பாக, இதன் மூலம், 'ஆண் மைய திறனாய்வு' (Male Centered Criticism) என்பதை விளக்கியுள்ளார்.

எல்மானின், இந்நூல் வெளிவந்த பின், இது அவரின் தலைசிறந்த நூலாக மதிப்பிடப்பட்டது. இந்நூல் முழுவதும் பரவிக் கிடந்த 'அங்கதப் போக்கும்' அனைவராலும் பாராட்டப்பட்டது. இவருக்குப் பின், 'பெண்களின் கருத்துருவம் பற்றிய ஆய்வின்' (Images of Women Criticism) அடிப்படையில் பல திறனாய்வு நூல்கள் தோற்றம் பெற்றன. குறிப்பாக, 1972இல் வெளிவந்த Images of Women in Fiction: Feminist Perspective' என்ற நூல், இத்திறனாய்வுப் போக்கில் வெளிவந்து பிரபலமடைந்தது.

1975இல், பெண்ணிய இலக்கியத் திறனாய்வில் மற்று மொரு புதிய போக்கு எழுச்சி பெற்றது. அஃது, பெண்களுடைய படைப்புக்களை ஆராய்வது என்பதாகும். இதன் நோக்கம், 'பெண்களுடைய இலக்கிய மரபி'னை (Female Literary Tradition) ஆராய்வது அல்லது எடுத்துரைப்பதாகும்.

இவ்வகைத் திறனாய்வுப் போக்கில் வெளிவந்த நூல்களுள், எல்லன் மோர் (Ellen Moer) எழுதிய 'இலக்கியப் பெண்கள்' (Literary Women-1976) என்பதும், எலைன் ஷோவால்டர் (Elaine Showalter) எழுதிய 'அவர்களின் சொந்த இலக்கியப் படைப்பு' (A Literature of their own-1977) என்பதும், சான்ரா கில்பர்ட் மற்றும் சூசன் குபார் (Sandra Gilbert & Susan Gubar) எழுதிய 'ஆடிக்கில் பைத்தியக்காரப் பெண்' (The mad woman in the Atic) என்பதும் குறிப்பிடத்தக்கன. இவைகள், அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாட்டின் பெண் படைப்பாளிகளைப் பற்றி இனங்காட்டக்கூடிய முதன்மை ஆய்வுகளாக அமைந்துள்ளன. இந்நூல்கள், உடனடியாகப் பெண் ஆய்வாளர்களையும், மாணவியரையும் கவர்ந்து பிரபலமடைந்தன. இம்மூன்று நூல்களின் மூலம், ஆங்கிலோ-அமெரிக்கத் திறனாய்வுப் போக்கில், 'பெண் மைய வாதம்' (Gynocentri Criticism) முன்னேற்றம் அடைந்தது.

இதற்கிடையே, அட்ரைன் ரிச் (Adrienne Rich) என்ற பெண்ணியவாதி 'மறுபார்வை' (Revision) என்ற புதிய பெண்ணியத் திறனாய்வுப் போக்கை அறிமுகம் செய்தார். இஃது, பழைய இலக்கியத்தில், புதிய பார்வையைச் செலுத்தி, கேள்விகளை எழுப்பின. பழைய இலக்கியங்களில் புதைந்து கிடக்கும் பெண்களின் மரபு நிலையை ஆராய்வதும் (to search for an underlying consistent female tradition) இவ்வாய்வின் போக்காகும்.

1975ஆம் ஆண்டு தொடங்கி, பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடுகள் பற்றிய நூல்களும் வெளிவரலாயின. பெண்ணியத் திறனாய்வுக் கோட்பாடுகளை எடுத்துரைக்கும் கீழ்க்கண்ட நான்கு கட்டுரைகளும் குறிப்பிடத் தக்கன.

1. ஆனிட் கொலோட்னியின் (Annette Kolodny) 'பெண்ணிய இலக்கியத் திறனாய்வு பற்றிய சில குறிப்புக்கள்' (Some notes on defining a Feminist Literary Criticism)

2 எலைன் ஷோவால்டரின் 'பெண்ணியக் கவிதை சார்ந்த நோக்கு (Towards a Feminist Criticism) மற்றும் ஒதுக்கப்பட்ட பெண்ணிய இலக்கியத் திறனாய்வு' (Feminist Criticism in the wilderness).

3. மிரா ஜெலனின் (Myra Jehlen) 'ஆர்கிமிடிஸும் பெண்ணியத் திறனாய்வு பற்றிய புதிரும்' (Archiemedes and the Paradox of Feminist Criticism).

ஆனிட் கொலோட்னியன் கட்டுரை 1975 ஆம் ஆண்டு 'Critical Inquiry' என்ற இதழில் வெளியானது. ஆனிட், இக்கட்டுரையில், பெண் படைப்பாளர்களை ஆய்வு செய்வதை, பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் முதன்மையானப் போக்காக எடுத்துரைத்துள்ளார். அதன் மூலம்,

1. பெண் படைப்பாளர்களின் நோக்கையும் போக்கையும் இனம் காட்டுதல், அதன் வழிப் பெண்ணியப் பாணி, (Feminine Mode) என்ற ஒன்றைத் தனித்து இனம் காட்டுதல்.

2. பெண் படைப்புக்கள் ஆண் படைப்புக்களிலிருந்து வேறுபடும் பாங்கை இனம் காட்டுதல்.

3. பெண்கள் பற்றி, ஏற்கனவே இருந்து வரும் ஒரே மாதிரியான கருத்துருவங்களை மாற்றுதல்

என்ற குறிக்கோள்களை அடைய இயலும் என்று அவர் விளக்கியுள்ளார்.

எலைன் ஷோவால்டர், அமெரிக்காவின் தலை சிறந்த பெண்ணியத் திறனாய்வாளர் என்று போற்றப்படுபவர். இவர், 'பெண்ணியக் கவிதை சார்ந்த நோக்கு' என்ற கட்டுரையில் இரண்டு வகையான பெண்ணியத் திறனாய்வுப் போக்கினை இனம் காட்டியுள்ளார்.

முதல்வகைத் திறனாய்வாளர்களைப் 'பெண்ணியத் திறனாய்வாளர்கள்' (Feminist Critique) என்று சுட்டுகிறார். இவர்கள், பெண் வாசகர்களாக (Women as reader) அடையாளம் காட்டப்படுகிறார்கள். அதிலும் குறிப்பாக இவர்கள் ஆண் படைப்புக்களை வாசித்தறிந்து, திறனாயும் போக்கினர் என்று எடுத்துரைத்துள்ளார்.

எலைன் ஷோவால்டர், இரண்டாவது வகைத் திறனாய் வாளர்களைப் 'பெண் படைப்புத் திறனாய்வாளர்கள்' (Gyno-critics) என்று பெயரிட்டுச் சுட்டியுள்ளார். இவர்கள் பெண் எழுத்தாளர்களை மையப்படுத்தி ஆராய்கின்றனர். பெண் படைப்புகளை வரலாற்றுப் பார்வையில் ஆராய்வதுடன், அவர்கள் எழுத்துக்களில் காணப்படும் கருத்து, வடிவம், நடை என்பவற்றைப் பற்றியும் ஆராய்ந்து மதிப்பிட்டுள்ளனர். மேலும் இவர்கள் பெண்கள் படைப்புக்களில் காணப்படும் பெண் பாத்திரங்களின் மன ஆற்றலை (Psychodynamic) ஆராய்வதிலும் அக்கறை காட்டியுள்ளனர்.

எலைன் ஷோவால்டரின் இரண்டாவது கட்டுரை மிக நீண்டது. இதில், இன்றைய பெண்ணிய இலக்கியத் திறனாய்வு உயிரியல், மொழியியல், உளவியல், பண்பாட்டியல் என்ற நான்கு போக்கினைக் கொண்டுள்ளது என்று விளக்கியுள்ளார்.

மீரா ஜெலன் எழுதிய 'ஆர்க்கிமிடிஸும் பெண்ணியத் திறனாய்வு குறித்த புதிரும்' என்ற கட்டுரை 1981இல் வெளியான போது, அது அமெரிக்கப் பெண்ணியவாதிகளிடையே அதிகம் பேசப்பட்டது. ஸ்பேக்ஸ் (Spacks), மோயர்ஸ் (Moers), ஷோவால்டர் (Showalter), கில்பர்ட் (Gilbert) மற்றும் குபார் (Gubar) போன்ற எழுத்தாளர்களின் பெண் மைய எழுத்துக்களை வைத்துக் கொண்டு, இலக்கியங்களில் பெண்களின் மரபினை எடுத்துரைப்பது பெண்ணியத் திறனாய்வு ஆகாது என்றும், இப்போக்கு ஆண்கள் மனத்தில் 'பெண் என்று தனித்து வேலி போட்டு விடும்' (Female enclave) என்று மீரா ஜெலன் கருத்துரைக்கிறார். ஆண், பெண் என்ற வேறுபாடின்றி எல்லாப் படைப்புக்களையும், பெண் பார்வை கொண்டு (Women's view point) ஆராய்வதே சிறந்த திறனாய்வுப் போக்கு என்றும் இவர் எடுத்துரைத்துள்ளார்.

எலைன் ஷோவால்டர் இவரது கருத்தை மறுத்துரைத்துள்ளார். பெண் எழுத்துக்களைத் தனித்துத் திறனாய்வது என்பது பெண்ணைத் தனித்துவப்படுத்துவது ஆகாது என்றும், பெண்ணின் மரபு நிலையை ஆராய்வது என்பது அரசியல் நிலையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் எடுத்துரைத்துள்ளார். தந்தைவழி ஆட்சியில் பெண் என்பவள், தான் பெண் என்பதற்காகவே வேறுபடுத்தப் பட்டுள்ளாள் அல்லது அடிமைப்படுத்தப் பட்டுள்ளாள் என்றும், பெண்ணியத்தில் அதனடிப்படையிலான

திறனாய்வில் பெண், பெண் என்பதற்காக மதிப்புக்குரியவள் ஆகிறாள் என்று அதற்கு மேலும் விளக்கம் தந்துள்ளார்.

ஆங்கிலோ-அமெரிக்கப் பெண்ணியத் திறனாய்வு புதிய மற்றும் பகுப்பாய்வு முறையில் வளர்ச்சி பெற்று வருவதை மேற்கண்ட கட்டுரைப் பகுதி எடுத்துரைக்கின்றது. இஃது, தனக்கென தனித்ததொரு ஆய்வு முறையியலை (Research Methodology) வளர்த்துக் கொள்ளவில்லை என்றாலும், தீவிரப் போக்குடையதாகத் தன்னை வளர்த்துக் கொண்டுள்ளது.

பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வு என்பது 1950களில் சைமன் டி பெவாயரின் கோட்பாடுகளுடன் தொடங்குகிறது. இது, மரபுநிலை மார்க்சிய கொள்கையை அடிப்படையாகக் கொண்ட திறனாய்வுப் போக்கினது அன்று. ஆனால் இவர் புதிய சமதர்ம வாதங்களை முன் நிறுத்திச் சமூகம், அரசியல், பண்பாடு இவற்றின் அடிப்படையில், 'பெண் என்பவள் பிறப்பதில்லை உருவாக்கப்படுகிறாள்' (One is not born as woman; one becomes one) என்பதை ஆராய்ந்துரைத்துள்ளார்.

பிரான்ஸில் 1960களில் அரசியல் சார்ந்த கல்விச் சூழல் மார்க்சியப் போக்கினதாக இருந்தது. அதிலும் குறிப்பாக, மாவோயிசத்தை (Maoism) அடிப்படையாகக் கொண்டிருந்தது. இக்காலக்கட்டத்தில், தோற்றம் பெற்ற புதிய பெண்ணியவாதிகள், பெவாயரைத் தங்களின் திறனாய்வு முன்னோடியாகக் கருதினாலும் அவரின் வாழ்வியல் மெய்மை சார்ந்த பெண்ணியக் கோட்பாட்டை (existentialist feminist theory) ஏற்றுக் கொள்ளவில்லை. பெவாயரின் தாராளவாதமானது, 'ஆணுக்குச் சமமாகப் பெண் மதிக்கப்பட வேண்டும்' (Equality with men) என்று எடுத்துரைக்கின்றது. ஆணுக்குச் சமம் என்று மதிப்பிடும் போக்கைப் பின்வந்த பெண்ணியவாதிகள் விரும்பவில்லை.

பெவாயருக்குப் பின், ஹெலன் சிக்ஸஸ் (Helene Cixous), லூஸ் இரிகரே (Luce Irigaray), ஜுலியா ஹிரிஸ்டேவ (Jullia Kristeva) இவர்களுடைய திறனாய்வுப் போக்கு குறிப்பிட்டுச் சொல்லும்படியாக அமைந்திருந்தது.

ஹெலன் சிக்ஸஸ் என்பவர் 1975 முதல் 1977 வரையிலான மூன்றாண்டுகளில் பெண்ணியக் கோட்பாட்டு நூல்களை எழுதியுள்ளார். இவர், 'தந்தை வழிச் சமூக இருநெறிச் சிந்தனை' (Patriarchal binary thought) என்ற கோட்பாட்டை எடுத்துரைத்துள்ளார்.

சூரியன்/சந்திரன் பகல்/இரவு

தந்தை/தாய் அறிவு/உணர்ச்சி

என்பன போன்று, தந்தை வழிச் சமூகத்தில் ஆண்/பெண் இருவரும் குறிப்பிடத்தக்க எதிரெதிர் பண்புடைய கூறுகளாக உணரப்பட்டுள்ளனர். ஆண்/பெண் என்பவர்கள் உடன்பாடு/எதிர்மறை என்ற போக்குடையவர்களாக இச் சமூகத்தில் இனம் காணப்படுகின்றனர். இதனடிப்படையில், தந்தை வழிச் சமூகத்தில் செயலாற்றலுடைய ஆண் எப்பொழுதும் வெற்றி பெறுபவனாகவும், அடங்கிப் போகும் பெண் எப்போதும் தோல்வியைத் தழுவுபவளாகவும் ஆகிறாள் என்று கூறியுள்ளார்.

மேலும், பெண் படைப்புக்களில் 'கற்பனை உலகு' (Utopian vision of female creativity) என்பது பற்றியும் ஆராய்ந்துள்ளார். பாலியல் சார்பில்லாத, அடக்குமுறையில்லாத கற்பனைச் சமூகத்தை உருவாக்கிக் காட்டும் படைப்புக்கள் மேற்கூறிய சமூகத்தை உருவாக்கும் அரசியல் தூண்டலாக அமைய முடியும் என்கிறார். கிறிஸ்டைன் ராக்போர்ட் (Christiane Roachefort) எழுதிய 'Archaaos ou de Jardin' என்ற பிரெஞ்சுப் புதினத்தை வலிமை வாய்ந்த பெண்ணியப் படைப்பாகக் கருதுகிறார்.

லூஸ் கிரிகரே என்பவர் 1974 இல் எழுதிய 'Specullum of the other woman' என்பது மற்றொரு குறிப்பிடத்தகுந்த திறனாய்வு நூலாகும். இது தந்தைவழிச் சமூகப் போக்கை வெளிப்படுத்துவதுடன், மேற்கத்திய நாடுகளில் காணப்படும் பெண் அடக்குமுறையின் வடிவங்களையும் ஆராய்கிறது.

'ஜூலியா ஹரிஸ்டேவ', பெண்ணிய மொழியியல் (Feminist Lingustic) என்ற திறனாய்வு முறையை எடுத்துரைத்துள்ளார். மொழியில் காணப்படும் பால் வேறுபாடுகளை இனம் காட்டி, மரபு வழி வந்த மொழி ஆணை நோக்கியதாக அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டியுள்ளார். மொழியைப் பயன்படுத்துவதில் ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வேறுபாட்டையும் ஆராய்ந்துரைத்துள்ளார். குறியியல் (Semiotic) என்ற மொழியியல் கோட்பாட்டின் அடிப்படையில் திறனாய்ந்து 'பெண்' என்று வரையறுத்துப் பேசும் போக்கைக் கடிந்துரைத்துள்ளார். பெண் என்ற கருத்துருவமே, சார்பில்லாத, பாலியத்தை வெளிப்படுத்தாத, ஆய்வுக்கு வழிவகுக்கும் என்று எடுத்துரைத்துள்ளார். இவரது பெண்ணியத் திறனாய்வுப் போக்கு அறிவியல் சார்ந்த ஒன்றாகும்.

ஆங்கிலோ-அமெரிக்கன் மற்றும் பிரெஞ்சுப் பெண்ணியத் திறனாய்வுப் போக்கினை இணைத்து, மேக்கி ஹம் என்பவர், பெண்ணியத் திறனாய்வு, கீழ்க்கண்ட நான்கு வகையானது என்று பாகுபடுத்தியுள்ளார்:

1. மொழியும் உளவியல் பகுப்பாய்வும் ((Language and Psychoanalysis)
2. மார்க்சியப் பெண்ணியம் (Marxist Feminism)
3. கறுப்பர் மற்றும் லெஸ்பியன் திறனாய்வு (Black and Lesbian Criticism)
4. பழங்கதை ஆய்வு (Myth Criticism)

## 1. மொழியும் உளவியல் பகுப்பாய்வும்

ஜுலியா ஹிரிஸ்டேவ (Jullia Kristeva), ஹெலன் சிக்ஸஸ் (Helene Cixous), மேரி டாலி (Mary Daly), மோனிக் விட்டிக் (Monique Wittig) இவர்கள் மொழி அடிப்படையிலான திறனாய்வை மேற்கொண்டவர்கள். ஆண்மை, பெண்மை என்ற பாகுபாடு உள்ளுணர்வில் மட்டுமன்றி, மொழியிலும் ஆழமாக வேரூன்றியுள்ளதை இவர்களின் ஆராய்ச்சிகள் எடுத்துரைக்கின்றன. மொழி அடிப்படையிலான ஆய்வை மேற்கொண்ட பிரெஞ்சுப் பெண்ணியவாதிகள் சமூகம், கலை, பண்பாடு இவற்றின் அடிப்படையில் மொழியைச் சார்பிலா நிலையில் 'மறுவுருவாக்கம்' செய்ய முயன்று தோல்வியுற்றனர்.

சான்ரா கில்பர்ட், சூசன் குபார் என்பவர்கள் பெண் படைப்புகளில் உள்ள பெண் பாத்திரங்களின் உள ஆற்றலை ஆய்ந்துள்ளனர்.

## 2. மார்க்சியப் பெண்ணியம்

'பர்மிங்ஹாம் பண்பாட்டு ஆய்வு மையத்தைச் (Birmingham Centre for Cultural Studies) சேர்ந்தவர்கள், லில்லியன் ராபின்சன் (Lillian Robinson), மைக்கேல் பேரட் (Michael Barrett), காயத்ரி ஸிபிவாக் (Gayathri Spivak) இவர்களின் படைப்புகளை ஆராய்ந்து, இவர்களை மார்க்சியக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட திறனாய்வாளர்களாக இனம் காட்டியுள்ளனர். மார்க்சியப் பெண்ணியவாதிகள் கட்டாயமாகப் பழமை வாய்ந்த மார்க்சிய கொள்கை உடையவர்களாக

இருக்க வேண்டிய தேவையில்லை. சமதர்மத்திலிருந்து மார்க்சியம் வரையிலும், பலதரப்பட்ட கொள்கைகளையும் கருத்துக்களையும் ஏதாவது ஒரு வழியில் அடையாளம் காட்டு பவர்களாக இருந்தால் போதுமானதாகும்.

## 3. கறுப்பர் மற்றும் லெஸ்பியன் திறனாய்வு

இவர்கள் 'அந்தரங்கம் பொதுவானது' (Personal is Political) என்ற தற்சார்பு விளக்கத்தை (Self-definition) இலக்கிய வடிவத்தில் மையப்படுத்தி ஆராய்ந்தவர்கள். பார்பரா ஸ்மித் (Barbara Smith), அட்ரைன் ரிச் (Adrienne Rich) என்ற இருவரும் இவ்வகைத் திறனாய்வை மேற்கொண்டவர்களாவர்.

## 4. பழங்கதை ஆய்வு

பெண்ணியத் திறனாய்வில் இது புதிய போக்காகும். மேரி டாலி, ஆனிஸ் ப்ராட் (Annis Pratt) இவர்கள் மரபு வழிவந்த பெண்ணியப் பண்புகளை மாற்றியமைக்கும் வகையில் திறனாய் வுப் பாதையை வகுத்துக் கொண்டவர்கள்.

## முடிவுரை

பெண்ணியத் திறனாய்வு இன்று உலகம் முழுவதும் பரவி யுள்ளது என்றாலும் இஃது அனைவராலும் சரியாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளதா என்ற வினாவிற்கு விடை காண்பதரிது. தந்தைவழிச் சமூகத்தை, அதனடிப்படையில் உருவான பாலியல், அதிகாரப் படிமுறை, இவற்றை ஆராயும் இத்திறனாய்வு முறையை, பெண்ணியத்தை முழுவதுமாக அறிந்து கொண்டவர் களால் மட்டுமே புரிந்து கொள்ள இயலும். பெண்ணைப் பெண்ணாகப் படித்தறிதல் (Women to read as women) என்ற போக்கும் இத்திறனாய்வு முறைக்கு இன்றியமையாததாகும். இவற்றின் அடிப்படையில்தான் பெண்ணியத் திறனாய்வைப் புரிந்து கொள்ளவும் எடுத்தாளவும் இயலும்.

# இந்திய பெண்ணிய வரலாறு

மேலை நாட்டுப் பெண்ணியம் தனக்கென்று தனித்த வரலாறு உடையது. அஃது, தனியுரிமை, சமத்துவம், அரசியல் விடுதலை மற்றும் தன்னாட்சி இவற்றை அடிப்படைக் கொள்கை யாகக் கொண்டது. இந்திய பெண்ணியம் என்பது இந்திய வரலாற்றோடு, குறிப்பாக விடுதலைப் போராட்ட வரலாற் றோடு இடைமிடைந்தது.

இந்தியாவைப் பொறுத்தமட்டில் 'தனியுரிமை' என்பது ஒரு புதிய கருத்தாக்கமாகும். தொன்றுதொட்டு அண்மைக் காலம் வரை, இந்திய ஆணும் பெண்ணும், அதிகாரப்படிநிலை அமைப்பின் கீழ் வாழ்ந்துள்ளனர்; தங்கள் விடுதலையை விட்டுக்கொடுக்கவும், தங்கள் தேவைகளை அடக்கிக் கொள்ளவும், தங்கள் உணர்வுகளை மறைத்துக் கொள்ளவும், எல்லாவற்றிலும் தங்களை அர்ப்பணித்துக் கொள்ளவும் பழகிய வர்கள் இந்தியப் பெண்கள். எனவே அவர்கள் 'தனியுரிமை' என்பது தங்களுக்குத் தேவையில்லை (Self-denial) என்று ஒரு தவறான தத்துவத்தின் கீழ் வாழ்ந்து வந்திருக்கின்றனர். அரசியல் விடுதலை, குடியாட்சி போன்றவற்றின் மதிப்பையும் அதன் நல்விளைவுகளையும் பிரிட்டிஷ் ஆட்சியின் மூலமே அவர்கள் தெரிந்து கொள்ள முடிந்தது. அதன் விளைவாகவே தனிமனித விடுதலை, தனித்தன்மை மற்றும் தன்னாட்சி இவை பற்றிய விழிப்புணர்வைப் பெற்றனர்.

எனவே, இந்திய பெண்ணியம் என்பது மேலை நாட்டுப் பெண்ணியத்திலிருந்து வேறுபட்டதாக அமைந்துள்ளது. இதன் நோக்கும் போக்கும் என்னவென்றால் இந்திய பெண்கள் தங்களின் தனித்தன்மையையும் சிறப்பையும் முழு அளவில் உணர வேண்டும் என்பதேயாகும்.

இந்திய பெண்ணிய வரலாறு 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்து தொடங்குகிறது. தொடக்க காலத்தில் சீர்திருத்தவாதிகளே பெண்களின் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு அவர்கள் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டிருக் கின்றனர். குழந்தை மணம், சதி, பர்தா முறை, தேவதாசி முறை போன்றவற்றை ஒழிப்பதே அவர்கள் முன் நிறுத்திய முதன்மைப் பிரச்சினைகள். மேலும் பெண்கள் தொடர்பான சட்டச் சீர்திருத்தம், பெண்களுக்குக் கல்வி வாய்ப்பு ஏற்படுத்தித் தருதல், அவர்களுக்கு விழிப்புணர்ச்சியூட்டுதல் போன்ற வற்றையும் மேற்கொண்டிருந்தனர். இவர்கள் தந்தைவழிச் சமூக அமைப்பில் ஏற்பட்ட ஆணாதிக்கப் போக்கையோ, பெண்ணடிமைத்தனத்தையோ மறுத்துப் பேசவில்லை. மாறாக மனைவி, தாய் என்ற பங்கு நிலைகளை ஆழமாக வற்புறுத்தி வந்துள்ளனர். இதுவே, பெண்ணியவாதிகளுக்கும் சீர்திருத்த வாதிகளுக்கும் உள்ள அடிப்படை வேறுபாடாகும்.

ராஜாராம் மோகன்ராய் 'சதி'யை எதிர்த்தும், ஈஸ்வர சந்திர வித்யாசாகர் விதவை மறுமணத்தை ஆதரித்தும், ராணடே, கார்வ், போன்றவர்கள் பெண் கல்வி வேண்டியும் சீர்திருத்தம் கொண்டுவர முற்பட்டனர். 19ஆம் நூற்றாண்டுச் சீர்திருத்தவாதிகள் பொதுவான பெண் அடக்கு முறையை எதிர்த்ததிலும், பெண்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டியதிலும் ஒரு குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளனர்.

சமூகச் சீர்திருத்தவாதிகளின் முயற்சியினால்தான் 1880 களில் பெண் அமைப்புகள் தோற்றம் பெற்றன. சிலவற்றில் ஆண் சீர்திருத்தவாதிகளே தலைமையிடம் வகித்தனர். இவ் வமைப்புகள் பெண் கல்வி, ஆதரவற்ற பெண்களுக்கு அடைக் கலம் தருதல் போன்ற பணிகளை மேற்கொண்டிருந்தன.

அதன்பின் பெண்களாலேயே பெண்களுக்கென அமைப்புகள் தோன்றலாயின. முதன் முதலில் 1886இல் கல்கத்தாவில் 'பிரம்ம சமாஜ்' என்ற அமைப்பின் முன்னிலையில், சுவர்ண குமாரி தேவி என்பவரின் தலைமையில் 'பெண்கள் கூட்டமைப்பு' (Ladies Association) என்ற அமைப்பு தொடங்கப்பட்டது. அதன் நோக்கம் பெண்களிடையே நட்புறவையும், பிறருக்கு உதவும் மனப்பான்மையையும் வளர்ப்பதாகும். மேலும் இங்கு ஏழைப் பெண்களுக்காக ஆசிரிய பயிற்சி அளிக்கப்பட்டது. பூனாவில் 1892 இல் பண்டித ரமாபாய் சரஸ்வதி என்பவர், 'சாரதா சதன்' என்ற ஓர் அமைப்பைத் தொடங்கினார். அதன்

நோக்கம் பெண்களுக்கான கல்வி மற்றும் வேலைவாய்ப்பு அளித்தலாகும். சிறிது காலத்திற்குப் பின் கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நல்ல காரியம் அவ்வமைப்பினால் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. மொக்கு மலருவது போல, இளம் பெண்கள் கல்வியார்வம் கொண்டுப் பொதுத்தொண்டு செய்யவும், அதை மதிக்கவும் ஆர்வத்தோடு முன் வந்தனர். இந்தக் காலக்கட்டத்தில் அகமதாபாத்தில் 'ஸ்ரீமதி பத்ரம் ருத்ரம் அநாதாஸ்ரமம்' என்ற பெயரில் ஓர் அமைப்பு தோன்றி ஏழை பெண்களுக்கும், விதவைகளுக்கும், சமூகத்தால் ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்கும், கர்ப்பிணிகளுக்கும் உதவிக்கரம் நீட்டியது.

1903 இல் 'ஸ்ரீ சொரோஸ்திரியன் மண்டல்' என்ற ஒரு அமைப்பு தோன்றி, பெண்களுக்கு, குறிப்பாகப் பார்ஸிப் பெண்களுக்கு உதவியது. அதன் நோக்கம் பெண்கள் பொருளாதாரத்தில் முன்னேறி விடுதலையாக இருக்க வேண்டும் என்பதேயாகும். பெண்களுக்காக, உணவு, மருந்து, பால் போன்றவற்றையும் விநியோகித்தது.

1908இல் குஜராத்தி இந்து ஸ்திரி மண்டல் என்ற அமைப்பு பி.என். மோதிவாலா என்பவரால் பம்பாயில் தொடங்கப்பட்டது. அஃது, முக்கியமான சமூகச் சேவையாளர்களைக் கொண்ட அமைப்பாகும். அது பெண்களுக்குத் தையல், கைவேலை, ஓவியக்கலை, தோல் சம்பந்தப்பட்ட சிறு பொருட்கள் செய்யும் வேலை போன்றவற்றில் பயிற்சியும், குஜராத்தி, இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் பயிற்சியும், இசை, பாட்டு மற்றும் ஆசிரியை பயிற்சியும் அளித்து வந்தது. அது, முதன் முதலாகப் பெண்களுக்காகவும், குழந்தைகளுக்காகவும் ஒரு நூலகத்தையும் ஏற்படுத்தியது. இளம் பெண்கள் அமைப்பு என்ற ஒன்றைத் தோற்றுவித்து, மாதாந்திர செய்தித்தாள் ஒன்றையும் வெளியிட்டது. இது போன்று, பல அமைப்புகள் இந்தியாவில் அடுத்தடுத்துத் தோன்றின.

1909 இல் புனாவில் ராமாபாய் ராணடே என்பவர், 'சேவா சதன்' என்ற அமைப்பையும்,வங்காளத்தில், சரோஜ் நளினி என்பவர் 'மகிளா சமிதி' என்ற அமைப்பையும் தோற்றுவித்தனர். 1914 இல் பரோடாவில் சிமன்பாய் தாய்சேய் நல அமைப்பும், 1916 இல் புனாவில் பாகினி சமாஜ் என்ற அமைப்பும் தோன்றின.

இந்நிலையில் பெண்கள் நாடுதழுவிய அமைப்பு ஒன்று தேவை என்று உணர்ந்தனர். எனவே, ஆங்காங்கே தோன்றிய

அமைப்புகளை ஒன்று சேர்த்து, 'பாரத் ஸ்திரி மகாமண்டல்' என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த ஒருங்கிணைப்பு எதிர் பார்த்தபடி ஆழ வேரூன்றவில்லை.

ஆனால், இந்த நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, நாடு தழுவிய அளவில், 1917 இல் 'இந்திய பெண்கள் கூட்டமைப்பு' (Women's Indian Association–WIA) என்பதும், 1925 இல் இந்திய தேசிய பெண்கள் குழு (National Council of Women in India-NCWI) என்பதும், 1926 இல் அகில 'இந்திய பெண்கள் மாநாடு' All India Women's Conference-AIWC) என்பதும் தோற்றம் பெற்றன.

## இந்திய பெண்கள் கூட்டமைப்பு

இந்த அமைப்பு, 1917ஆம் ஆண்டு மே 8ஆம் தேதி சென்னை அடையாற்றில் திருமதி டோரதி ஜினராஜதசா என்பவரால் தொடங்கப்பட்டது. இந்த அமைப்பின் முதல் தலைவராக, சுமார் 17 வருடங்கள், ஐரிஸ் நாட்டைச் சேர்ந்த அன்னி பெஸண்ட் அம்மையார் விளங்கினார். செயலாளராக டோரதி அம்மையார் இருந்தார். இக் கூட்டமைப்பின் நோக்கம், எல்லா இந்திய பெண்களையும் ஒன்றிணைத்து சமுதாயத்திற்கும், வீட்டிற்கும் சுதேச மக்களாலேயே நன்மை செய்ய வேண்டும் என்பதுதான். அக் கொள்கையைச் செயல்படுத்திக் காட்டிய முதல் பெண் அமைப்பும் இதுதான்.

## இவ்வமைப்பின் குறிக்கோள்களும் கருத்துக்களும்

1. எல்லாப் பெண்களும் இந்திய தாயின் மகள்கள் என்ற முறையில் அவர்களுக்கான பொறுப்பை அவர்களுக்கு உணர்த்துதல்.

2. ஒவ்வொரு ஆணும், பெண்ணும் கட்டாய தொடக்க கல்வி பயில்வதுடன், தங்கள் மதத்தைப் பற்றியும் தெரிந்து கொள்ளுதல்.

3. குழந்தை மணத்தை ஒழித்தல் மற்றும் சமூகத்தில் உள்ள பல தீய பழக்கங்களை அகற்றுதல்.

4. நகராட்சி மற்றும் சட்டசபை தேர்தலில் பெண்களுக்கு ஓட்டுரிமை பெற்றுத் தருதல்.

5. நகராட்சி, தாலுகாக்கள், சட்டசபைகளில் பெண் களுக்குப் போதியளவு பிரதிநிதித்துவம் பெறுவதற்கு வழிவகுத்தல்.

6. ஆண், பெண் பாகுபாடின்றி, சம உரிமையும் வாய்ப்பு களும் அளித்தல்.

7. குடும்பத் தலைவிகள் என்ற முறையிலும், பொறுப்புள்ள தாய்மார்கள் என்ற முறையிலும், இந்தியாவின் எதிர் காலம் பெண்கள் கையில்தான் உள்ளது என உணர்த்தி நாடாளப் போகும் வருங்காலச் சந்ததியினரை நல்ல முறையில் வளர்க்க பயிற்றுவித்தல்.

8. பெண்கள் பல குழுக்களாகச் சேர்ந்து கொண்டு, தற்சார்பு முன்னேற்றம், மற்றும் கல்வி போன்றவை பெற்று, அடுத்தவர்களுக்கு உதவிக்கரம் நீட்ட பாடு படுதல்.

1917 முதல் 37 வரையிலான ஆண்டுகளில், 33 கிளைகள் வெற்றிகரமாக அவ்வமைப்பின் கீழ் செயலாற்றின. இவ்வமைப் பின் அடிப்படை வலியுறுத்தல், பெண்கல்வியேயாகும்.

இவ்வமைப்பு அரசியலிலும் குறிப்பிடத்தக்க அளவு பங்காற்றி யுள்ளது. இது, 14 பெண்களைக் கொண்ட ஒரு குழுவை ஓட்டுரி மைக்காக அமைத்தது.

அப்போதைய இந்தியாவுக்கான செயலரான 'மாண்டேகு' சென்னை வந்திருந்தபோது, இக்குழு அவரிடம் தங்களின் கோரிக்கையை எடுத்துரைத்தது. ஆனால் 'மாண்டேகு' இக் கோரிக்கையை நிராகரித்து விட்டார். இக்குழு அயராது தொடர்ந்து போராடியதன் பயனாக, எல்லா மாகாணங் களிலும் பெண் ஓட்டுரிமையைப் பிரிட்டிஷ் அரசு அங்கீகரித்தது. இது, இவ்வமைப்பின் மிகப் பெரிய வெற்றியாகும். இவ்வமைப்பு சாதி, இன வேறுபாடு கூடாது எனவும், ஒடுக்கப்பட்ட இனத்தி லிருந்து வந்தவர்களுக்கு இட ஒதுக்கீடு வேண்டும் எனவும் தொடர்ந்து போராடியதும் இதன் வரலாற்றில் குறிப்பிடத் தக்க போராட்டமாக அமைந்தது எனலாம்.

இவ்வமைப்பு, 'ஸ்திரி தர்மா' என்ற இதழை ஆங்கிலம், தமிழ், தெலுங்கு என்ற மொழிகளில் நடத்தி வந்தது. இவ்விதழ் 3 மாதத்திற்கு ஒரு முறை வெளி வந்தது. இந்திய பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்ட இவ்

விதழுக்கு, உலகின் பல நாடுகளில் வாசகர்கள் இருந்திருக்கின்றனர்.

இவ்வமைப்பு 1930 இல் மயிலாப்பூரில் 10 பெண்களைக் கொண்டு 'அவ்வை இல்லம்' என்ற அநாதை இல்லத்தைத் தொடங்கியது. தொடங்கிய இரண்டு வருடங்களில் சுமார் 800 பேர் இதனால் நிரந்தர பயனடைந்தனர். 'அவ்வை இல்லம்' பின்னர் அடையாரில் விரிவாக்கப்பட்டது. இது, அநாதை இல்லமாக மட்டுமல்லாது, பல பயிற்சிகளை அளிக்கும் 'பயிற்சி மையமாகவும்' (Training Centre) வளர்ந்து, இவ்வில்லம், இளம் பெண்களையும் குழந்தைகளையும் சமூகத் தீமையிலிருந்தும் ஏழ்மையிலிருந்தும் பாதுகாத்தது என்ற விதத்தில் குறிப்பிடத்தக்கதாக அமைந்து விட்டது. இந்திய பெண்கள் கூட்டமைப்பு, அகில இந்திய பெண்கள் மாநாடு என்ற அமைப்புடன் சேர்ந்து 1936 இல் இந்திய பெண்கள் மதிப்பு, அரசியல், சட்டம், பொருளாதாரம், கல்வி, (Status of Women in India-Political, legal, Economic and Education) பற்றிய அறிக்கை ஒன்றை இந்திய அரசாங்கத்திற்கு அளித்தது.

இந்திய பெண்கள் கூட்டமைப்பு என்ற இவ்வமைப்பு, 'இந்தியாவின் தாய் அமைப்பு' என்று போற்றப்பட்டது. அன்னிபெஸண்ட் அம்மையாரின் மறைவுக்குப் பின், டாக்டர் திருமதி முத்து லெட்சுமி ரெட்டி அதன் தலைவராகப் பொறுப் பேற்று, பல காலம் சேவையாற்றினார். இவ்வமைப்பு 23 மையங்களுடன், 72 கிளைகளுடன், 4000 உறுப்பினர்களைக் கொண்டு சிறப்புற செயலாற்றியது.

## இந்திய தேசிய பெண்கள் குழு

1925 இல் தொடங்கப்பட்ட இவ்வமைப்பு, அதே ஆண்டில் அகில உலகப் பெண்கள் அமைப்பைத் தலைமையாகக் கொண்டு அதோடு இணைந்து செயலாற்றத் தொடங்கியது.

### இவ்வமைப்பின் குறிக்கோள்கள்

1. இந்தியாவில் உள்ள பெண்களை ஒன்று சேர்த்து, ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொள்ள வழிப் படுத்துதல்.
2. சட்டத்தின் வழி பொருளாதாரம் மற்றும் சமூக நிலைகளில் பெண்களின் சில இயலாமைகளை நீக்கி

அவர்களுக்குக் குடியுரிமை, கல்வி போன்றவற்றில் உதவி அளித்து, அவர்கள் முன்னேற்றத்திற்கும் வேலைக்கும் வாய்ப்பளித்தல்.

3. ஏற்கனவே உள்ள அமைப்புகளை ஒன்றிணைத்து முன்னேற்றுதல்.

4. பிற நாடுகளில் உள்ள தேசிய பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றுதல்.

## இவ்வமைப்பின் செயல்பாடுகள்

இந்த அமைப்பு சில நூறு வருடங்களுக்கும் மேலாக இருந்து வரும் பெண் அடக்கு முறை, பெண்களுக்கான சட்ட, சமூக இயலாமைகள் இவற்றைப் போக்கி, அவர்களுக்கு ஓர் தகுதியை ஏற்படுத்திக் கொடுக்க முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றது.

இந்த தேசிய அமைப்பு, சமூகநலவாதிகளின் கவனத்தைக் கிராமப்புறங்களில் திசைதிருப்பி, கிராமமக்களின் நலன், தொழிலாளர் நலன் போன்றவற்றில் ஈடுபடச் செய்தது. 1933 இல் 'தொழிலாளர் மாநாடு' ஒன்றையும் நடத்தியது.

இவ்வமைப்பு, பெண் உழைப்பாளிகள், தொழிலாளர்கள் இவர்களுக்குக் கூலி உயர்வு, மகப்பேறுகாலப் பணஉதவி, தாதிகளுக்கு மேலும் பல வசதிகள், பெண்களுக்கான சிறைச் சாலைகளை மாற்றியமைத்தல், அவற்றில் பெண் காவலர்களை நியமித்தல், குடிசைமாற்று போன்றவற்றைச் செயல் நிலைப் படுத்தியது, விவசாயிகள் பிரச்சினைகளை எடுத்துக் கொண்டு, அவர்கள் நலனில் கவனம் செலுத்தியது.

இந்திய பெண்கள் கூட்டமைப்பின் நோக்கத்திலிருந்தும். செயல்பாடுகளிலிருந்தும் தனித்துவம் உள்ளதாகத் தங்கள் நோக்கத்தை வரையறுத்துக் கொண்டு, இந்திய தேசிய பெண்கள் குழு செயல்பட்டது.

## அகில இந்திய பெண்கள் மாநாடு

முதன் முதலில் கல்கத்தாவில் திருமதி குயிட் கோப்பர் என்ற ஆங்கிலேய பெண்மணி, பெண் கல்வி பற்றியும், எதிர் காலத்தைப் பற்றியும் பெண்கள்தான் துல்லியமாக முடிவெடுக்க

முடியும் என்ற கருத்தில், இந்திய பெண்கள் பற்றிப் பல கட்டுரைகள் எழுதி வந்தார். அவை 'ஸ்திரிதர்மா'வில் வெளியாயின. அப்பத்திரிகையின் பொறுப்பாளரான திருமதி எம். இ. கசின்ஸ் என்ற பெண்மணி, பெண்கள் இது குறித்துச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என வலியுறுத்தினார். அதன் தொடர்ச்சியாக, அவர் 1926 ஜூலை 26 ஆம் தேதியில், நாடு முழுவதும் உள்ள பெண்களுக்கு ஒரு சுற்றறிக்கை விடுத்தார். எல்லாப் பெண்களும் தேசிய அளவில் ஒருங்கிணைந்து, தொடக்க கல்வி பற்றி ஆராய்ந்து கருத்துக்களை வெளியிட வேண்டும் என்பதே அவ்வறிக்கை. இதைச் செய்தித் தாள்களில் வெளி யிட்டதோடு மட்டுமல்லாமல், சிறப்பாக 500 பெண்களுக்குத் தனிப்பட்ட முறையிலும் அனுப்பியிருந்தார். அதன் விளைவாக, அவரால் 1926 டிசம்பர் முதல் தொடங்கி, வெவ்வேறு ஆண்டு களில் வெவ்வேறுஇடங்களில் 22 மாநாடுகளை நடத்த முடிந்தது. அவற்றில் சுமார் 60 முதல் 800 வரையிலுமான பெண் பிரமுகர்கள் கலந்து கொண்டு, பல முடிவுகளை எடுத்தனர், இம்மாநாடுகள் இரண்டு குறிக்கோள்களின் அடிப்படையில் நடத்தப்பட்டன. அவை:

1. கல்வி மற்றும் சமூகச் சீர்திருத்தம்
2. அரசியலில் பெண்களின் பங்கு

முதல் மாநாடு புனாவில் நடத்தப்பட்டது. இம்மாநாட்டின் தலைமைப் பொறுப்பைப் பரோடா ராணியான சிமன்பாய் சாகேப் கெய்க்வாட் ஏற்று நடத்தினார். எம்.இ. கசின்ஸ் அம்மாநாட்டின் கௌரவ செயலாளராக இருந்தார். இது போன்றே, ஒவ்வொரு மாநாட்டையும் ஒரு முக்கிய பெண் பிரமுகர் தலைமை ஏற்று நடத்தினார். இம்மாநாடுகளில் இங்கிலாந்து, அமெரிக்கப் பெண்களும் கலந்து கொண்டு, தங்கள் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களின் கல்விநிலை உயர்வு, சமூகநிலை உயர்வு, தொழில் உயர்வு இவற்றைப் பற்றி இம்மாநாடுகள் விவா தித்தன. குழந்தை மணத்தின் பாதிப்பு, பிற்படுத்தப்பட்டோர் நலம், ஊனமுற்ற பெண்களுக்குச் சட்டநலம், மற்றும் ஓட்டுரிமை, என்று ஒவ்வொரு பிரச்சினைக்கும் ஒரு குழு அமைத்து அப்பிரச்சினைகளுக்குப் படிப்படியாகத் தீர்வுகாண முற்பட்டன. மேலும், இம்மாநாட்டுக் குழுக்கள் சுமார் 10க்கும்

மேற்பட்ட போராட்டங்களிலும் ஈடுபட்டு, அம்முயற்சியிலும் பெரும் வெற்றி கண்டன.

மேற்கூறிய இம்மூன்று பெண் அமைப்புகளைத் தவிர மேலும் பல குறிப்பிடத்தக்க அமைப்புகளும் அக்காலத்தில் இருந்தன. அவற்றுள் 'இந்திய பல்கலைக் கழகப் பெண்கள் ஐக்கிய சங்கம்' (Federation of University Women in India). 'ரத்தன் டாட்டா பயிற்சி மையம்.' 'ஜோதி சங்கம்' 'விக்காங் கிரிஜா' போன்ற அமைப்புகள் குறிப்பிடத்தக்கன.

1940 வரையில் தோற்றம் பெற்ற இந்திய பெண் அமைப்புகள், இந்திய பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களை குழந்தை மணம், கைம்பெண் கொடுமை, தேவதாசி முறை போன்ற சமூக விலங்குகளிலிருந்து விடுவிக்கவும் பலவாறு முயன்றன. அவ்வமைப்புக்கள் தங்களைக் குறுகிய வட்டத்தில் நிலைநிறுத்திக் கொள்ளவில்லை; தனித்துச் செயல்படவும் இல்லை. உலக நாடுகளில் உள்ள பெண் அமைப்புகளோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டுத் தங்களைப் பரந்த நோக்கோடு வளர்த்துக் கொண்டன. வெளிநாடுகளில் நடக்கும் மாநாடுகளுக்குப் பிரதிநிதிகளை அனுப்பியும், தாங்கள் நடத்தும் மாநாட்டிற்குப் பிறநாட்டுப் பிரதிநிதிகளை அழைத்தும் கருத்துக்களைப் பரிமாற்றம் செய்து கொண்டன.

1923இல் 'ரோம்' நகரில் நடந்த, 'சர்வதேசப் பெண்கள் ஓட்டுரிமை ஒருங்கிணைப்பின்' (Congress of International Women Suffrage allience) கூட்டத்தில் இந்தியாவிலிருந்து திருமதி ஜினராஜதாஸ், திருமதி பட்வர்தன், திருமதி ஹீராபாய் டாட்டா, செல்வி மிதன் டாட்டா என்ற நால்வரும் பங்கு கொண்டனர். இக்கூட்டம் 1929இல் பெர்லினில் நடந்தபோது திருமதி ஜினராஜதாஸ், திருமதி ராமாராவ், திருமதி மதாய் போன்றவர்கள் கலந்து கொண்டனர்.

1931இல் நடந்த முதல் ஆசிய பெண்கள் மாநாடும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்தியாவைச் சேர்ந்த திருமதி எம். இ. கசின்ஸ் இம்மாநாடு நடத்துவதில் பெரும் பங்கு வகித்தார். இதில் திருமதி சரோஜினி நாயுடு, திருமதி முத்துலெட்சுமி ரெட்டி உட்பட 15 இந்திய பெண்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

1934இல் சிகாகோ நகரில் நடந்த, 'உலகப் பெண்கள் ஒருங்கமைப்பின்' (World Congress of Women) கூட்டத்திற்கு

இந்திய பெண்கள் சார்பாக டாக்டர் திருமதி முத்துலெட்சுமி ரெட்டி கலந்து கொண்டு அரிய உரை நிகழ்த்தினார்.

திருமதி சரோஜினி நாயுடு, திருமதி கமலா தேவி சட்டோபாத்யாயா, திருமதி முத்துலட்சுமி ரெட்டி. ராஜ்குமாரி அமிர்த் கவுர், திருமதி விஜயலட்சுமி பண்டிட், பேகம் ஹமித் அலி, திருமதி எஸ். என். ராய் போன்றோர் உலகப் பெண் அமைப்புகளில் நன்கு அறியப்பட்டிருந்தனர்.

1920 தொடங்கி, தமிழகத்தில் பெரியாரின் 'சுயமரியாதை இயக்கம்' பெண்விடுதலைக்கு வித்திட்டது. பெரியார், தாம் கலந்து கொள்ளும் அனைத்துக் கூட்டங்களிலும், குறிப்பாகத் திருமணக் கூட்டங்களில், பெண்களை மரபுவழி அடிமைப் படுத்தும் பழக்கவழக்கங்களைக் கண்டித்துப் பேசியுள்ளார். 'கற்பு' என்பது பெண்ணடிமைக்கு வித்திட்டதை விரிவாக ஆய்ந்து, எடுத்துரைத்தார். விதவை மறுமணத்தை ஆதரித்துப் பேசியதுடன் மட்டுமல்லாமல், அந்தக் காலத்தில் தன் குடும்பத்திலேயே அதை நடத்தி வைத்தார். பெண்கள் 'தாலி அணிவது', அடிமைப் போக்கிற்கு வித்திடுகிறது என்பதை எடுத்துக் காட்டினார். கலப்புத் திருமணங்களை வரவேற்ற அவர், பலருக்குத் தன் முன்னிலையிலேயே அத்தகைய திருமணங்களை நடத்தி வைத்தார். பெரியாரின் பேச்சும், செயலும், அவரது சுயமரியாதை இயக்கமும், அக்காலத்தில் பெண் விடுதலைக்கு ஆற்றிய பங்கு, 'இந்திய பெண்ணிய வரலாற்றில்' தனியொரு இடத்தை வகிக்கின்றது.

1940 தொடங்கி விடுதலைப் போராட்டம் மிகத்தீவிரமானது. அதையொட்டிக் காந்திஜி விடுத்த அழைப்பின் பேரில், பெண்கள் தீவிரமாக விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். 1930இல் நடந்த சத்தியாகிரகப் போராட்டத்தில் பெண்கள் பங்கு பெற்றனர் என்றாலும், 1942இல் நடந்த உப்புச் சத்யாகிரகத்தில் அவர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாக அமைந்தது. அதில் ஆயிரக்கணக்கான படித்த நாகரிகப் பெண்களும், படிக்காத கிராமப் பெண்களும் கலந்து கொண்டு சிறை சென்றனர். மகரிசி கார்வ், இது பற்றிக் கூறும்போது, 'சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் பெண்களின் சமூகத் தகுதியை உயர்த்தியது என்றும், காந்திஜியின் இயக்கம் பெண்களுக்குத் தேசிய செயல்பாடுகளில் வாய்ப்பளித்து அவர்கள் தனித்திறனை வளர்த்தது' என்றும் கருத்துரைத்தார்.

விடுதலைப் போராட்டத்தின் தீவிரத்தால், நாற்பதுகளில் பெண் இயக்கங்களின் செயல்பாடு தேசிய செயல்பாடாக அமைந்துவிட்டது.

விடுதலைக்குப் பின், இந்திய அரசாங்கம் 1953இல் மத்திய சமூக நலவாரியம் (Central Social Welfare Board) ஒன்றை அமைத்தது. இவ்வாரியம் நாடெங்கிலும் கிராமப் புறங்களில் 50,000க்கும் மேற்பட்ட 'மகிளா மண்டல்'களைத் தோற்றுவித்தது.

1960 தொடங்கி இந்திய பெண்ணியப் போக்கில் பெரும் மாறுதல் ஏற்பட்டது. பெண் அமைப்புகள் சீர்திருத்தப் பணிகளில் இருந்து விலகி, பெண்களின் உரிமைக்கான போராட்டத்தில் ஈடுபடத் தொடங்கின. மேலை நாட்டில் தீவிரமாக எழுந்த பெண்ணியத்தின் பாதிப்பு, இக்காலக்கட்டத்தில் இந்திய பெண் அமைப்புகளின் செயல்பாடுகளிலும் மாற்றத்தைத் தோற்றுவித்தது.

1960 தொடங்கி இந்திய பெண் அமைப்புகள் உழைத்துப் பிழைக்கும் மகளிர்க்காகப் (Working Class Women)போராடின. இதில் முதன்மைப் பங்கு வகித்தவர் விபூதி பட்டேல் என்ற பெண்ணியச் செயல் வீராங்கணையாவார். இவ்வாண்டுகளில் பெண்களின் தீவிரவாத இயக்கம் உச்சக் கட்டத்தை அடைந்தது. இதற்கு நக்ஸல்பாரி இயக்கமே காரணம் என்று விபூதி பட்டேல் கருதுகிறார். மேற்கு வங்காளம், ஆந்திர பிரதேசம், பீகார் மற்றும் கேரள மாநிலங்களில் நக்ஸல்பாரி இயக்கத்தின் செயல்பாடு அதிகமாகியது. 1966 இல்புத்வான் ஜில்லாவில் இவ்வியக்கத்தை அடக்க இராணுவம் அனுப்பப்பட்டது, அச்சமயம் இராணுவத்தை எதிர்த்து 2000க்கு மேற்பட்ட பெண்கள் போராடினர். இப்போராட்டத்தில் ஏழு பெண்கள் உயிரிழந்தனர். இவர்கள் பின்நாட்களில் 'சப்த கன்னியர்' என்று அழைக்கப்பட்டனர். அதாவது, 'ஏழு தியாகிகள்' என்று வர்ணிக்கப்பட்டனர்.

இதே காலக்கட்டத்தில், பீகார், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் பழங்குடி மகளிர் போராட்டத்தில் ஈடுபட்டனர். பணக்காரர்கள் இப்பெண்களைக் கற்பழித்துத் துன்புறுத்தியதை எதிர்த்தும், குடித்து விட்டு ஆண்கள் தங்கள் மனைவியரை அடித்துத் துன்புறுத்தியதை எதிர்த்தும் இப்போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அன்றைய நிலையில் இப்போராட்டம் நாட்டில் மிக முக்கிய மானதாகக் கருதப்பட்டது.

எழுபதுகளில் இடதுசாரிக் கட்சிகள் அதிக அளவு பெண் களை அங்கத்தினராகச் சேர்த்துக் கொள்ளத் தொடங்கின. இஃது 'பெண்கள் முன்னணி' எனப் பெயர் பெற்றது. பெண் களின் பிரச்சினைகளை, இப்பெண்கள் முன்னணியே தலைமை ஏற்று நடத்தியது. சோஷலிசவாதிகள் 1977இல் பெண்கள் அமைப்பு ஒன்றைத் தொடங்கி, அதை ஜனதா கட்சி யுடன் இணைத்துக் கொண்டனர். 1972இல் அகமதாபாத்தில் காந்தீய மற்றும் சோஷலிச கொள்கையுள்ள பெண்கள், 'சுய வேலைவாய்ப்புள்ள பெண்கள் சங்கம்' (Self Employment Women's Association—SEWN) ஒன்றைச் 'சேவா' என்ற பெயரில் தொடங்கினர். இவ்வமைப்பு சீர்திருத்தவாத இயக்கம் என்றும் அழைக்கப்பட்டது.

எழுபதுகளில் தோன்றிய இயக்கங்களில் குறிப்பிடத்தக்கது சிப்ஹோ (Chipho) இயக்கமாகும். இது, காடுகளைப் பாது காக்கும் பணியில் ஈடுபட்டது. இவ்வியக்கம் சில காந்தீயவாத ஆண்களால் தொடங்கப்பட்டது என்றாலும், பின்னால் பல பெண்களால் விரிவாக்கப்பட்டது. இவ்வியக்கம் பெண்களால் நடத்தப்பட்ட ஒரு முக்கியமான இயக்கம் என்ற பெயரையும் பெற்றது.

மலைவாழ் பெண்கள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற விறகு பொறுக்கியும், தொலைதூரத்தில் இருந்து தண்ணீர் கொண்டு வந்தும் அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர். இப்படிக் காட்டையே தம் வாழ்க்கைக்காக நம்பியிருக்கும் பெரும்பாலான மலைவாழ் ஏழை இந்திய மக்களின் வாழ்வை, இந்திய அரசாங்கத்தின் காட்டை அழிக்கும் கொள்கை பாதித்தது. 1973 இல் காடுகள் அழிக்கப்படுவதை எதிர்த்து இவ்வியக்கம் சத்யாகிரகப் போராட்டம் நடத்தியது. 1974 இல் வனத்துறை அதிகாரிகளும், குத்தகைக்காரர்களும் மரங்களை வெட்டும்போது, பெண்கள் கதறியபடி அம்மரங்களை கட்டித் தழுவி அவற்றை வெட்ட விடாமல் தடுத்தனர். அடுத்த கட்ட நடவடிக்கையாக, ஆயுதங்களுடன் போராடவும் தயாராயினர். இங்கேதான், 'சிப்ஹோ' இயக்கம் சிறப்பான பங்கு வகித்துப் போராடும் பெண்களுக்கு ஆதரவாகப் போர்க் கொடித் தூக்கியது. பெண்ணியவாதிகளும் அதுமுதல் 'சிப்ஹோ'

இயக்கத்தின் மூலம் தங்கள் கருத்துக்களையும் கொள்கை களையும் வெளிப்படுத்தத் தொடங்கினர்.

1975 இல் ஹைதராபாத்தில் 'முன்னேறும் பெண்கள் அணி', பெண் போர் வீரர்கள் அணி' என்ற இரு பெண் குழுக்கள் தோன்றின. இவை, இரண்டுமே மாவோவின் (Mao) இடது சாரிக் கொள்கைகளைப் பின்பற்றின. இவைகள் சமத்துவத் தையும், சாதி ஒழிப்பையும் வலியுறுத்தின. நிலச்சுவான்தாரர் களை எதிர்த்துப் போர்க்கொடித் தூக்கின, கூட்டுறவுச் சங்கங் களை அமைத்து அதன் பயனை மகளிரும் அனுபவிக்கும்படிச் செய்தன.

எழுபதுகளில், பெண்ணியவாதிகளின் கொள்கைகள் தீவிர சோசலிச மாணவர்களிடையே ஒரு கவர்ச்சியை ஏற்படுத்தின. அவர்கள் குஜராத்தில் 'நிலம் வழங்கும் முறை' (Land distribution) என ஒரு போராட்டத்தை நடத்தினர். இவர்களின் தலைவர் ஜெயபிரகாஷ் நாராயணன் ஆவார். மேலும் இவர்கள் எழுபதுகளின் நடுவில் 'பால் பேதம்' கூடாது என்றும் ஒரு போராட்டம் நடத்தினர். 79, 80 இல் 'பெண்கள் முகாம்' ஒன்றைப் புத்தகயா மாவட்டத்தில் தொடங்கியது. இது, புறநகர்ப் பகுதியில் விழிப்புணர்ச்சியைத் தூண்டப் பாடுபட்டது.

எழுபதுகளில் நாடெங்கும் பெண்களுக்கான மையங்கள் பல தோன்றின. இவை சட்ட உதவி, நலவாழ்வுத் திட்டங்கள், ஆலோசனைகள் எனப்பல செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்தன. பல மையங்கள் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தந்தன. தாழ்த்தப்பட்டோர்க்குப் போதிய சட்ட ஆலோசனை வழங்கி, வாழ்வு முறையில் அவர்கள் உயரவும் வழி வகுத்தன. இதன் மூலம், அவை சகோதரித்துவம் அல்லது நட்பு முறையில் ஒருவருக்கொருவர் உதவ முடியும் என்பதைக் காண்பித்தன. முதலில் தொடங்கப்பட்ட மூன்று பெண்களுக் கான மையங்களுள் இரண்டு இந்தியில் சலேகி அல்லது சஹேலி (Girl friend or playmate) என்ற பெயரினைக் கொண்டிருந்தன. பண்பாட்டு அடிப்படையிலும் வகுப்பு வாத அடிப்படையிலும் அவற்றுள் கலந்திருந்த பல தடைகளையும் உடைத்தெறிந்து, பெண்களுக்குள் நட்பு முறையில் சகோதரத்துவ முறையில் நேயத்தை வளர்க்க இவ்வமைப்புகள் முயன்றன.

1975 இல் இந்திய பெண்களின் தரம் பற்றி ஆராயும் குழுவானது (Committee on Status of Women in India-CSWI)

சமத்துவம் நோக்கிப் போதல் (Towards Equality) என்ற அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. இது, இந்திய பெண்களின் அப்பட்டமான வாழ்க்கை நிலையை விளக்கி, அவர்களின் நிலை மாற்றம் பற்றி வலியுறுத்தியது. இந்தக் குழுவின் ஆய்வு ஆண், பெண் இரு பாலாரையும் உலுக்கியதுடன் மட்டுமல்லாமல், பெண் அமைப்புகள் பல தோன்றி, பெண்கள் பிரச்சினைகள் பற்றி ஆய்ந்து, அதன் வழி அவர்கள் முன்னேற வழி வகுத்தது.

1975 இல் அகில உலகப் பெண்கள் ஆண்டாகவும், 1975-'84 வரையான பத்தாண்டுகள் பெண்கள் பத்தாண்டு களாகவும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்திய பெண் அமைப்புகள் தங்களின் செயல்பாடுகளை விரைவுபடுத்தின. அதே ஆண்டு மார்ச்சு 8 ஆம் தேதி உலகப் பெண்கள்தினமாக அறிவிக்கப்பட்டது. இந்நாளைப் புனாவில் இடதுசாரி ஐக்கிய பெண்கள் பெரிய அளவில் கொண்டாடினர். இதில் சாதி, மத, அந்தஸ்து மற்றும் கல்வித்தகுதி போன்ற வேறுபாடின்றி அனைவரும் பங்கேற்றனர். அதே நாளில், திருவனந்தபுரத் திலும் ஒரு மாநாடு நடத்தப்பட்டது. அதில் படித்தவர்களும் தீவிரவாதிகளும் கலந்து கொண்டனர். இவ்விரண்டு நிகழ்ச்சி களும் வருங்காலப் பெண்களின் எழுச்சிக்குக் கட்டியம் கூறுவன வாக அமைந்தன.

இதே ஆண்டில் இந்திய அரசாங்கம் அவசர நிலை அறிவிப்பு செய்ததால், சுமார் 2 வருடங்கள் பெண் அமைப்புகள் செயலற்றுப் போயின என்றாலும் அடுத்து வந்த 12 ஆண்டு களில் பல பெண்கள் குழுக்கள் தோன்றி பெண்கள் பிரச்சினை களைப் பற்றி ஆய்ந்து முன்னேற்றத்திற்கு வழி வகுத்தன. 'மிசா'விற்குப் பின் பம்பாய், டெல்லி, பூனா, பாட்னா, அகமதாபாத் போன்ற நகரங்களில் பெண் அமைப்புகள் வலு வடைந்தன. இவை அனைத்தும் ஒன்றுபோல் இல்லா விட்டாலும் இவற்றுள் இருக்கும் அங்கத்தினர்கள் அநேகமாக நகரத்திலும், புறநகர்ப் பகுதியிலும் இருந்து வந்த நடுத்தர மற்றும் படித்த பெண்களேயாவர். அவர்கள் பெரும்பான்மை யான ஏழை நிலையில் உள்ள பெண்களின் தேவைகளை நிறைவு செய்யப் பாடுபட்டனர்.

பொதுவாக, எழுபதுகளில் பெண் இயக்கங்களின் வளர்ச்சி யைப் பார்க்கும் போது, துன்பப்படும் மனைவியிடத்தும், கற்பழிக்கப்பட்ட அல்லது வரதட்சணையால் கொடுமைப்

படுத்தப்பட்ட பெண்ணிடத்தும், பெண் தொழிலாளியிடத்தும், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த குடும்பப் பெண்ணிடத்தும் மாணவி அல்லது வேலை பார்க்கும் பெண்ணிடத்தும் தனி மனிதத்துவத்தைப் பற்றிய விழிப்புணர்வை இவ்வியக்கங்களால் தோற்றுவிக்க முடிந்தது, என்ற அளவில் இவற்றின் செயல் பாடுகள் குறிப்பிடத்தக்கனவாக அமைந்திருந்தன.

1981 இல் 'இந்திய மகளிரியல் கல்விக் கூட்டமைப்பு' (Indian Association and Women Studies) ஏற்படுத்தப்பட்டது. இது பெண் இயக்கங்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவியது. தீவிரச் செயல்பாட்டாளர்களும், கல்வியாளர்களும் இக் கூட்டமைப்பின் மூலம் பல கருத்தரங்குகளும் கூட்டங்களும் நடத்தியுள்ளனர். இவ்வமைப்பின் பயனாக இந்திய பல்கலைக் கழகங்களில் மகளிரியல் கல்வித் துறை தோற்றுவிக்கப்பட்டது. இங்கு மகளிர் பற்றிய ஆய்வுகளுக்கு இடமளிக்கப்பட்டது. அவற்றின் மூலம் இந்திய பெண்கள் பற்றிப் பல ஆய்வுநூல் களும், கட்டுரைகளும் தொடர்ந்து வெளிவரலாயின.

எண்பதுகளில் அநேகமாக இந்தியா முழுவதிலும் பெண் இயக்கங்கள் பரவி, வரதட்சணை கொலை, கொடுமை, காவலர் கற்பழிப்பு, துப்புரவாளர் மறுவாழ்வு, குடிசை மாற்று போன்ற பெண்கள் தொடர்பான பிரச்சினைகளுக்காகப் போராட்டங்கள் நடத்தி ஓரளவு வெற்றி கண்டன.

இக்காலக்கட்டத்தில் பெண்கள் தங்கள் வீடுகளில் நடக்கும் வரதட்சிணை கொடுமை, பெண்ணடக்குமுறை இவற்றை எதிர்த்துக் குரல் கொடுக்கத் தொடங்கினர். மேலும், குடும்பப் பெண்களாக ஒன்று சேர்ந்து பாதிக்கப்பட்ட பெண்ணின் வீட்டிற்கு முன்னால் கூச்சலிட்டுப் போராட்டம் நடத்தினர். பெண்ணியவாதிகள் இந்தக் குடும்பப் பெண்களோடு சேர்ந்து, அவர்களுக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தனர். இதை, இந்தியாவில் நடந்த பெரிய மாற்றமாகக் குறிப்பிடலாம். சமூகத்தில் ஊறிப் போயிருந்த இந்துத்துவ மேலாதிக்கம் மற்றும் மிகப் பழைய கொள்கைகள் போன்றவற்றில் முதன் முறையாகப் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. ஆனாலும், தேசிய அளவில் வரதட்சணை கொலை, கொடுமை போன்றவைகள் காவலரின் திறமையின்மை, கையூட்டு போன்றவற்றால் ஆங்காங்கே நடந்து கொண்டுதான் இருந்தது. எனவே, இந்தக் காலக் கட்டத்தில் பெண்ணியவாதிகள் இந்திய சட்டத்தையும்,

ஆட்சி நிர்வாகத்தையும் மாற்றவும் முன்னேற்றம் செய்யவும் தொடர்ந்து போராட வேண்டியதாயிற்று. சான்றாக ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம். காவல்நிலைய கற்பழிப்பின் மீது நடந்த வழக்கு ஒன்றில் கிடைத்த தீர்ப்பை எதிர்த்து நான்கு முதுநிலை வழக்கறிஞர்கள் வெளிப்படையாக ஓர் அறிக்கை விட்டனர். சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு நடந்த கொடுமையை இது வெளிக்கொணர்ந்ததால், பெண்ணியவாதிகளும் இதற்கு ஆதரவு தெரிவித்துப் போராட்டத்தில் இறங்கினர். இதன் விளைவாக, கற்பழிப்பு வழக்குகளில் குற்றவாளிகளுக்குத் தண்டனை கடுமையாக்கப்பட்டது.

இந்தியாவில் மரபுவழி வந்த பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், படிநிலை அமைப்புகளும் (Hierarchial set up) பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக இருந்து வந்துள்ளதைப் பெண் இயக்கங்கள் உணர்ந்து, அதை மாற்றும் வழியில் செயல்படத் தொடங்கின. பழமை விரும்பிகளை மற்றும் அதிக கட்டுப்பாடுகளோடு வளர்ந்த மக்களை ஓரளவு மாற்றி, புதிய நோக்கோடும், பரந்த நோக்கோடும் ஆன சமூக அணுகுமுறைகளை அவர்களிடத்து ஏற்படுத்த முற்பட்டன. புராணக் கதைகள், காவியக் கதைகள், நாட்டுப்புறக் கதைகள் போன்றவற்றில் புதிய சிந்தனைகளை இடையிடைத்து மாற்றிச் சொல்வதன் மூலம் பெண்ணியவாதிகள் சமுதாயத்தில் சமயத்தின் வழி ஊறிக் கிடந்த (Relegious Mainstream) பல முக்கிய கொள்கைகளில், பழக்கவழக்கங்களில் ஓரளவு மாற்றம் செய்தனர்.

ஒரு பெண், குழந்தையாய்ப் பிறந்ததிலிருந்து, பூப்படைந்து, திருமணம் நடந்து, தாய்மைப்பேறு பெற்று, வீட்டு வேலைகளையும் வெளி வேலைகளையும் சேர்த்து இரட்டைச் சுமையாய் ஏற்றுக் கவனிப்பது வரை, மரபு ஆதிக்கத்தில் அவள் எந்தெந்த வழிகளில் துன்பப்படுகிறாள் என்பதைப் பெண்ணியவாதிகள் தெரு நாடகங்கள் (Street Plays) மூலம் நடத்திக் காட்டினர். அதன் மூலம் மரபு நிலை மாற்றம் ஒரு பெண்ணுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை எடுத்துரைத்தனர்.

மேலும் அவர்கள், ஷிபிர் (Shibir) என்று அழைக்கப்படும் பெண் முகாம்களைப் பல இடங்களில் தோற்றுவித்தனர். இம் முகாம்கள் மேளா (Mela) என்று அழைக்கப்பட்டன. இவை, அந்தந்த ஊர்களில் கற்பழிப்பை எதிர்த்தும், மனைவி கொடுமைப்படுத்தப்படுவதை எதிர்த்தும், சம ஊதியம்

இல்லாமையை எதிர்த்தும் பாடல்களையும் ஆடல்களையும் நடத்தின.

1985 டிசம்பர் 23 முதல் 26 வரை பம்பாயில் நடந்த 'தேசிய பெண்கள் மாநாட்டில்', இந்தியாவில் பெண்களின் விடுதலை உரிமை என்ற கருத்தரங்கு நடைபெற்றது. இதில் 400க்கும் மேற்பட்ட பெண்கள் குறிப்பாகப் படித்த, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் பங்கேற்றனர். இவர்கள் இளைஞர்களாகவும், அநேகமாக மணம் ஆகாதவர்களாகவும் ஆடை, அணிகலன் அலங்காரங்களில் ஆர்வம் காட்டாதவர்களாகவும், இயல்பான நடத்தை உடையவர்களாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களது முதன்மைக் கொள்கை எந்த ஒரு அமைப்பிலும் படிநிலை போக்குக் கூடாது என்பதாகும். அவர்கள் தங்களை, சகலி (Saheli) சஹியார் (Shahiyar) மைத்திரினி (Maitrini) மனுசி (Manushi) என்று வேறுபட்ட பெயரிட்டு அழைத்துக் கொண்டனர். இவர்களது இயக்கங்கள் ஸ்திரி சக்தி, நாரி சம்த மஞ்ச், விமோசனா, சிங்காரி, மகிளா சங்கர்ஸ் சமிதி போன்ற பெயர்களைக் கொண்டிருந்தன.

எண்பதுகளில் பெண்ணிய இயக்கங்கள் பல்வேறுபட்ட அமைப்புகளாகப் பெருகின. அவற்றைச் சுமார் ஆறு வகையாகப் பிரித்துக் காணலாம்.

1. புரட்சி செய்து பரப்புபவர்கள் மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் தன்னார்வக் குழுக்கள்.

2. தொழிற் சங்கங்கள், விவசாயச் சங்கங்கள், குடியுரிமைச் சங்கங்கள், பழங்குடி மக்கள் சங்கங்கள் போன்றவை.

3. கைவிடப்பட்ட, வேலை வாய்ப்பில்லாத பெண்களுக்கு மறுவாழ்வு அமைத்துக் கொடுக்கும் குழுக்கள்.

4. படித்து, வேலை பார்க்கும் பெண்கள் சங்கங்கள்

5. பெண்கள் தொகுதி அல்லது அரசியல் முன்னணிகள்

6. செயல்பாட்டாளர்கள்.

மேற்கூறிய பிரிவினர்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் மிகுந்து காணப்பட்டன. இடதுசாரியைச் சேர்ந்தவர்கள் தன்னாட்சி உடைய பெண்ணியக் குழுக்களைக் கண்டித்துத்

துண்டுப் பிரசுரங்களும் விளம்பரங்களும் செய்தனர். சோஷலிச் வாதிகள், இடதுசாரிகளின் 'தாங்கள் தான் தலைமை' என்ற வாதத்தை எதிர்த்தனர். தன்னாட்சி உடைய பெண்ணியக் குழுக்கள் யாரையும் எதிர்க்கவும் இல்லை, தவறான பிரச்சாரம் செய்யவும் இல்லை என்றாலும் தனி ஒரு நபருக்குச் சிறப்பு வேண்டும் என்று மும்முரமாக இயங்கின. இப்படி, பெண் அமைப்புகளுக்கிடையேயான கருத்து வேறுபாடு 'சகோதரித் துவம்' வீழ்ச்சியடைய ஒரு காரணமாக அமைந்தது. பெண் அமைப்புகளிடையே ஏற்பட்ட இக்கருத்து வேறுபாடுகள் மாறி வரும் காலக்கட்டத்தில் விளையக் கூடிய இயற்கையின் முரண் பாடுகளே.

பெண் அமைப்புகளின் வளர்ச்சிப் போக்கில் ஏற்பட்ட இத்தகைய தொய்வையும் கடந்து, இந்த 10 ஆண்டுகளில் பெண்களிடையே விழிப்புணர்ச்சி பரவியுள்ளது. 1987இல் இராஜஸ்தானில் 'ரூப்கன்வர்' என்ற இளம் விதவையை உடன் கட்டை ஏற வைத்த நிகழ்ச்சி, நாடு முழுவதிலும் கோப அலையை உண்டாக்கி, எதிர்ப்புக் குரல் கொடுக்க வைத்தது, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். 1988இல் பாட்னாவில் நடந்த 'பெண் விடுதலைக் கருத்தரங்கில்' (Women's Liberation Conference) 100க்கும் மேற்பட்ட உள்ளூர் பெண்களும், பல ஆயிரக் கணக்கான சுற்றுப்புறம் வாழும் பெண்களும் கலந்து கொண் டனர் என்பது பெண் இயக்கங்களின் தொடர் முயற்சியை அடை யாளம் காட்டி நிற்கிறது.

எண்பதுகளின் இறுதியில் பெண் அமைப்புகள் சுற்றுப்புறத் தூய்மை, விரைந்த அறிவியல் முன்னேற்றம்,மதவேறுபாடின்மை, சாதி வேறுபாடின்மை போன்றவற்றை மையக் கருத்தாகக் கொண்டுள்ள இயக்கங்களுடன் தொடர்பு கொண்டு, புதிய பாதையையும் செயற்பாட்டையும் நோக்கிச் சென்று கொண் டிருக்கின்றன.

# பெண்ணியத் துறைச்சொற்கள்

| | | |
|---|---|---|
| Activist | — | செயற்பாட்டாளர் |
| Aggressive | — | போர்க்குணமுடைய |
| Anarcha-Feminism | — | தலைமை வேண்டாப் பெண்ணியம் |
| Androcentric | — | ஆண் மையம் |
| Bi-Sexual | — | ஒத்த பால் சேர்க்கை இரு பாற் சேர்க்கை என்ற இரண்டையும் மேற் கொள்ளுதல் |
| Body Politics | — | உடல் அரசியல் (அ) உடல் சார்பான அதிகாரம் |
| Bra-burning | — | உள்ளாடை எரிப்பு |
| Capitalism | — | முதலாளித்துவம் |
| Compulsory hatero sexuality | — | கட்டாய இருபாற் சேர்க்கை |
| Consciousness raising | — | விழிப்புணர்வூட்டல் |
| Equal Rights | — | சமவுரிமை |
| Feminine Mystique | — | பெண்ணியல்பு புதிர் நிலை |
| Feminism | — | பெண்ணியம் |
| Feminist | — | பெண்ணியவாதி |
| Feminist Criticism | — | பெண்ணியத் திறனாய்வு |
| Feminist Theorist | — | பெண்ணியக் கோட்பாட்டாளர் |
| Gender | — | பாலினம் |
| Gender discrimination | — | பாலினவேறுபாடு |
| Gynocentric | — | பெண் மையம் |
| Hetero sexual | — | இருபாற் சேர்க்கை |
| Hierarchy | — | அதிகாரப் படிநிலை |
| Homo sexual | — | ஆண் பாலினர் கொள்ளும் ஓரினப்புணர்வு |
| Lesbians | — | பெண் ஓரினச் சேர்க்கையாளர் |
| Liberal Feminism | — | தாராளப் பெண்ணியம் |

Male chauvinism — ஆண் மேலாண்மை
Matriarchy — தாய்வழி ஆட்சி
Monogamy — ஒருத்திக்கு ஒருவன் என்ற ஒரு துணை மணம்
Oppression — அடக்குமுறை
Patriarchy — தந்தைவழி ஆட்சி (அ) ஆண்வழி ஆட்சி
Politics — அதிகார அமைப்பு
Power Relationship — அதிகார உறவு முறை
Radical Feminism — தீவிரவாதப் பெண்ணியம்
Reproduction — மறுவுற்பத்தி
Revision — மறுபார்வை
Revolutionary Feminism — புரட்சிப் பெண்ணியம்
Second Sex — இரண்டாம் பால் (அ) மகளிரின் இரண்டாம் இடம்
Second Wave Feminism — பெண்ணியத்தின் இரண்டாம் அலை
Separation — பிரிவினையியம்
Sex — பால்
Sex Discrimination — பால் வேறுபாடு
Sexism — பாலியம்
Sex-roles — பாலியல் பங்கு
Sexual Equality — பாலியல் சமத்துவம்
Sexual harassment — பாலியல் கொடுமை
Sexual Politics — பாலியல் அரசியல் (அ) பால்சார்பு அதிகாரம்
Sexual Slavery — பாலியல் அடிமைத்தனம்
Sexual Violence — பாலியல் வன்முறை
Sisterhood — சகோதரித்துவம்
Socialist Feminism — சமதர்ம பெண்ணியம்
Subjection — தன்னுரிமையற்ற நிலை
Submission — அடங்கிப் போதல் (அ) கீழ்ப்படிதல்
Suffrage — ஓட்டுரிமை
Suffrage Movement — ஓட்டுரிமை கோரும் அமைப்பு
Women's Studies — மகளிரியல்
Zap action — எதிர்ப்புச் செயல்பாடுகள்

# துணை நூற்பட்டியல்

**Baker and others**; *Women Today A Multi disciplinary Approach to Women's Studies*, Brookskole Publishing Company. Monery, 1980.

**Baks, Olive**; *Faces of Feminism*, Basil Black Well Ltd., Oxford, 1986.

**BassnettSusan**; *Feminist Experiences*, Allen and Unwin Boston, 1986.

**Bouchier David**; *The Feminist Challenge* Macmillan Press, London, 1983.

**Bowles Gloria Duelliklein, Renate (Ed.)**; *Theories of Women's Studies*, Routledge and Kegan Paul Inc., London, 1983.

**Charvet, John**; *Feminism*, J. M. Dent and Sons Ltd. London, 1982.

**Desai, Neera & Krishnaraj Maithreyi**; *Women and Society in India*, Ajanta Publications (India) Delhi, 1987.

**Desai, Neera (Ed.)**; *A Decade of Women's Movement in India*, Himalaya Publishing House, Bombay, 1988.

**Ghadially Reham (Ed)**; *Women in Indian Society*, Sage Publications, New Delhi, 1988.

**Hamm Maggie**; *Feminist Criticism*, The Harvested Press Ltd., Great Britain, 1986.

**Kramarae, Cheris & Treichler, Paula A**; *A Feminist Dictionary*, Pandora Press, Bostom, 1985.

**Kumar, Radha**; *Contemporary Indian Feminism*, Feminist Review, No. 33, 1989.

**Mitchel, Julliet**; *What is Feminism?*, Basil Blackwell Ltd. Oxford, 1987.

**Moil Toril**; *Sexual/Texual Politics*, Feminist Literary Theory Methuen and Co., Ltd, London, 1983.

**Rossi, Alice S.**, *The Feminist Papers*, Northeastern University Press, Bostom, 1988.

**Sharma, Radha Krishnan**; *Nationalism, Social Reform and Indian Women*, Janaki Prakashan, Patna, 1981.

**Showalter Elaine**, *Womens Liberation and Literature*.

**Spender Dale**; *Feminist Theorists*, The Women's Press Ltd., London.

**Tuttle, Lisa**; *Encyclopedia of Feminism*, Arrow Books Limited, London, 1986.

# சிறப்புச் சொல்லகராதி
(எண்-பக்க எண்)

அக்டோபர் 17 இயக்கம் 16
அகில உலக வீட்டு வேலைக்கான ஊதியம் 24
அட்ரா பெண் 60
அட் ரைன் ரிச் 33, 60, 90, 96
அதிகாரப் படிநிலை அமைப்பு 57
அந்தரங்கம் பகிரங்கம் 52
அந்தரங்கம் பொதுவானது 96
அமெரிக்கப் பல்கலைக் கழகப் பெண்கள் சங்கம் 12
அமெரிக்கப் பெண்கள் ஒட்டுகின கோரும் சங்கம் 7
அவ்வை இல்லம் 102
அன்னிபெசன்ட் அம்மையார் 100, 102
அனைத்துலக மகளிர் தகவல் தொடர்பு சேவை 33
ஆடைக்குள் மறைந்திருக்கும் கழுதைப் புலி 61
ஆண்டாய்னட்ப்ரௌன் 6
ஆண் மையம் 81
ஆதாரப் பெண்ணியம் 40, 66
ஆபாசத்திற்கு எதிரான பெண்கள் குழு 31
ஆர்க்கிமிடிஸீம் பெண்ணியத் திறனாய்வு குறித்த புதிரும் 92
ஆலிஸ் ரோஸி 13
ஆன் கெய்ட் 26, 56
ஆனிட் கொலோட்னி 90, 91
இங்கிலாந்து இயக்கத்தின் முதல் தேசிய கூட்டம் 17
இந்திய பல்கலைக் கழகப் பெண்கள் ஐக்கியசங்கம் 105
இந்திய மகளிரியல் கல்விக் கூட்டமைப்பு 111
இந்தியாவின் தாயமைப்பு 102
இயற்கைக்கு மாறானது 61
இரண்டாம் ஆண்டின் முக்கிய குறிப்புகள் 21, 75
இரண்டாம் பால் 72
இருபால் சேர்க்கை 51
உலகப் பெண்கள் ஒருங்கமைப்பு 105
உள்ளாடை எரிப்பு 16
எதிர்வு செயற்பாடுகள் 58
எரிகா ஜாங் 26
எல்மான் 89
எல்லன்மோர் 90
எலிசபெத் கேடி ஸ்டான்டன் 6
எலைன் ஷோ வால்டர் 90, 92
ஏன் நீ மனைவியாக இருக்க வேண்டும் 25
ஓரினச் சேர்க்கை உரிமை 58
ஒருத்திக்கு ஒருவன் 55
ஒருவரின் சொந்த அறை 11
ஃபாஸட் நூலகம் 22
ஃபெமினிஸ்ட் ரெவ்யூ 48
க்ளோரியா ஸ்டைனம் 23
கசின்ஸ் எம்.இ. 105
கமலாதேவி சட்டோபாத்யாயா 106
கவலையில்லா விடுதலை முன்னணி 27, 67
கற்பனை உலகு 94
காந்திஜி 106
காயத்ரி ஸிபிவாக் 95
கார்டிப் 19
கிராப்ட் 62
கிரீஸ் 35
கில்பர்ட் இம்லே 61
கிறிஸ்டைன் ராக்போர்ட் 94
குழந்தைகள் காப்பகம் 40

குழந்தை மணம் 98
குறியியல் 94
கென்சிங்க 64
கெனட் பல்கலைக் கழகம் 78
கேட்மில்லட் 26. 33, 59, 60
67, 73, 88
கேதரின் ஸ்டிம்ப்சன் 79
கேரல் ஹேனிஷ் 52
கொஸ்டின்ஸ் ஃபெமினிஸ்ட் 65
சதி 98
சம ஊதியச் சட்டம் 27
சம கல்வி வாய்ப்பு 19
சமதாமப் பெண்ணியம் 37,
42, 43
சமவுரிமைக் கொள்கை 64
சமூக நிலை மாற்றக்
கோட்பாடு 3
சரோஜ் நளினி 99
சரோஜினி நாயுடு 105
சலேகி 109
சஹியார் 113
சார்லட்பன்ச் 3, 50, 79
சான்ரா கில்பர்ட் 95
சிகாகோவெஸ்ட் சைட் குரூப்
15
சிங்காரி 113
சிப்ஹோ 108
சிவப்புக் காலுறையாளர்கள்
16, 30.
சிஸ்விக் 19
சுயமரியாதை இயக்கம் 106
சுலாமித் ஃபயர் ஸ்டோன்
15, 16
சூசன் ஆண்டனி 6
சூசன் குபார் 92, 95
சூசன் லாஃபாலட் 11
சூமாரோ 3
செல்மா ஜேம்ஸ் 24
செனகா பால்ஸ் 6
சேவாசதன் 99
சைமன் டி பெவாயர் 4,59,60.
சோஹோ பதினாறு 31
டிரபால்கர் சதுக்கம் 19
டெட்டாலஸ் 13
டெய்லி மெயில் 24
டெய்லி ஸ்டார் 24
டைகிரேஸ் அட்கின்சன் 16
டோனா ஹாக்ஸஸ்ட் 3
தந்தைவழிச் சமூக இருநெறிச்
சிந்தனை 93
தற்காலப் பாரம்பரிய பெண்
ணியவாதி 38
தனிக் குடும்ப அமைப்பு 46
தனிநபர்களுக்குரியது பொது
வானது 58
தாராளவாதப் பெண்ணியக்கம்
14
தாய்வழிச் சமூக ஆய்வு 37
தி டைம்ஸ் 21
தீவிரவாதப் பெண்ணியக்கம்
14, 48, 57
தெரசா ப்ளிங்டன் 4
தேசிய கத்தோலிக்க பெண்கள்
சங்கம் 12.
தேசிய கருக்கலைப்புப்
போராட்டக் குழு 25
தேசிய பத்திரிகையாளர்
சங்கம் 22
தேசிய பெண்கள் கருக்
கலைப்பு செயற்பாட்டுக்
கழகம் 21
தேசிய மகளிர் அமைப்பு 66
தேசிய மகளிர் அரசியல் குழு
20, 66
தேடல் 23
தேவதாசி முறை 98
தொழிற் கட்சி 27, 95
நக்ஸல் பாரி 107

நார்மன் மெய்லர் 88
நாரி சம்த மஞ்ச் 113
நான்ஸி ப்ரைட் 33
நிலம் வழங்கும் முறை 109
நீட்டா மே ப்ரௌன் 33
ப்ராய்ட் 13, 71
ப்ராய்டி பெமில் 65
ப்ரெட்ரிக் எங்கல்ஸ் 43, 45
ப்ளையிங் 68
பகுத்தறிவு வாகம் 37
பட்வர்தன் 105
பர்தா முறை 98
பர்மிங்ஹாம் பண்பாட்டு
ஆய்வு மையம் 95
பர்மிங்ஹாம் போஸ்ட் 21
பழங்கதை ஆய்வு 96
பார்பரா ஸ்மித் 96
பாரத்ஸ்திரி மகாமண்டல்
100
பால்பேதம் 49
பாலியல் அரசியல் 26, 27,
32, 33, 73, 74, 88
பாலியல் சமத்துவம் 2
பாலியல் தடைகட்டு 55
பாலியல் பாகுபாட்டுத்
தடைச் சட்டம் 27
பாலியல் வன்முறை எதிர்ப்புக்
குழு 34
பிரம்ம சமாஜ் 98
புணர்ச்சிப் பரவசப் புனைகதை
26, 56, 70
புரட்சிப் பெண்ணியம் 29
பெட்டிஃப்ரெடன் 13
பெண் அடக்கு முறை 38
பெண் அடிமைத்துவமும் அவர்
களின் சக்தியும் 24
பெண் எழுத்தாளர்கள்
அமைப்பு 34
பெண் ஓட்டுரிமை 60
பெண் கல்வி 33, 60, 76, 81
பெண்கள் உலகம் 24
பெண்கள் காப்பகம் 40
பெண்கள் கூட்டமைப்பு 98
பெண்களால்ஆன அமைப்பு 14
பெண்களின் கருத்துப் படிவம்
22
பெண்களின் குரல் 22
பெண்களின் சோசலிச அரசியல்
கூட்டமைப்பு 8
பெண்களின் வரலாறு 53, 56
பெண்ணியச் சட்ட மறு
மலர்ச்சிக் கழகம் 65
பெண்ணியல்பு புதிர் நிலை
13, 66, 69, 70
பெண்ணியக் கவிதை சார்ந்த
நோக்கு 91
பெண்ணியத் திறனாய்வாளர்
91
பெண்ணிய நூல்கள் 69
பெண்ணியப் புரட்சி 29
பெண்ணுக்குச் சொத்துரிமை 60
பெண்ணுரிமைக் கொள்கை
நிறுவீடு 8, 38, 60, 69
பெண்மேலாண்மை 50
பெர்வின் 105
பெரியார் 106
பெவாயர் 65, 73, 93
பேகம் ஹமித் அலி 106
மகளிர் புத்தக வெளியீட்
டாளர் சங்கங்கள் 34
மகளிர் வங்கி 66
மகளிரியல் ஆய்வு மையம் 82
மகிளா சங்கர்ஸ் சமிதி 113
மகிளா சமிதி 99
மதாய் 105
மரியரோஸா டெல்லா
கோஸ்டா 24
மறுவாழ்வு மையம் 40

மனித மையம் 81
மாண்டேகு 101
மார்க்சு 45
மார்க்ரெட் ஃபுல்லர் 62
மாவோ 109
மான்செஸ்டர் 31
மிசா 110
மிதன் டாட்டா 105
மிரா ஜெலன் 91
முத்துலெட்சுமி 105, 106
முதல் ஆண்டின் குறிப்புகள் 75
முழு நிறைவான இல்லம் 47
மூன்றாம் ஆண்டின் குறிப்புகள் 75
மேக்கிஹம் 86
மேர்லின் ப்ரென்சு 33
மேரி இவான்ஸ் 73
மேரி எல்மான் 88
மேரி டாலி 95
மேரி மிக்கின்டாஷ் 46
மேரிவோல்ஸ்டன் கிராப்ட் 58, 60
மேரி வோல்ஸ்டன் கிராப்டின் நினைவுகள் 62
மேனா 112
மைக்கேல் பேரப் 95
மோயர்ஸ் 92
லண்டன் மகளிர் விடுதலைப் பயிற்சிப் பட்டறை 19
லாரன்ஸ் டி.ஏ. 88
லில்லியன் ராபின்சன் 95
லீட்ஸ் 31
லெஸ்பியன் 50, 51
லுக்கிரிடியா மாட் 6
லூசி ஸ்டோன் 6
ராணி எலிசபெத் 12
ராமாபாய் ராணடே 99
ராய், எஸ். என் 106
ராஜ்குமாரி அமிர்த்கஷுர் 106
ரீடாமே ப்ரவுன் 50
ரூப் கன்வர் 144
ரேஸ்ரேசே 1
ரோட் 105
ரோஸலிண்ட் டெல்மார் 4
விபூதிபட்டேல் 107
விமோசனா 113
வில்லியம காட்வின் 61
விஜயலட்சுமி பண்டிட் 106
வீட்டு வேலைக்கான ஊதியம் 24
வெர்ஜினியா வுல்ப் 11
வெள்ளை அறிக்கை 25
வெஸ்ட் மின்ஸ்டர் 63
ஜான் எப். கென்னடி 12
ஜான் டூவர்ட் மில் 58, 62, 63
ஜினராஜதாஸ் 105
ஜீசேல் ஹலிமி 65
ஜுன் ஜெனட் 88
ஜலியட் மிட்சல் 47
ஜுலியா ஹிரிஸ்டேவ 95
ஜெர்மெய்ன் க்ரீர் 26
ஜோதி சங்கம் 105
ஜோப்ரிமேன் 15
ஸ்ரீ சொரோஸ் திரியன் மண்டல் 99
ஸ்ரீமதி பத்ரம் ருத்ரம் அநாதாஸ்ரமம் 89
ஷிபிர் 112
ஷீலா ரோபோத்தம் 60
ஸ்சப்ரேஜ் பெடிஷன் 64
ஸ்திரி சக்தி 113
ஸ்திரி தர்மா 101
ஸ்பேர் ரிப் 22
ஸ்ரு 22
ஹபியா 34
ஹவுஸ் ஆப் காமன்ஸ் 63
ஹீராபாய் டாட்டா 105
ஹெரியட் டெய்லர் 64
ஹெலன் சிக்ஸஸ் 93, 95
ஷென்றி மில்லர் 88

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சி.ஐ.டி. வளாகம், தரமணி (அஞ்சல்), சென்னை-600113
தொலைபேசி : 2350992

**கலாநிலையம் டி. என். சேஷாசலம் அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்**

இலக்கிய இதழ்வழித் தமிழ் வளர்த்த பெருந்தகை வழக்கறிஞர் டி. என். சேஷாசலம் அவர்களின் நினைவுப் போற்றுதலாக, அன்னாரின் புதல்வர் திரு. பரணீதரன் (மெரீனா) அவர்களால் 1987இல் தோற்றுவிக்கப்பட்டது. கலா நிலையம் இதழ்களும், இலக்கியக் கோட்பாடுகளுமே இதன் ஆய்வுக்களமாகின்றன.

**இலக்கியச் சிந்தனையாளர் டி. என். சேஷாசலம்**

முனைவர் அ. நா. பெருமாள், செப். 1992; VII+72; ரூ. 12.

கலா நிலையம் டி. என். சேஷாசலம் அவர்களின் தமிழ்ப் புலமையையும் ஆய்வுத் திறனையும் வெளிப்படுத்தும் நூல்.

**அழகியல்**

முனைவர் மீனாட்சி முருகரத்தனம்; டிச. 1992; VIII+58; ரூ. 10.

இலக்கியம், இலக்கியக் கலையாக இலங்க வேண்டுமா அல்லது அறிவியலாக அறிவூட்ட வேண்டுமா எனும் திறனாய்வாளர் விவாதங்களுக்கு விடைகாண முனைந்துள்ளது இந்நூல். மேல்நாட்டினர், வடமொழியாளர் மற்றும் தமிழர் எண்ணங்களை எடுத்துரைக்கின்றது.

**தமிழும் தெலுங்கும்**

முனைவர் தா. சா. மாணிக்கம்; செப். 1994; VI+83; ரூ. 15.

தமிழர், தெலுங்கர் இடையில் நிலவும் மொழி, அரசியல் இலக்கிய உறவுகளை, வரலாற்றோடு இணைத்து ஒப்பாய்வு செய்யும் நூல். இரு மொழிகளின் ஒப்புமைச் சொற்களின் அகர வரிசையும் உண்டு.